
விலை ரூபா 20.00



பேச்சுக்கு ஈரான் தயார் 10



துயர் துடைத்தார் ஜெயா 11



2050 இல் பயணம் செய்யலாம் 12



மணி ஓசை..! 15


www.onlineuthayan.com

பக்கங்கள்: 28

# உதயன்

சுடர் 27
கதிர் 41

வள்ளுவர் ஆண்டு 2042 மார்கழி 21 வெள்ளிக்கிழமை (06/01/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


### இ.தொ.காவை கூட்டமைப்பு சந்திக்கும்

தீர்வுத்திட்ட விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று விரைவில் இடம்பெறவுள்ளது எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. இறுதியானதொரு தீர்வுத்திட்டம் தொடர்பில் மலையகத் தமிழ்க் கட்சிகளின் அபிலாஷைகளையும் கேட்டறிவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

### ஆபிரிக்க காங்கிரஸின் நூற்றாண்டு விழாவில் கூட்டமைப்பு

ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் நூற்றாண்டு விழாவில் பங்கேற்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தென்னாபிரிக்கா பயணமாகியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரே தென்னாபிரிக்கா சென்றுள்ளனர்.

### மு.காவுக்குள் கருத்து முரண்பாடு இல்லை

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் கருத்து முரண்பாடு கிடையாது. இந்த அதிகாரங்கள் தேவை என்ற நிலைப்பாட்டில்தான் முஸ்லிம் காங்கிரஸ் உள்ளது என்று அக்கட்சியின் செயலாளர் நாயகமும் எம்.பியுமான எம்.ரி.ஹஸன் அலி நேற்றுத் தெரிவித்தார்.

### பிரதிப் பிரதம கொறடா பதவி பறிபோனது

எதிர்க்கட்சிப் பிரதிப் பிரதம கொறடா பதவியிலிருந்து தயாசிறி ஜயசேகர உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளார் என ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்நிலையில் அஜித்.பி.பெரேரா புதிய எதிர்க்கட்சி பிரதிக் கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரியவருகிறது. இதேவேளை, தயாசிறி ஜயசேகர தனது பதவியில் சிறப்பாகச் செயற்படுகையில் கட்சியின் ஆலோசனைக்குழு எடுத்துள்ள தீர்மானம் குறித்து கவலையடைவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். தான் அவர் சார்பில் பல விடயங்களை எடுத்துக் கூறினாலும் ஆலோசனைக் குழு அதனைப் பொருட்படுத்தாமல் செயற்பட்டது எனவும் அது தவறான விடயம் எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

# தீர்வுக்கு அரசு பின்னடிப்பு தமிழர் மத்தியில் அதிருப்தி

## பிரிட்டிஷ் எம்.பியிடம் யாழ். ஆயர் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,ஜனவரி 6

காணி பொலிஸ் அதிகாரங்களுடன் கூடியதாக நாட்டிலுள்ள சகல இன மக்களையும் பாரபட்சமின்றி நடத்தக் கூடிய அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். இவ்வாறான அரசியல் தீர்வை அரசு முன்னெடுக்கப் பின்னடிக்கின்றமை தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நேற்று தம்மைச் சந்தித்த பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் வார்ட்டனிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

போரின் பின்னர் குடாநாட்டின் தற்போதைய நிலைமை , தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்பு, அரசு முன்னெடுக்கும் அபிவிருத்தி, திட்டங்கள், மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் தொடர்பாக பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஆயர் விளக்கிக் கூறினார்.

குறிப்பாக போரின் பின்னர் வடக்கில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இடம்பெற்று வருகிற போதும் தமிழ் மக்கள் மத்தியில் சந்தோஷம் இல்லை.

தமிழ் மக்கள் என்ன நோக்கத்திற்காக விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தார்களோ அந்த நோக்கத்தை அரசு இன்னும் நிறைவேற்றி வைக்கவில்லை. இதுவே தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மகிழ்ச்சி இன்மைக்கான காரணமாகும்.

நாட்டிலுள்ள சகல இன மக்களும் பாரபட்சமின்றி நடத்தப்பட வேண்டும். அத்துடன்வடக்கு, கிழக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் கூடிய அரசியல் தீர்வை அரசு முன்வைப்பது முக்கியமானது.

அரசியல் தீர்வுக்காகத் தமிழத் தேசியகூட்டமைப்பு, அரசுடன் தொடர்ந்து பேசும் எனக் கூறிகிறது. அது வரவேற்கக் கூடியது. மிகச் சந்தோஷமான விடய

27

### முஸ்லிம்களின் அபிலாஷைகளையும் உள்ளடக்கியே தீர்வு

அம்பாறை, ஜன.06

வடக்கு-கிழக்கு மாகாணம் முஸ்லிம் மக்களுக்கும் சொந்தமானது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த வகையில் முஸ்லிம்களின் அரசியல் அபிலாஷைகளை உள்ளடக்கியே எமது அரசியல் தீர்வு அமையும். அப்பொழுதுதான் வடக்கு-கிழக்கு இணைப்பு சாத்தியமாவதுடன், நாம் எதிர் நோக்கி நிற்கும் இலக்குகளையும் அடைய முடியும்.

இவ்வாறு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கூறினார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த காரைதீவு பிரதேச சபையில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காரைதீவுப் பிரதேச சபையின் தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள், பிரதேச தமிழரசுக்கட்சி முக்கியஸ் தர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேந்திரன் ஆகியோரும்

27

## பிரிட்டிஷ் எம்.பி. ஆர்வம்

யாழ்ப்பாணம், ஜன.06

புலம்பெயர்ந்தவர்களிடம் தமிழ் மக்கள் என்ன எதிர்பார்க்கின்றார்கள் என்பதை யாழ்.ஆயரிடம் அறிவதில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்வம் காட்டியுள்ளார்.

புலம்பெயர் தமிழ் மக்கள் தொடர்பாக அதிகம் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் வார்டன், அந்த மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று யாழ் ஆயரிடம் வினாவினார்.

தமிழ் மக்கள் விருப்புடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை அரசு முன்வைக்க வேண்டும் எனபதே புலம்பெயர்ந்த மக்களின் அவா. அந்த விருப்பம், அவா பொருத்தமானவையே.

அதே சமயம், புலம்பெயர் தமிழர்கள் அரசுக்கு வெறுப்பு, அவநம்பிக்கையை ஏற்படுத்தாமல் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க உதவவேண்டும் அதுவே தாயக மக்களின் எதிர்பார்ப்பு என்று பதிலளித்தார் யாழ் ஆயர். (ஒ-14)

## பிரிட்டிஷாரைக் கவர்ந்த 'உதயன்'!



பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் நேற்று யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாருடன் யாழ்ப்பாணத்தை வலம் வந்தனர். அவ்வேளை மக்களைச் சந்தித்து உரையாடினர். அவர்கள் யாழ் .பஸ் நிலையத்தில் வைத்து 'உதயன்' பத்திரிகையை வாங்கி அரச அதிபர் மூலம் சமகால விடயங்களைக் கேட்டறிந்து கொண்டனர். (ஒ)

## அடுத்தவாரம் வருகிறது அமெ. உயர்மட்டக் குழு

கொழும்பு, ஜன.6

அமெரிக்க உயர்மட்டக் குழு ஒன்று அவசர பயணமொன்றை மேற்கொண்டு அடுத்த வார நடுப்பகுதியில் இலங்கை வருகின்றது. இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பு வருவதற்கு முன்பாக இந்தக் குழுவினர் வரவுள்ளனர்.

அரசுக்கும், கூட்டமைப்புக்கும் இடையிலான தீர்வுத்திட்டப் பேச்சு இழுபறி நிலையில் பயணிக்கும் சந்தர்ப்பத்தில், இந்த இரு நாடுகளினதும் உயர்மட்ட குழுக்கள் வருகை தருகின்றன.

அமெரிக்க அரசின்

27

## தமிழ்க் கூட்டமைப்புடன் அரசு மென்போக்கு

கொழும்பு, ஜன.6

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா எதிர்வரும் 16 ஆம் திகதி இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள பயணம் மற்றும் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சுகளில் மென்போக்கை கடைப்பிடிக்க அரசு முடிவு செய்துள்ளது எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று அரசின் அதிகாரபூர்வ இணையத்தளத்திடம், கருத்து வெளியிட்டுள்ள ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, காணி, பொலிஸ்

27

## பொலிஸ்மா அதிபர் பணிப்பிலேயே இரும்புகள் கடத்தல் முறியடிப்பு

### சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் முறைப்பாட்டை அடுத்து

யாழ்ப்பாணம், ஜன.6

உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள தமது தொழிற்சாலையில் உள்ள இயந்திரங்கள் வெட்டிக் கடத்தப்படுவதாக காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சிசிர ஜினோத்திரா பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்ததையடுத்தே , காங்கேசன்துறையில் இரும்பினைக் கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

காங்கேசன் துறைச் சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள

27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்சேகாவை விடுவிக்க அமைச்சர் விமல் வலியுறுத்து

கொழும்பு, ஜன.6

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படவேண்டும் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் விடுதலையை வலியுறுத்துபவர்களே, அவர் உள்ளேயே இருக்கவேண்டும் என அதிகளவில் விரும்புகின்றனர் என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

தனது கணவர் மீது அந்த அம்மையாருக்கு அவ்வளவு அக்கறையிருக்குமானால், கணவரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக் கலாம் தானே என்றும் அவர் கூறியுள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அமைச்சர் வழங்கிய செவ்வியில், சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகா, நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றிருப்பாராயின் முதல் 24 மணித்தியாலங்களுக்குள் கொலை செய்யப்படவேண்டியவர்களின் பட்டியலில் நானும் இடம்பெற்றிருப்பேன்.

எது எப்படியிருப்பினும், அந்த நபரை ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யவேண்டும் என்பதுதான் எனது கருத்தாகும். சரத் பொன்சேகா மீதுள்ள அன்பின் காரணமாக நான் இந்தக் கருத்தைக் கூறவில்லை.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோருபவர்கள்தான் அவர் உள்ளே இருப்பதை அதிகளவில் விரும்புகின்றனர். விடுதலை செய்யுமாறு கோருவதெல்லாம் பொய் நாடகமாகும்.

அந்த அம்மையாருக்குத் தனது கணவர் மீது அவ்வளவு அக்கறையிருந்தால் கணவரை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கலாம் தானே? ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்திலேயே அவர் பொதுமன்னிப்புக் குறித்து பரிசீலிக்கலாம். எந்த ஒரு கைதியும் அவ்வாறு விடுதலையாவதற்கு ஆசைப்படுவார் அல்லவா?

கைதிகளின் உறவுகள் ஜனாதிபதிக்குத் தமது உறவுகளை விடுதலை செய்யுமாறு கடிதம் எழுதுகின்றனர். அப்படியானால், அந்த அம்மையார் கோரிக்கை விடுக்காதிருப்பது ஏன்?

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் புதிய எதிரி ஒருவர் உருவாகின்றார்.

ரணிலும், டிலான் அலஸும் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கிடைத்த நிதிக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக ஒருவருக்கொருவர் கேள்விக்கணைகளைத் தொடுக்கின்றனர். ஜே.வி.பியுடன் எவ்வாறாவது ரணில் தூண்டிலைப் போட்டுக் கொள்வார்.

இவ்வாறான அனைத்துச் சம்பவங்களும் அரசியலில் இடம்பெறவேண்டுமானால் சரத் பொன்சேகா விடுதலையாக வேண்டும். அவர் உள்ளே இருக்கும்வரை இவை ஒன்றும் நடைபெறமாட்டாது.

அரசியல் ரீதியில் பார்க்கப்போனால் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதுதான் நல்லதென்று நான் கருதுகிறேன் எனக் கூறியுள்ளார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

## பிறந்த நாள் கொண்டாடவும் படையினரின் அனுமதி தேவையாம்

பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கும் பாதுகாப்பு படையினரின் அனுமதிபெற வேண்டுமாம். வீட்டுக்காரரை முகாமுக்கு அழைத்த படையினர் இதுகுறித்து அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

மானிப்பாய் கோவில் பற்றுப் பகுதியில் உள்ள ஓர் அந்தணர் வீட்டில் இடம்பெற்ற 21ஆவது பிறந்த தினக் கொண்டாட்டம் அமைதியான முறையில் கொண்டாடப்பட்டது. இதன் போது வீட்டுக்குள் பாடல் ஒலிக்க விடப்பட்டது.

சற்று தூரத்தில் மினி முகாமிலிருந்த பாதுகாப்புப் படையினர் வீட்டு உரிமையாளரான அந்தணரை முகாமுக்கு அழைத்து ஆடம்பரமாக பிறந்தநாள் கொண்டாட வேண்டுமென்றால் பாதுகாப்புப் படையினரிடம் அனுமதி பெறவேண்டுமென அறிவுறுத்தியுள்ளனர்.

நாட்டில் சமாதானம் ஏற்பட்டு சிவில் நிர்வாகம் படிப்படியாக அமுல்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இவ் வேளையில் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கும் பாதுகாப்புப் படையினரின் அனுமதி பெற வேண்டுமென்று படையினரால் தெரிவிக்கப்பட்ட விடயம் பொது மக்கள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. (த-115)

## கோடி ரூபா செலவில் கட்டடம் கோடியில் நின்று குருதி பெறவா?

### வைத்தியசாலை ஊழியர்கள் விசனம்



யாழ்ப்பாணம், ஜன.06

யாழ். போதனா வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இயங்கி வரும் இரத்த வங்கியிலிருந்து, விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களுக்கென குருதியை எடுத்துச் செல்வதில் வைத்தியசாலைச் சிற்றூழியர்கள் பெரும் அவலங்களைச் சந்திப்பதாகவும் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இக்கட்டடத்தின் பின்புறமாகப் பிரத்தியேகமாக ஜன்னல் போன்று அமைக்கப்பட்ட பகுதியினூடாகவே குருதிப் பைக்கற்றுக்கள் வைத்தியசாலை ஊழியர்களிடம் வழங்கப்படுகின்றன. கட்டடத்தின் இந்தப் பின்புறச் சுற்றாடல் மிக மோசமாகக் காணப்படுகிறது. நுளம்புகளுக்கும் அங்கு குறைவில்லை. மழைக்கு ஒதுங்குவதற்குக் கூட இடமில்லை. மேலே கூரை எதுவுமில்லை. தரைப் பகுதி மேடும் பள்ளமுமாக முற்கம்பிகள் உள்ளிட்ட கழிவுகளால் நிறைந்துள்ளன என ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தவிர கட்டடம் புதிதாக நிர்மானிக்கப்பட்டிருப்பினும் கட்டடத்தின் பின்புறமாகவே குருதி எடுத்துச் செல்லும் பகுதியை அமைத்திருக்கிறார்கள். இந்தப் பகுதி கழிவு வாய்க்கால்களை அருகே கொண்டதாகக் காணப்படுகிறது. இதே பகுதியில் தான் கண் நோயாளர்களுக்கான மலசல கூடமும் அமைந்துள்ளது. அதனால் துர்நாற்றத்துக்கு மத்தியிலேயே அங்கு சென்று குருதியை எடுத்துச்செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே குருதியை எடுத்துச் செல்ல மாற்று ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என ஊழியர்கள் கோரியுள்ளனர்.

இந்த விடயங்கள் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜாவிடம் கேட்டபோது,

கட்டடத்தின் பின்புறமாகக் குருதி எடுத்துச் செல்லும் பிரத்தியேக இடத்தைத் தெரிவு செய்துள்ளனர். அங்கு ஊழியர்கள் மழையில் நனையாமல் இருக்க இரண்டு மாதங்களுக்குள் கூரை அமைக்கப்பட்டுவிடும். அந்தப் பகுதியில் முட்கம்பிகள் அதிகமாகக் காணப்படுவதுடன் புதைந்தும் உள்ளன. முன்னர் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக அதிகளவான முட்கம்பிகள் அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கலாம். அதனாலேயே சுற்றாடல் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. தவிர அந்தப் பகுதியைத் துப்புரவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டு மாத காலத்தினுள் இவையெல்லாம் சீர்ப்படுத்தப்பட்டு விடும் - என்று கூறினார். (த-4-17-288)

## சிசுவை கிணற்றில் வீசிய தாய் தலைமறைவு

கிளிநொச்சி விசுவமடுவில் பிறந்த சிசுவை கல்லுடன் கட்டி கிணற்றுக்குள் போட்டபின் தாயும்,ஏனைய பிள்ளைகளும் தலைமறைவாகியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது. குறித்ததாய் சிசு பிறந்தவுடன் அதனை துணியால் மூடி கல்லுடன்சேர்த்துகட்டி கிணற்றினுள் போட்டுவிட்டு இரவோடு இரவாக தனது 5 பிள்ளைகளுடன் தலைமறைவாகியுள்ளார். அயலவர்கள் சந்தேகத்துதின் காரணமாக கிளிநொச்சி பொலிஸாரிற்கு தகவல் கொடுத்துள்ளனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார்கிணற்றைச் சோதனையிட்ட போது சிசு சடலமாக மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட சிசு கிளிநொச்சி வைத் தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. தலைமறைவாகிய தாயையும், 5பிள்ளைகளையும் பொலிஸார் தேடி வருகின்றனர்.குறித்த பெண்ணின் கணவர் போரின் போது இறந்து விட்டதாக தெரியவருகிறது. (10-15)

# மலையகத் தலைமைகள் கருத்துக்கு தமிழ் கூட்டமைப்பு வரவேற்பு

கொழும்பு, ஜன.6

பொலிஸ், காணி அதிகாரங்கள் தொடர்பில் மலையகத் தமிழ் அரசியல் பிரமுகர்கள் வெளியிட்டுள்ள கருத்துகளை வரவேற்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தீர்வு விடயத்தில் சிறுபான்மையினக் கட்சிகள் ஒருமித்த மனதுடன், நோக்குடன் செயற்பட்டால் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு அது மாபெரும் உந்து சக்தியாக அமையும் என்றும் சுட்டிக்காட் டியுள்ளது.

**தீர்வு விடயத்தில் சிறுபான்மையினக் கட்சிகள் ஒருமித்த மனதுடன், நோக்குடன் செயற்பட்டால் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு அது மாபெரும் உந்து சக்தியாக அமையும்**

மாகாணசபைகளுக்கு கட்டாயம் பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என மலையக அரசியல் வாதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சிறுபான்மையினக் கட்சிகளின் ஒற்றுமை இனப்பிரச்சினையில் சாதகமானதொரு தாக்கத்தை ஏற்படுத்தும்.

மலையகத் தமிழ் அரசியல் பிரமுகர்கள் வெளியிட்டுள்ள கருத்து வரவேற்கத்தக்கது. பிரச்சினை என்று வரும்போது நாம் அனைவரும் ஒருமித்து செயற்பட்டால்தான் அதனைத் தீர்க்க முடியும் எனக் கூறினார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

# இலங்கையர் பட்டப்படிப்புக்கு இந்தியாவில் புலமைப்பரிசில்

இலங்கை பிரஜைகளுக்காக நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பட்டப்படிப்பிற்கான நாற்பது புலமைப்பரிசில்களும், சமவாய நாடுகள் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் ஐந்து புலமைப்பரிசில்களும் மற்றும் IQR - ARC புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இலங்கைப் பிரஜைகளுக்காக மேல் பட்டப்படிப்பிற்கான இரண்டு புலமைப் பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன என இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இது குறித்து தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இவை வேறுபட்ட பல இந்திய பல்கலைக்கழகங்களில் 2012 - 2013ஆம் ஆண்டுகளுக்கான கற்கைநெறிகளுக்கானவையாகும்.

இந்தியாவின் பல பல்கலைக்கழகங்களில் வேறுபட்ட பட்டப்படிப்பு மற்றும் மேல் பட்டப்படிப்புகளுக்காக இந்தியத் தூதரகம், இலங்கை அரச உயர்கல்வி அமைச்சின் ஆலோசனையுடன் புலமைப்பரிசிலுக்குத் தகுதியான இளம் இலங்கைப் பிரஜைகளைத் தேர்ந்தெடுக்கும். இதற்கான விண்ணப்பங்களைத் தகுதியான பரீட்சார்த்திகளிடமிருந்து இலங்கை உயர்கல்வி அமைச்சு கோரியுள்ளது. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டிய கடைசித் திகதி 2012 ஜனவரி 27ஆம் திகதியாகும்.

இந்தப் புலமைப்பரிசிலானது, முழு கற்கைநெறிக்குமான முழுக்கட்டணங்களையும், மாதந்தோறும் செலவுக்கான உதவித்தொகையையும் உள்ளடக்கியதாகும். அத்துடன், தங்குமிடத்துக்கான செலவுப்படி, வருடாந்தம் புத்தக மற்றும் எழுதுபொருட்கள் ஆகியவற்றின் கொள்வனவுக்கான உதவித்தொகை ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

இவற்றுடன் ஐஇஇகீ புலமைப்பரிசில்தாரர்கள் உடல்நலப் பராமரிப்பு வசதிகள், முதல் வகுப்பு ரயில் பயணக் கட்டணம், நாட்டின் பல பாகங்களுக்கும் கல்விச் சுற்றுலாவுக்கான வருடாந்த உதவிப்பணம், அத்துடன் இன்னும் பல வசதிகளுக்கும் உரித்துடையோராவர்.

மேற்படி புலமைப்பரிசில் பற்றிய ஏனைய விவரங்களும் விண்ணப்பப்படிவங்களும், உயர்கல்வி அமைச்சின் இணையதளமான www.mohe.gov.lk மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடும்பஸ்தரைக் கடத்தி 125,000 ரூபா அபகரிப்பு

தென்மராட்சி, ஜன.06

சாவகச்சேரி வடக்குப் பகுதி குடும்பஸ்தர் ஒருவர் இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டதுடன், அவர் வைத்திருந்த ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவினை அபகரித்துச் சென்றதாகக் கூறப்படும் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரி வங்கி ஒன்றில் தங்க நகைகள் அடகு வைத்து பணம் பெற்றுக்கொண்டு குடும்பஸ்தர் வீடு திரும்புகையிலேயே இவ்வாறு கடத்தப்பட்டு தாக்கப்பட்ட பின்னர் அவரிடம் இருந்த பணம் அபகரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்காண இதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை லோகேஸ்வரன் (வயது-36) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகிறார். சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-207)

# கொள்ளைக் கும்பலை மடக்கிய பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜன.06

வருடப்பிறப்பன்று நள்ளிரவில் சாவகச்சேரியில் உள்ள வீடொன்றினுள் புகுந்து 20 பவுண் நகை, 35 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைத் திருடிய கும்பலொன்றைச் சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுப் பிற்பகல் கைது செய்தனர்.

திருட்டில் ஈடுபட்ட பிரதான நபர்கள் மூவர், அதற்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட மூன்று பேரும், திருடிய நகைகளில் சங்கிலி ஒன்றை உருக்கி வார்த்த குற்றத்துக்காக யாழ். நகர்ப்பகுதி நகைத் தொழிலாளி ஒருவருமாக ஏழு பேர் கொண்ட கும்பலை பொலிஸார் நேற்றுப் பிற்பகல் கைது செய்தனர்.

சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள வீடொன்றிலேயே கடந்த முதலாம் திகதி இந்தக் கொள்ளை இடம்பெற்றது. இதன்போது 12 பவுண் நிறையுடைய தாலிக்கொடி, 5 பவுண் சங்கிலி, 2 பவுண் முத்துமாலை, 1 பவுண் காப்பு என்பவற்றோடு 35 ஆயிரம் ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டிருந்தது.

இதுபற்றி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கொள்ளையில் ஈடுபட்ட பிரதான மூவரில் நெல்லியடியைச் சேர்ந்த ஆஷா என்பவரும், ஊர்காவற்றுறையைச் சேர்ந்த றஜிக்குமார் என்பவரும், சாவகச்சேரி கச்சாயைச் சேர்ந்த றஜி என்பவரும் உள்ளடங்குகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரி.இந்திரனின் உத்தரவுக்கமைய பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி புஸ்பகுமார, ஜயந்த அத்துக்கோறள மற்றும் கவியரசன் ஆகியோர் அடங்கிய குழு இந்தக் கொள்ளைக் கும்பலை மடக்கியது.

இவர்களை இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதிகாரப் பகிர்வு; அரசு சுழியோட்டம்

எழுபத்தேழு சதவீதமான சிங்கள அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்த முயலும் ஜனாதிபதி, இருபத்து மூன்று சதவீத மான தமிழ் அரசியல்வாதிகளின் அபிலாசைகளையும் எண்ணங்களையும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெறும் இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கி நடைபெறும் பேச்சுவார்த்தை என்ற நோயின் நிலை, சணம் பித்தம் சணம் வாதம் என மாறி வரும் பின்னணியில், மலையக அரசியல் தலைவர்கள் மேற்கண்ட கருத்தை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்க முடியாது என்று அரச தரப்பு அடம்பிடித்து வரும் இப்போதைய சந்தர்ப்பத்தில், மலையக அரசியல் கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் கவனத்தை ஈர்த்துள்ளன.

மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறைப் பொறுப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.இராதாகிருஷ்ணன், மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் பட்சத்திலேயே, அரசியல் தீர்வு ஒன்றை நோக்கி நகரமுடியும். அதன் ஊடாகவே முழுமையான தீர்வை அடையவும் வழிபிறக்கும் என்று அர்த்தபுஷ்டியுடன் வலியுறுத்தி உள்ளார்.

மாகாண சபைகளுக்குக் காணி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாத தீர்வு ஒன்று வகுக்கப்பட்டால், மீண்டும் பல பிரச்சினைகள் முகிழ்ந்தெழும் என்று சுட்டிக்காட்டியுள்ளார் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப.திகாம்பரம். மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதே தமது தனிப்பட்ட கருத்து என்றும் அவர் வெளிப்படுத்தி உள்ளார்.

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால், அத்தகைய தீர்வால் எவ்வித பயனுமில்லை. அரசமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது திருத்தத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்த அரசமைப்புத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டுள்ள அரசு, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மறுப்பது ஏன்? என்று கேட்டுள்ளார் ஊவா மாகாண சபை உறுப்பினரும் இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான எஸ்.வேலாயுதம்.

வெளிநாடுகளில் மாநிலங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அங்குள்ள நிர்வாகங்கள் வெகு சுமுகமாக இயங்குகின்றன. இங்கும் அதனை ஏற்படுத்தினால் நாட்டில் அமைதியை முழு அளவில் உண்டாக்குவதற்கு வழி பிறக்கும் - என்கிறார் மத்திய மாகாண சபை உறுப்பினர் கே.இராஜரட்ணம்.

மலையக அரசியல் தலைவர்கள் பலரும், காணி, பொலிஸ் அதிகாரங்கள் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் ஒத்த கருத்துடையவர்களாகவே உள்ளனர்.

முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட உச்சமட்ட அதிகாரப் பகிர்வு அவசியம் என்று வலியுறுத்தி இருந்தமையை இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக் காட்டி இருந்தோம்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் தொடங்கிய பேச்சுவார்த்தை, இதுவரை பதினெட்டுத் தடவைகள் நடைபெற்று இப்போது சேடம் இழுக்கும் நிலைக்கு வந்திருப்பது ஒன்றும் புதிய சங்கதி அல்ல. போர்க் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல்வதற்கு மாற்றீடாக அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தையை தமிழர் தரப்புடன் தொடங்கியது என்பது வெறும் இரகசியமும் அல்ல.

ஆனால், காலத்தை வாங்கும் ஒரு தந்திர முயற்சியாக அது இப்போது மாறியுள்ளது என்பதே இன்றைய தள நிலைமை ஆகும். இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களால் மட்டுமன்றி இந்தியா மற்றும் சர்வதேச நாடுகள் இப்பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டபோது பலவகையான எதிர்பார்ப்புகளுடன் இருந்தன என்பதும் குறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் அந்த எதிர்பார்ப்புகளை கவிழ்த்துக் கொட்டி விடும் இலக்குடன் அரசு செயற்படுவதாகவே இப்போது அனுமானிக்க முடிகிறது.

நாட்டின் அரசமைப்புச் சட்டத்துக்கான 13ஆவது திருத்தத்தில் வகை செய்யப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்று, வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அரசு குத்துநிலை எடுத்துள்ளமை, சிறுபான்மையினர் தமக்குரிய உரிமைகளுடன் இந்நாட்டில் வாழக்கூடாது என்ற அதன் அரசியல் கோட்பாட்டை உள்ளங்கை நெல்லிக்கனி போல் காட்டுகிறது!

கெஞ்சினால் மிஞ்சுவர், மிஞ்சினால் கெஞ்சுவர் என்ற முதுமொழியைக் கையில் எடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வெருட்டியும் மிரட்டியும் பார்க்கிறது அரசு.

ஆனால் அமைச்சர் திஸ்ஸ விதாரண, அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா, அமைச்சர் டியூ குணசேகரா போன்றோர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அதிகாரப் பகிர்வு அவசியம் என்று கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனினும் அவர்களின் கருத்துக்கள் அரசின் தலைக்குள் ஏறுமா என்பது சந்தேகமாகவே உள்ளது. ஆயினும் வடக்கு, கிழக்கு, மலையகத் தமிழ் அரசியல் தலைவர்களும், முஸ்லிம் அரசியல் தலைவர்களும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்பத் தொடங்கியுள்ளமை அரசாங்கத்தை ஒரு கணம் சிந்திக்கத் தூண்டக்கூடும் என்று நினைப்பதனைப் பின்னடிக்க வைக்கிறது.

ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, விமல் வீரவன்சவின் மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் பேரினவாதத்தில் ஊறித் திளைக்கும் - தனது முன்னரங்க ஆதரவு வள ஊற்றுக்களை முன்னிலைப்படுத்தி, அதிகாரப் பகிர்வுக்கான தடைக் கம்பங்களை அரசு நடும் என்று எதிர்பார்ப்பது தவறன்று.

அத்தகைய ஒரு சுழியோட்டக் காட்சியில், அதிகாரப் பகிர்வு தொடர்பான ஏனையோரின் ஆக்கபூர்வமான கருத்துக்களும் புத்திமதிகளும் தூக்கிக் கடாசப்படும். பேச்சுவார்த்தை மேடையின் முக்கிய காட்சியாக அவ்வேளை அது மாறும், அவ்வளவு தான்!

# காச நோயின் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் வந்தது

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.குடாநாட்டில் காசநோயின் தாக்கம் கடந்த ஆண்டில் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக மாவட்ட காச நோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ் .யமுனானந்தா தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 2011 ஆம் ஆண்டு காசநோயால் 300 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 115பேர் சளிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு காசநோய்த் தாக்கம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டிலும் பார்க்க 2011 ஆம் ஆண்டு காசநோயின் தாக்கம் ஓரளவு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டில் காச நோயால் 420 பேர் பாதிக்கப்பட்டனர்.

இந்த காசநோயின் தாக்கத்தை முழுமையாக ஒழிப்பதே எனது நோக்கம் என்றும் அவர் கூறினார்.

இந்த ஆண்டிலும் இதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றும் கடந்த கால யுத்த சூழலால் இதன் தாக்கங்கள் மிக அதிகரித்துக் காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டினார்.

போஷாக்குக் குறைபாடு, மக்கள் நெருக்கமாக வாழ்வது மனத் தாக்கம் போன்றவற்றால் இந்தநோய் மக்களிடையே பரவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-17)

## மாவிட்டபுரத்தில் திருவாதிரைத் தேர்

யாழ்ப்பாணம், ஜன.6

மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயிலில் திருவாதிரைத்தேர்த் திருவிழா நாளை சனிக்கிழமை காலை 8.30மணிக்கு இடம் பெறவுள்ளது.

காலை 8 மணிக்குத் திருவெம்பாவைப் பூசைகள் ஆரம்பமாகி இடம்பெற்று 8.30 மணிக்கு சுவாமி தேரில் வீதியுலா வருவார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை8 மணிக்கு ஆருத்திரா தரிசனமும் தீர்த்தத் திரு விழாவும் இடம்பெறும்.

(ம)

## பெருஞ் சாந்தி கிரியைகள் நயினையில்

நயினாதீவு, ஜன. 6

நயினாதீவு - நாகபூசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி விழாவை முன்னிட்டுக் கிரியைகள் எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும்.

மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு விசேட பூசைகளுடன் ஆரம்பித்து இடம்பெறும். என்று ஆதீன பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ.வை.மு.ப.முத்துகுமாரசாமி சிவாச்சாரியார் தெரிவித்துள்ளார்.

(ம)

## வடமாகாணப் பாடசாலைகளுக்கு முஸ்லிம் ஆசிரிய உதவியாளர்கள்

யாழ்ப்பாணம், ஜன.6

வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய அரச பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்ற முஸ்லிம் ஆசிரியர்கள் வடமாகாணப் பாடசாலைகளில் இந்த முதலாம் தவணையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரை, வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கடமையைப் பொறுப்பேற்பதற்கு விண்ணப்பிக்காதவர்கள் இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணபத்தை அனுப்பி வைக்கும்படி அறிவிக்கப் பட்டுள்ளது.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின்செயலாளர் சத்தியசீலன் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

வடமாகாணத்தில் வசித்து தற்போது இடம்பெயர்ந்து ஏனைய மாகாணங்களில் உள்ள முஸ்லிம் ஆசிரிய உதவியாளர்களையே வடக்கில் கடமையைப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவத்தை அனுப்பி வைக்கத் தவறியவர்கள் தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கும் வலய கல்வி அலுவலகங்களில் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

'செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத் துறை அமைச்சு வடமாகாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் கூறினார். (ம-14)

## இந்திய மீனவர் விடுதலை

யாழ்ப்பாணம், ஜன.6

கடற்கொந்தளிப்புக் காரணமாக நெடுந்தீவில் கரையொதுங்கி நெடுந்தீவுக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டுப் பொலிஸார் மூலம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட இந்திய மீனவர்கள் ஆறுபேரும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளிடம் கடந்த திங்கள்கிழமை ஒப்படைக்கப்பட்டனர்.

கடந்த சனிக்கிழமை கரையொதுங்கிய நால்வரையும் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அவர்களை இந்தமாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த நிலையில் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் இவ்வாறு இரண்டு மீனவர்கள் நெடுந்தீவில் கரையொதுங்கினர். பிரஸ்தாப ஆறு பேரையும் கடந்த திங்கள்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத் திய போது அவர்களை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்ற நீதிவான் என். மகேந்திரராஜா உத்தரவிட்டார்.

ஆறு மீனவர்களும் காரைநகர் கடற்படையினர் மூலமாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த-4)

## கடந்த வருடம் மலேரியாவால் ஐவர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.குடாநாட்டில் கடந்த வருடம் 5 பேர் மலேரியா நோயால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்துடன் டெங்கு நோயால் 323 வைத்திய சிகிச்சை பெற்றுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மலேரியாவால் ஜனவரி, மார்ச், ஜூலை, ஓகஸ்ட், டிசெம்பர் மாதங்களில் தலா ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் ஆபிரிக்காவுக்குச் சென்று வந்த ஒருவராலேயே மலேரியா பரப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு நோயின் தாக்கத்தால் ஜனவரி மாதம் 62, பெப்ரவரி மாதம் 35, மார்ச் 22, ஏப்ரல் 16, மே 11, ஜீன் 24, ஜீலை 22, ஓகஸ்ட் 28, செப்ரெம்பர் 19, ஒக்ரோபர் 12, நவம்பர் 25, டிசெம்பர் 47 பேருமாக 323 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உணவு நஞ்சானதன் காரணமாக 16 பேர் வைத்தியசாலையில் கடந்த வருடம் சிகிச்சை பெற்றுள்ளனர். மேலும் சின்னமுத்து நோயால் கடந்த வருடம் 5 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்துடன் நெருப்புக்காய்ச்சலால் 217 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-15)

## நிகழ்வுகள் இன்று

### கலந்துரையாடல்

வடமராட்சிப் பாடசாலைகளின் அதிபர்களுடனான அவசர கலந்துரையாடல் ஒன்று பிற்பகல் 2 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக இதில் கலந்துரையாடப்படவுள்ளதால் இந்தக் கலந்துரையாடலுக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் தொடர்பான விவரங்களுடன் வருகை தரவேண்டும் என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார். (ம)

### வெளியீட்டு விழா

செபமாலை மாதா துறவற சபையின் ஸ்தாபகர் வண.பி.ஏ. தோமஸ் அடிகளாரின் குருத்துவ நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு''அஞ்சாதே நீ'' என்ற பெயரில் ஒலி-ஒளிப் பேழை மாலை 4மணிக்கு யாழ்ப்பாணம் கோயில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் வெளியிடப்படவுள்ளது.

இந்த இசைப்பேழை பற்றிய மதிப்பீட்டுரையை மன்னார் மறை மாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குனரும், 'மன்னா' பத்திரிகையின் ஆசிரியரும், மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான அருட்திரு.தமிழ்நேசன் அடிகளார் வழங்குவுள்ளார். (ம)

### இசை நிகழ்ச்சி

கனடா வாழ் இசைக் கலைஞர் நாகேந்திரன் நிருபனின் கர்நாடக இசை நிகழ்ச்சி மாலை 6 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறும். (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண சபைத் தேர்தலின் பின் அரசு தீர்வு நோக்கிச் செல்லாது என்கிறார் பிரபா

கொழும்பு, ஜன.6

வடமாகாணசபைத் தேர்தலை அரசு நடத்துவதில் எமக்கு எந்த விதமான உடன்பாடும் கிடையாது. வடமாகாணத் தேர்தலின் பின்பு அரசு இனப்பிரச்சினைத் தீர்வை நோக்கிச் செல்லாது என்பதை நாம் அறிவோம்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரபா கணேசன் எம்.பி.

நேற்றுக்காலை கொழும்பு பிரிட்டிஷ் தூதரகத்தில் தூதரக அரசியல் மற்றும் அபிவிருத்திப் பிரிவின் இரண்டாம் நிலைச் செயலாளர் ஷாரா மான் மற்றும் அவரது செயலாளர் எஸ்மா ஆகியோருடன் நடத்திய சந்திப்பின்போது ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது ஜ.ம.கா. பொதுச் செயலாளர் கலாநிதி சுரேஷ் கங்காதரன், நிர்வாக இயக்குநர் ஸ்ரீ நிமால் மற்றும் செயலாளர் என்.ரவிக்குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மேலும் இச்சந்திப்பின்போது பிரபா கணேசன் எம்.பி. தூதரக இரண்டாம் நிலை செயலாளரிடம் தெரிவித்தவை வருமாறு:-

''நான் கொழும்பு மாவட்டத்தை மட்டுமன்றி, மேல்மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே நாடாளுமன்ற உறுப்பினர். ஏனைய மாவட்டங்களை விட கொழும்பு மாவட்டத்தில் இந்திய வம்சாவளித் தமிழர்கள், வடக்கு, கிழக்குத் தமிழர்கள் என இரண்டு பிரிவினரும் வாழ்கின்றனர். இதனால் அபிவிருத்தி மட்டுமன்றி, தேசிய இனப்பிரச்சினைத் தீர்விலும் முழுமையான அக்கறை செலுத்தி வருகின்றேன்.

இனப்பிரச்சினைத் தீர்வில் அரசு உரிய கவனத்தைச் செலுத்தி வராதமை மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இதனால் இலகுவாகத் தீர்க்கப்படவேண்டிய இனப்பிரச்சினைத்தீர்வு சிக்கல் நிறைந்ததாக மாறக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. தென்னிலங்கை மக்களின் அபிவிருத்திக்காக அரசிற்கு ஆதரவு அளித்ததன் மூலமாகப் பல வேலைத் திட்டங்களை முன்னெடுக்கக் கூடியதாக உள்ளது. இருப்பினும், யுத்தத்திற்குப் பின்னரான இனப்பிரச்சினைத் தீர்வில் நாம் அக்கறை யாகவுள்ளோம். 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பாற்சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணவேண்டும். விடுதலைப் புலிகள் பலம்மிக்கவர்களாக இருந்த பொழுது அரசு பெடரல், சமஷ்டி முறைத் தீர்வை வழங்கவிருந்ததை இன்று மறந்துவிடக்கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரிடம் மட்டும் அரசு பேசுவதன் மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. பேச்சு மேடைக்குச் செல்லும் கூட்ட மைப் பினரும் வெளிப்படைத் தன்மையின்றி செயற்படுகின்ற னர். ஏனைய கட்சிகளினதும் அமைப்புகளினதும் ஆலோசனை களைப் பெறுவதில்லை. அவர்க ளிடத்திலேயே ஒற்றுமையில்லை. அரசு தமிழ்த் தலைவர்களைப் பிரித்தாலும் கொள் கையைக் கடைப்பிடிக்கின்றது. புலம்பெயர்ந்த தமிழர்களின் தாளத்திற்கு கூட்ட மைப்பினர் ஆடுகின்றார்கள். இது நாட்டில் வாழும் தமிழர்களின் நலத்திற்கு ஆரோக்கியமான தல்ல.

வடமாகாணசபைத் தேர்தலை அரசு நடத்துவதில் எமக்கு எவ்விதமான உடன்பாடும் கிடையாது. வடமாகாண தேர்தலின் பின்பு அரசு இனப்பிரச்சினைத் தீர்வை நோக்கிச் செல்லாது என்பதை நாம் அறிவோம். அரசுக்குள் இருக்கும் இனவாதக் கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்களின் கருத்துகளுக்கு அரசு பதிலளிப்பதில்லை. அரசுடன் கூட்டமைப்பினர் பேச்சு நடத்தும் பொழுது முழுமையான இனப்பிரச்சினைத் தீர்வைக் காண்பதற்கு முன்பு இடைக்காலத் தீர்வாக இன்று சிறைச்சாலைகளிலுள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்களின் விடுதலை, நாடு முழுவதிலும் தமிழ்மொழி அமுலாக்கல், இடம்பெயர்ந்தவர்களின் மீள் குடியேற்றம் போன்ற உடனடித் தீர்விற்கான விடயங்களை உள்வாங்க வேண்டும் - என்றார்.

# விளம்பரத் தட்டிகளால் வியாபாரம் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன.06

யாழ். கூட்டுறவுத் திறந்த வெளிச் சந்தைக்கு முன்பாக தனியார் நிறுவனங்கள் சில தமது விளம்பரத் தட்டிகளை அமைத்து வருவதால் சந்தையில் உள்ள விற்பனை நிலையங்களின் வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் பொது முகாமையாளர் எஸ்.கெங்காதரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிராமிய வங்கிகளின் சமாச வளாகத்தில் உள்ள திறந்தவெளிச் சந்தை விற்பனை நிலையங்களுக்கு முன்பாக பண்ணை வீதிப் பக்கமாக தனியார் நிறுவனங்கள் சில தமது விளம்பரத் தட்டிகளை அமைத்து வருகின்றன.

இந்த விளம்பரத் தட்டிகள் யாழ். மாநகர சபையின் அனு மதியுடனேயே அமைக்கப்படு கின்றன. இந்த விளம்பரத் தட்டிகளால் விற்பனை நிலையங்களின் வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்ப டுகின்றன.

இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் எனக் கோரி யாழ். மாநகர ஆணையாளருக்கு நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளேன்.

இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண் டும் -என்றார். (த-17)

# 18 மில்லியன் பெறுமதியான முத்திரைகள் கண்டுபிடிப்பு

தபால் திணைக்களத் தில் பாவனைக்குதவாத 18 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதி வாய்ந்த முத்திரைகளை தாம் கைப் பற்றியுள்ளனர் என தபால் சேவைகள் அமைச்சு தெரி வித்துள்ளது.

முத்திரை அலுவலகங்களில் உள்ள பெட்டகங்க ளில் இந்த முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டன என தபால் சேவைகள் அமைச் சரின் செயலாளர் ஹேமசிறி பெர்னாந்து தெரிவித் துள் ளார்.

பல வருடங்களாக இந்த முத்திரைகள் பெட்டகங் களில் வைக்கப் பட்டிருந் ததன் காரணமாவே பாவனைக்குதவாத நிலையில் தற்போது காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் மேலும் சுட்டிக் காட்டினார்.

தபால் திணைக்களத் தில் உள்ள தொழிற்சங்கம் ஒன்று தெரிவித்த மறைப்பாட்டை அடுத்து மேற் கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, ஒரு விசேட குழு நாரஹேன்பிட்டியிலுள்ள தபால் திணைக் களத்தின் அலுவல கத்தில் மேற்கொண்ட விசேட நட வடிக்கையின் விளைவாக இம் முத்திரைகள் கண்டுபிடிக்கப் பட்டுள் ளன.

இந்த முத்திரைகளை சர்தேச சந்தையில் விற்பனை செய்து தபால் திணைக்களத்திற்கு வருமானத்தை பெற்றுகொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அமைச்சின் செயலாளர் தெரிவித் தார்.

# லண்டனில் ஈழ அகதி மீது கொள்ளைக் குற்றச்சாட்டு

எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் கொள் ளையிட்டார் எனவும், ஒரு வரை தாக்கினார் எனவும் இலங்கைத் தமிழ் அகதி ஒருவர் மீது பிரிட்டனில் குற்றம் சுமத் தப்பட்டுள்ளது. 26 வயதான இலங்கைத் தமிழ் அகதியே இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளா கி யுள்ளார்.

மேலும் ஒரு எரிபொருள் நிரப்பும் நிலையத்துக்கு குறுஞ்செய்தி மூலம் அச்சுறுத்தல் விடுத்தார் என வும் அவர் மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

எனினும், கடந்த வரு டம் இடம்பெற்றதாகக் கூறப்படும் இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் கடந்த 3 ஆம் திகதி தென் மேற்கு நீதிவான் நீதிமன்றத் தில் விசாரணை நடைபெற்றபோது குற்றம் சுமத் தப்பட்ட இலங்கை அகதி தம்மீதான குற்றச்சாட்டை மறுத்தார்.

அதேநேரம் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள கொள்ளை குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு, கிங்ஸ்டன் க்ரௌன் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

அந்த வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

## பிரதித் தவிசாளராக வேலாயுதம் நியமனம்

ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதி தவிசாளராக கே.வேலாயுதம் நியமிக் கப்பட்டுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பதவிக்கு சிறு பான்மை இனத்தவர் ஒருவர் நியமிக்கப்பட்டமை இதுவே முதல் தடவை என்று தெரி விக்கப்பட்டுள்ளது.ஊவா மாகாண சபையின் உறுப்பினரான இவர், முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்க செயலாளராக பதவிவகித்து வந்தார்.

# ஆசியாவில் தியான யோக சபையை முதன்முதல் நிறுவிய பெருமைக்குரியவர்

## வண.தோமஸ் அடிகளார்

''தோலகட்டி சுவாமி'' என யாழ் மக்களால் அன்புடன் அழைக்கப்பட்ட வணக்கத்துக்குரிய பி. ஏ. தோமஸ் அடிகளாரின் குருத்துவ நூற்றாண்டு தினம் ((1912.01.06 - 2012.01.06) இன்றாகும். செபமாலை மாதா துறவற சபையின் ஸ்தாபகரான இவர் ஆசியாவிலேயே முதன் முதலாக தியானயோக சபையை நிறுவியவர் என்ற பெருமைக்குரியவர். கத்தோலிக்க திருச்சபையில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படுவதற்கு ஆரம்ப நிலையான "இறை அடியார்" என்ற நிலையை திருச்சபையின் உயர் பீடத்திடமிருந்து பெற்றவர். ஈழத் தமிழ் திருச்சபை முதல் புனிதர் ஒருவரைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுமானால் அது தோமஸ் அடிகளாரே தோமஸ் அடிகளார் கிறிஸ்தவ சமயத்தின் தவசி. அவர் ஓர் சந்நியாசி! இறைவனை முழு அன்புடன் முழு உரிமையுடனும் அப்பா! தந்தாய்! என அழைத்து வாழ்ந்தவர்! இறைமகன் இயேசு கிறிஸ்துவின் இதயத்திற்குள் வாழ்ந்தவர். தூய ஆவியின் இருப்பிடமானவர். அவரது கனிகளால் நிரப்பப்பட்டவர். பரிசுத்த கன்னி மரியாளின் அன்புக் குழந்தையாய் வாழ்ந்தவர். இறைவனின் மகிமைக்காகவே வாழ்ந்தவர். ''கடவுளுக்கு நிகர் யார்?'' என்ற கோட்பாட்டை தனது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர். இரவும், பகலும் செப தவத்தால் இறைபிரசன்னத்தில் இயேசுவின் இதயத்தில் ஒன்றித்து இறைவனில் மறைந்து வாழ்ந்தவர். இயேசுக்கிறிஸ்துவின் அன்பால் தூண்டப்பட்டு அவருக்காக ஒரு பைத்தியக்காரனைப் போல் வாழ்ந்தவர்.


இரவில் பல மணிநேரம் கண்விழித்து செபதவம் செய்து தன் கடமையை ஆற்றியவர். இ[illegible]ள் ஒட்டியாணம், சங்கிலி, சாட்டை, தவஉடை மற்றும் தவக்கருவிகளால் தன் உடலை ஒறுத்து தவம் செய்தார். இந்தியா, இலங்கை மனம் திரும்ப சொல்லாலும், செபத்தாலும் எழுத்தாலும், போதித்து வாழ்ந்தவர். இறுதி ஆண்டுகளில் இயேசுவின் காட்சியைப் பெற்றவர்.

ஆயர்கள், குருக்கள், துறவியர் கன்னியர்களுக்கு ஞான வழிகாட்டியாய் இருந்தவர். தினமும் பாவ மன்னிப்பு வழங்க மணிக்கணக்காய் தன்னை ஒப்புக்கொடுத்தவர். குருக்கள், துறவியர், கன்னியர், குருமாணவர்கள் பொதுநிலையினருக்கு தியானம் கொடுத்தவர்.

இந்து புத்த துறவிகளின் தலைவர்களுடனும் மற்றவர்களுடனும் உரையாடி இயேசுவைப்பற்றியும் போதித்தவர். இளைஞர்களின் தந்தையாய் இருந்து இந்து, கிறிஸ்தவ மத இளைஞர்களை பாகுபாடின்றி அன்பு செய்தவா

நோயாளர்களை தன் செபத்தால் குணப்படுத்தியவர். பிள்ளைப்பேறு அற்றவர்களுக்கு செபத்தால் குழந்தைப் பாக்கியம் இறைவனிடமிருந்து பெற்றுக்கொடுத்தவர். பேய்களை இறைவனின் கரத்தால் விரட்டியவர். இளைஞர்களுக்கு பல கைத்தொழில்களும் பள்ளிப் படிப்பும் மறைக்கல்வியும் ஊட்டி, ஊண், உடை கொடுத்து அவர்களில் கிறிஸ்துவை உருவாக்கியவர். திருச்சபைத் தலைவர்உறுப்பினர்கள்மீது மதிப்பும் மரியாதையும் கொண்டு வாழ்ந்தவர். திருச்சபையின் ஐக்கிய உறவின் கருத்தை உணர்ந்தவர். மரித்த ஆன்மாக்கள் அனைவரும் விண்ணகம் அடை[illegible]

தந்தை தவத்திரு தோமஸ் அடிகளார் தாழ்ச்சியின் உருவம், விசுவாசத்தின் தந்தை, நம்பிக்கையின் நங்கூரம், அன்பில் நிறைமை,



ஏழ்மையின் முழுமை, தூய்மையில் வெண்மை, கீழ்ப்படிதலின் உயர்நிலை, பிறர்அன்பால் எரியும் திரி, தூய ஆவியால் நிறைந்தவர், நற்செய்தியில் சிறப்பாக மலைப் பொழிவை வாழ்ந்து காட்டிய செம்மல், நற்செய்தியை எடுத்துக்கூறிய இறைவாக்கினர்.

குலம், இனம், மொழி, இடம், பணம், கல்வி அனைத்தையும் கடந்து அனைவரிலும் இயேசு மரியன்னையை பார்த்தவர். தொழிலாளியின் நண்பன், கல், மண், மரம் வெட்டி வாழ்ந்து காட்டியவர். தலைவர்களுக்கு ஆட்சி முறையின் ஒளியாக பத்து கட்டளைகளைக் கொடுத்தவர்.

இரண்டாம் வத்திக்கான் சங்கக் கருத்துக்களை முன்னதாக வாழ்க்கையில் செயல்படுத்தியவர். கடவுள் மறுப்புக் கொள்கையை எதிர்த்து அவர்களை மனம் மாற்றி கடவுளை ஏற்க செபித்து வந்தவர். இதற்காக தம் துறவிகளை செபிக்கத்தூண்டியவர். இவர்நோயாளிகளின் மருத்துவர், துன்புற்றோரின் கண்ணீரைத் துடைத்தவர். ஊர்வன, பறப்பன, நடப்பன அனைத்து உயிர்களோடும் உரையாடி மகிழ்ந்தவா

செபமாலைத் துறவியரின் வாழ்வு நற்கருணையை மையமாகக் கொண்டு செபமாலையில் கிறிஸ்துவின் மீட்பு வரலாற்றைத் தியானித்து உலகினரின் பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டி அனைவருக்காகவும் மன்றாடும் ஓர் வாழ்வாகும்.

## வண.தோமஸ் அடிகளார்

சில குறிப்புகள்

* பாண்டியன் தாழ்வு கிராமத்தில் 07.03.1986 இல் பிறந்தார்.
* பெற்றோர்-வஸ்தியாம்பிள்ளை - லூயிஸ் அம்மாள்.
* குருத்துவ நிலை-06.01.1912
* ஆன்மா ஒப்படைப்பு- 26.01.1964
* ஆசியாவின் முதல் தியான யோக சபையான செபமாலைத்தாசர் சபையை இலங்கையில் யாழ். மறைமாவட்டத்தில் தோலகட்டி என்னும் இடத்தில் 1928.02.02 இல் ஆரம்பித்தார்.

இந்தச் சபை கொச்சிக்கடை, யாழ்ப்பாணம், வவுனியா, கண்டி ஆகிய இடங்களில் 4ஆச்சிரமங்களாகவும் திகழ்கின்றன.

செபமாலைக்கன்னியருக்கு 1948.08.22 இல் துறவு சபையை ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு வசூல் ஒரு லட்சத்து 84 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஜன.6

புத்தாண்டு தினத்தன்று சட்டவிரோதமாக மின்பாவனையில் ஈடுபட்ட 19 பேர் சிக்கிக் கொண்டனர். இவர்களிடமிருந்து ஒரு லட்சத்து 84 ஆயிரத்து 264 ரூபா அபராதம் அறவிடப்பட்டது என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அச்சுவேலி, திடல்புரம், சுகந்திபுரம், தேவிபுரம், வயாவிளான், குட்டியபுரம், நீர்வேலி, பூலசிட்டி ஆகிய இடங்களில் சட்டவிரோதமாக மின் இணைப்பு பெற்றவர்களே இவ்வாறு மாட்டிக் கொண்டனர்.

இவர்களின் வீடுகளுக்கு மின்சாரம் இருந்த போதும் மேலதிகமாகக் கம்பங்களில் இருந்து மின்சாரத்தைப் பெற்றுள்ளனர் என்று கூறப்பட்டது.

பொதுமக்களின் தகவலை அடுத்து பொலிஸாரின் உதவியுடன் மின்சாரசபையினர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையில் இவர்கள் சிக்கிக் கொண்டனர்.

இவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

விசாரணைகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 19 பேருக்கும் ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

இதேவேளை, சட்ட விரோதமாக மின்மானியை பயன்படுத்திய யாழ்ப்பாணம் சிறாம்பியடியைச் சேர்ந்த ஒருவருக்கு 50 ஆயிரத்து 156 ரூபாவை மின்சார சபைக்குச் செலுத் துமாறும் நீதிமன்றம் உத்தர விட்டது.

புத்தாண்டு தினத்தன்று மட்டும் இவ்வாறான குற்றச் செயல்களைக் கண்டு பிடித்ததால் மின்சார சபைக்கு ஒரு லட்சத்து 84 ஆயிரத்து 420 ரூபா வருவாய் கிடைத்ததாகவும் கூறப்பட்டது.

(ம-311)

## மோசடி செய்தவர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.6

லண்டனுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி திருநெல்வேலி மற்றும் அச்சுவேலியைச் சேர்ந்த இருவரிடமிருந்து 13 லட்சம் ரூபா பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒருவர் இரண்டு வெவ்வேறு பிணைகள் அடிப்படையில் யாழ். நீதிமன்றினால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டார். இதனுடன் சம்பந்தப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரைக் கைது செய்து மன்றில் முன்னிலைப் படுத்துமாறு நீதிவான் மா.கணேசராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

திருநெல்வேலி மற்றும் அச்சுவேலியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட இருவரும் தனித்தனியே யாழ்.விசேட குற்றத்தடுப்புப்பிரிவுப் பொலிஸாரிடம் இது பற்றி முறைப்பாடு செய்தனர். அதனால் சந்தேக நபர் இரு வேறுபட்ட நிபந்தனைகள் அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அச்சுவேலியைச் சேர்ந்த நபர் தனது முறைப்பாட்டின் போது சந்தேகநபர் 7 லட்சம் ரூபாவைப் பெற்று மோசடி செய்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார். இந்த வழக்குத் தொடர்பான விசாரணையின்போது, சந்தேக நபரை 20 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுதலை செய்த நீதிவான், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ். நீதிமன்றில் கையெழுத்திட வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

**பாதிக்கப்பட்ட இருவரும் தனித்தனியே யாழ்.விசேட குற்றத் தடுப்புப்பிரிவுப் பொலிஸாரிடம் இது பற்றி முறைப்பாடு செய்துள்ளனர்**

திருநெல்வேலியைச் சேர்ந்த நபர் தனது முறைப்பாட்டில், சந்தேக நபர் 6 லட்சம் ரூபாவைப் பெற்று மோசடி செய்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார். இது தொடர்பான வழக்கும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் சந்தேகநபரை 10 ஆயரம் ரூபா காசுப்பிணையிலும், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆட்பிணையிலும் விடுவிக்க உத்தரவிடப்பட்டது. இதன்படி இவர் 30 ஆயி ரம் ரூபா காசுப் பிணை யிலும் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான நான்கு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை யாழ்ப்பாணத்தில் வைத்து யாழ். பொலிஸார் கைது செய்திருந்தனர். இது தொடர்பான வழக்கு எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(ம-4)

## புகையிலைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

ஊர்காவற்றுறை,ஜன.6

அனலைதீவுப் பகுதியில் மிளகாய், புகையிலைச் செய்கையில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழை காரணமாக இந்தப் பகுதி விவசாயிகளின் நாற்று மேடைகள் அழிவடைந்துள்ளதன் காரணமாக மண்டைதீவு, பொலிகண்டி ஆகிய பகுதிகளிலிருந்து எடுத்து வரப்படும் நாற்றுக்களைக் கொண்டு தமது விவசாய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

அனலைதீவு விவசாய சம்மேளனத்தினூடாக ஊர்காவற்றுறை இலங்கை வங்கி இந்தப்பகுதி விவசாயிகள் 111 பேருக்கு விவசாயக் கடன்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ம-251)



காரைநகர் பிரதேச சபையின் நூலகக் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் மங்கள விளக்கேற்றுகிறார். (ம-250)

## ரூ.50 லட்சம் செலவில் பொதுநோக்கு மண்டபம்

ஊர்காவற்றுறை, ஜன.6

ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்குப் பகுதியில் கற்றல் செயற்பாட்டு பொது நோக்கு மண்டபத்துக்கான அடிக்கல் கடந்த புதன் கிழமை நடப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனைக்கு அண்மையில் அமையவிருக்கும் இந்த மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர் க.ஶ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் மண்டபத்துக்கான அடிக்கல்லை நட்டு வைத்தார்.

மீள்குடியமர்ந்த பிரதேசங்களின் அபிவி ருத்திக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து 50 லட்சம் ரூபா நிதியில் இந்த மண்டபம் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-251)

## ரயில் நிலையச் சூழல் புனரமைப்புப் பணிகள்

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.ரயில் நிலையச் சுற்றாடலைத் துப்புரவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த ரயில் நிலையத்தைப் புனரமைக்க ஒப்பந்தம் செய்துள்ள இந்திய நிறுவனம், புனர்நிர்மாணத்துக்கு முன் பாகச் சுற்றாடல் பகு தியை துப்புரவாக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

துப்புரவுப் பணிக் கென கனரக வாகனங்களும் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

சுற்றாடலில் அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள், மரங்கள் வாகனம் மூலம் அழிக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே யாழ். ரயில் நிலைய நடைபாதை,ரயில் தரிப்பிடப் பகுதி, என்பன துப்புரவாக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

(ம-17)

## ஊர்காவற்றுறையில் வீதிகளுக்கு விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜன.6

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களுக்கான வீதி விளக்குகள் பொருத்தும் நடவடிக்கையில் ஊர்காவற்றுறை பிரதேச சபை ஈடுபட்டு வருகின்றது.

இதனடிப்படையில் ஊர்காவற்றுறை அனலைதீவு எழுவைதீவு பகுதிகளில் இதுவரை 130 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கான மின்விநியோகம் அண்மையில் உள்ள குடியிருப்பாளர் ஊடாகவே பெறப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-251)

## அராலி–வேலணை பாதை ஆராய உயர்மட்டக் குழு

யாழ்ப்பாணம், ஜன.6

35 வருடங்களாகப் பாவனையின்றி உள்ள அராலி-வேலணை கடற்பாதையை மீள் புனரமைப்பது தொடர்பாக இன்று இடம்பெறவுள்ள அபிவிருத்திக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கொழும்பு உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.அதிகாரிகள், பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் பங்குபற்றும் அபிவிருத்திக் கூட்டம் இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் வேலணை- அராலி கடற்பாதைக்கு 2009இல் மதிப்பீடு செய்யப்பட்டு கிடப்பில் போடப்பட்ட வீதி அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்பட்டு இன்று நிதி ஒதுக்கப்படவுள்ளது.

அத்துடன் பண்ணைப் பால அபிவிருத்தி தொடர்பாகவும் மற்றும் நெடுந்தீவுக்கான புதிய கப்பல் வழங்குவது தொடர்பாகவும் இதில் ஆராயப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

(ம)

## புத்தாண்டு அதிர்ஷ்டசாலி குழந்தைகள்

யாழ்ப்பாணம் , ஜன.6

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த புது வருட தினத்தன்று 14 பிரசவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் எட்டு ஆண் குழந்தைகளும், ஆறு பெண் குழந்தைகளும் பிறந்துள்ளன.

இந்தப் பிரசவத்தில் மூன்று குழந்தைகள் சத்திர சிகிச்சை மூலம் பிறந்துள்ளன. என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

புத்தாண்டு தினத்தன்று வைத்தியசாலை மகப் பேற்று விடுதியில் பிறந்த இந்த 14 [illegible] தெரிவிக்கப்பட்டது. (ம-17)


## போட்ட கொட்டகைகளை அகற்றியது மாநகரசபை

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.முற்றவெளியில் பாவனை இன்றி இருந்த நடைபாதைக் கடைகள் நேற்று யாழ்.மாநகர சபையால் அகற்றப்பட்டன.

புல்லுக்குளத்துக்கு முன்பாகவுள்ள பகுதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு போடப்பட்ட இந்தக் கொட்டகை நடைபாதை வியாபாரிகளின் பாவனை இன்றிக் காணப்பட்டது.

புதுவருடம், தீபாவளி வியாபாரத்துக்குத் தென் பகுதியில் இருந்து வருகை தரும் நடைபாதை வியாபாரிகளும் இந்தக் கொட்டகையைப் பயன்படுத்தி வந்தனர்.



அதனைவிட மழை காலங்களில் நடைபாதை வியாபாரிகள் சிலரும் இந்தக் கொட்டகையைப் பயன்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடைபாதை வியாபாரிகள் நகரில் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ். நகரப் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறு செய்யும் வகையில் நடைபாதையோரமாகப் புடைவை வியாபாரத்தில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் கைது செய்தனர். பின்னர் யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜாவிடம் அவர்கள் நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

விசாரணையின் போது புடைவை வியாபாரிகள் நால்வரும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து ஒவ்வொருவரையும் தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்தும்படி நீதிவான் தீர்ப்பளித்தார்.

(ங-4)

## சுமங்கலி விடுதி வழக்கு மார்ச் 13 இல்

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.சுமங்கலி விடுதியில் விபசாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் விடுதி உரிமையாளர்கள் மீதான வழக்கு மார்ச் மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இந்த வழக்கு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது விபசாரத் தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்கள், மூன்று யுவதிகள், விடுதி உரிமையாளர்கள் மற்றும் அவரது உதவியாளர் என எட்டுப் பேர் நீதிமன்றில் சமுகமளித்திருந்தனர்.

இதன்போதே நீதிவான் மார்ச் மாதம் 13 ஆம் திகதிக்கு இந்த வழக்கை ஒத்தி வைத்தார். கடந்த நவம்பர் மாதம் 13 ஆம் திகதி இந்த விடுதியில் வைத்து 16 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் நான்கு ஜோடிகள் பதிவுத் திருமணம் செய்து கொண்டமை உறுதிப்படுத்தப்பட்டதால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஏனையவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைகளின் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அந்த வழக்கு நேற்று முன்தினம் மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (த-4)

# இரண்டு நாள்களுக்குள் வெளியேறுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள ரயில்வே திணைக்களத்தின் விடுதிகள் மற்றும் கட்டடங்களில் தங்கியிருக்கும் மக்களை இரண்டு நாள்களுக்குள் அங்கிருந்து வெளியேறுமாறு ரயில்வே திணைக்களம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஏற்கனவே இந்த விடுதிகள் கட்டடங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களை வெளியேறுமாறு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டது.

தற்போது ரயில்வே நிலையம் மற்றும் ரயில் பாதை போன்றவற்றில் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கு முன்னேற்பாடாக சம்பந்தப்பட்ட விடுதிகள் கட்டடங்களை விட்டு விலகுமாறு அந்தப் பகுதிகளில் குடியமர்ந்துள்ளோருக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டடங்கள், விடுதிகளில் சட்ட விரோதமாகத் தங்கியிருப்போர் அவற்றில் இருந்து இரண்டு நாள்களுக்குள் வெளியேற வேண்டும் என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, நேற்றுக் காலைஒரு விடுதியில்இருந்த குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)



வேலணை பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் இடம்மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களுக்கான பிரியாவிடை வைபவமும் புத்தாண்டு வரவேற்பு நிகழ்வும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றன. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், வேலணை பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு இடம்மாற்றலாகிச் சென்ற ரி.அருள்ராஜனுக்கு பரிசில் வழங்குகின்றார். (ம-167)

## 36 பேருக்கு சண்டிலிப்பாயில் வீடுகள்

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வடக்கின் வசந்தம் வீட்டுத் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 36 பேருக்கு இம்முறை வீடமைப்பு உதவி வழங்கப்படவுள்ளது.

ஒரு லட்சம் ரூபா மானியமாகவும் இரண்டு லட்சம் ரூபா கடனாகவும் வழங்கப்படவுள்ளது. 3 மாதங்களில் இவற்றைக் கட்டி முடிக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் பிரிவுக்கே அதிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு உத்தியோகத்தர் க.தொய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (ம-100 )

# ஊறணியில் மீள்குடியமர்வு இடம்பெறாதது ஏன்?

யாழ்ப்பாணம், ஜன.6

காங்கேசன்துறையின் ஊறணிப் பகுதியில் மீளக் குடியமர்வு நடைபெறும் என்று கூறப்பட்ட போதிலும் அது இடம்பெறவில்லை.

வயாவிளான் ஜே/245, ஜே/244 பகுதிகளில் மீளக் குடியமர்வு இடம்பெறவில்லை.

மிதிவெடிகள் அகற்றப்பட்டும் மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதி ஒருவர் இதனைக் கூறினார்.

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் முகாம்களிலுள்ள மக்கள் உள்ளனர். நிவாரணங்கள் கூட வழங்கப்படவில்லை. மக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

மக்களை உடனடியாக வயாவிளான் மற்றும் காங்கேசன்துறை, ஊறணி ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-410)

# நல்லூர் நூலகங்களுக்கு பிரதேச சபையால் புத்தகங்கள்

யாழ்ப்பாணம், ஜன.6

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நூலகங்களுக்கு 5 லட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன என்று நல்லூர் பிரதேச சபைத் தலைவர் வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி நூலகங்களுக்கே இவ்வாறு நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கற்றல் செயற்பாட்டை ஊக்குவிப்பதற்கும் பரீட்சைகளுக்குத் தோற்றும் க.பொ.த. சாதாரண, க.பொ.த. உயர்தர, மாணவர்களின் நலன் கருதியும், பல்கலைக்கழக மாணவர்களின் தேவைகளுக்கமையவும் இந்த நூல்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இதுவரை காலமும் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இயங்கி வந்த இந்த நூலகங்கள் மாணவர்களின் நலன்கருதியும் தேடல் உள்ள அனைவருக்காகவும் காலை 8 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை திறந்து விடப்படும் எனவும் அதே நேரம் சிறுவர்களின் நலன் கருதி சிறுவர் வாசிப்புப் பகுதியும் உருவாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விரைவில் மடிக் கணினிகள், கணினிகள் என்பன பொருத்தப்பட்டுச் சகல மட்டத்தினரும் கணினி அறிவைப் பெற்றுக் கொள்ள இலவசமாக விடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-ரி-313)

# சுகாதாரக் கேடான உணவுகள் விற்பனை செய்தால் தண்டனை

நல்லூர்ப் பிரதேச சபைக்கு உட்பட்ட சந்தைகள், தெருவீதிகளில் சுகாதாரத்துக்குக் கேடான வகையில் பழவகைகள், தின்பண்டங்கள் ஆகியவற்றை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை தலைவர் எஸ்.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது சந்தைகளில் அதிகளவான பழவகைகளில் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் இரசாயனக் கலவைகளைப் பயன்படுத்தியும் தின்பண்டங்கள் நிறங்கள் சேர்த்து தயாரித்தும் விற்பனை செய்யப்படுகின்றன. பார்ப்பதற்கு அழகாகவும், கண்கவர்வனவாகவும் பழவகைளும் தின்பண்டங்களும் உள்ளன.

இவ்வாறு நிறமூட்டப்பட்ட உணவு வகைகளைகளை விற்பனை செய்வோர் மீது நடவடிக்கைஎடுக்கப்படும்.

உள்ளூர் வியாபாரிகள் தென்னிலங்கையிலிருந்து வந்து விற்பனை செய்யும் பழவியாபாரிகள் ஆகியோரிடம் பழவகைகளை சுகாதார வைத்திய பரிசோதகர் மூலம் சோதனை செய்து இரசாயன கலவை கலந்திருக்கப்பட்டிருப்பின் உடனடியாகவே வியாபாரத்துக்கு வைக்கப்பட்டிருக்கும் பழங்கள் அனைத்தும் அழிக்கப்படும் என்றும் கூறினர்.

மீறிச் செயற்படுவோர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் கூறினார். (ம- 311-ரி)

# குற்றச் செய்திகள்

தென்மராட்சி, ஜன.6

சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த மிருசுவில் தவசிக்குளம் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அந்தப் பகுதியில் நடத்திய திடீர் சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தும் கோடா வைத்திருந்த நபருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிவான் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 60 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 6 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (ம-207)

* * *

வடமராட்சி, ஜன.6

அனுமதிப் பத்திரம் இன்றி பனை மரம் தறித்த நபருக்குப் பருத்தித்துறை நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

வல்வெட்டித்துறை, பொலிகண்டியைச் சேர்ந்த நபர் ஒருவர் உரிய அனுமதிப் பத்திரமின்றி பனை மரம் ஒன்றைத் தறித்ததாக வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

பருத்தித்துறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது எதிரி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம-236)

* * *

வல்வெட்டித்துறைப் பகுதியில் பதிவு செய்யப்படாத வாகனங்களைச் செலுத்திய இரு சாரதிகளுக்குப் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

உடுவில், வல்வெட்டித்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த இரு சாரதிகள் மீதும் வல்வெட்டித்துறை போக்குவரத்துப் பிரிவு பொலிஸாரால் தனித்தனியாகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்குகள் பருத்தித்துறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணை ஆரம்பத்திலேயே இரு எதிரிகளும் தத்தமது குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்துத் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ம- 236)

* * *

வடமராட்சி, ஜன.6

போக்குவரத்துக்கு இடையூறாக வல்வெட்டித்துறைப் பகுதியில் வாகனத்தை ஓட்டிச் சென்ற நபரொருவருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறைப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரின் கண்காணிப்பின் போது போக்குவரத்துக்கு இடையூறாக வாகனம் செலுத்திய வல்வெட்டி வாசிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரணை செய்த பருத்தித்துறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் எதிரிக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ம- 236)

* * *

யாழ்ப்பாணம், ஜன.6

திருநெல்வேலி மற்றும் கோப்பாய் பகுதிகளில் மதுபோதையில் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த இரண்டு பேர் யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் 8 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

இந்த இருவரையும் கோப்பாய் பொலிஸார் கைது செய்து நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

விசாரணையின் போது இருவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து இருவருக்கும் தலா நாலாயிரம் ரூபா வீதம் 8 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

* * *

திருநெல்வேலியில் நுளம்பு பெருகும் வகையில் வெற்றுப் போத்தல்களைச் சேகரித்து வைத்திருந்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து குறித்த நபர் யாழ். நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

* * *

பாதை அனுமதிப் பத்திரமின்றி பொதுமக்களை ஏற்றிச் சென்ற வாகன சாரதி நீதிமன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

* * *

ஆசனப்பட்டி அணியாது வாகனம் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக நல்லூரைச் சேர்ந்த நபர் நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

* * *

காங்கேசன்துறை வீதி, ஆரியகுளம் சந்தி ஆகிய பகுதிகளில் பதிவின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக இருவருக்கு இரண்டாயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

* * *

மோட்டார் சைக்கிள் பதிவின்றி தலைக்கவசமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற குற்றத்துக்காக மூத்த விநாயகர் கோயிலடி மற்றும் ஈச்சமோட்டையைச் சேர்ந்த இருவரும் இரண்டாயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுச் சந்தையில் தேடுதல் நெய்யில் கலர்; ‘சோடா’வில் குடம்பி!

**கலப்படம் செய்யப்பட்ட பதார்த்தம் புற்றுநோயை ஏற்படுத்தும் களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்**

வெல்லாவெளி, ஜன.6

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தைப்பகுதியில் தேடுதல் மேற்கொண்ட பொதுச்சுகாதார குழுவினர் வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து ஒருதொகை கலப்பட நெய்ப் போத்தல்களைக் கைப்பற்றியுள்ளனர்.

மரக்கறி எண்ணெயுடன் மட்டணி மஞ்சள் என்னும் கலர்பதார்த்தம் சேர்க்கப்பட்டு குறித்த நெய் தயாரிக்கப்பட்டுள்ளது என்று களுவாஞ்சிக்குடிப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எஸ்.இராஜேந்திரன் தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டு உணவுச் சட்ட உணவு விதிகளின் கீழ் உணவுக்காக மறுக்கப்பட்ட மட்டணி மஞ்சள் என்னும் கலர் பதார்த்தம் சேர்க்கப்பட்டதானது அதனைப் பாவிப்போருக்கு புற்றுநோய் போன்றவற்றைத் தோற்றுவிக்கக்கூடியது எனவும் அவர் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரக் குழுவினரே இவற்றைக் கைப்பற்றினர் என்று அவர் தெரிவித்தார்.

இந்த வர்த்தக நிலையத்தில் இருந்து 15 நெய்ப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், இதனைத் தயாரித்தவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

கண்டிப் பிரதேசத்தில் தயாரிக்கப்பட்டே இப்பகுதியில் அவை விநியோகம் செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை, களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு சந்திப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது நுளம்புக் குடம்பிகள் காணப்பட்ட குளிர்பானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று களுவாஞ்சிக்குடி பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். யோகேஸ்வரன் தெரிவித்தார்.

பட்டிருப்பு சந்தியில் குளிர்பான போத்தல்களை பெற்று மொத்த விற்பனை செய்யும் விற்பனை நிலையத்திலேயே இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன்போது 146 குளிர்பான போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# கொப்பி விற்பனையில் வர்த்தகர்கள் மோசடி

**பெற்றோர் விசனம்**

காத்தான்குடி, ஜன.6

மட்டக்களப்பு மாவட்டத்தில் புத்தக விற்பனை நிலையங்களில் அப்பியாசக் கொப்பி விற்பனையில் புத்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று பெற்றோர்களும் மாணவர்களும் குற்றம் சுமத்துகின்றனர்.

தற்போது பாடசாலைகள் புதிய கல்வி ஆண்டிற்காகவும் புதிய தவணைக்காகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. காத்தான்குடி பிரதேசத்தில் இரு கொப்பிகள் கொள்வனவு செய்தால் ஒரு கொப்பி இலவசம் எனவும், மூன்று கொப்பிகள் கொள்வனவு செய்தால் இரு கொப்பிகள் இலவசம் எனவும் குறித்த வர்த்தக நிலையங்களினூடாக ஊடகங்களிலும் பதாகைகளினூடாகவும் வேறு வழிகளிலும் விளம்பரம் செய்கின்றனர். இந்தக் கொள்வனவுக்காகச் சென்று கொப்பிகளைக் கொள்வனவு செய்தபின்னர் அது நாங்கள் வெறும் விளம்பரத்திற்காகவே அப்படிப்போட்டுள்ளோம் என்று நம்பிக்கையோடு செல்லும் வாடிக்கையாளர்களை ஏமாற்றி விடுகின்றனர்.

இந்த மோசடி நடவடிக்கைகள் குறித்து நுகர்வோர் அதிகார சபையும் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகம் என்பன உரிய நடவடிக்கைககளை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# பொலிஸாரினால் தடுக்கப்பட்டது ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,ஜன.6

மட்டக்களப்பு நகரின் காந்தி சதுக்கத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெறவிருந்த பிரதேச செயலாளர்களின் இடமாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டம் பொலிஸாரின் அனுமதி மறுக்கப்பட்டு தடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு அரச அதிபருக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது. மாவட்டத்தின் சில பிரதேச செயலாளர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதையடுத்து கடந்தவாரம் முதல் மட்டக்களப்பில் குழப்ப நிலையொன்று தோன்றியுள்ளது.

முறையற்ற விதத்தில் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது நிர்வாக ரீதியான பிரச்சினையை ஏற்படுத்தும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவரும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதேச செயலாளர்களின் இடமாற்றத்தை ரத்துச் செய்யுமாறு கோரி பொது மக்களும் பொது அமைப்புகளும் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச)



சிவனொளிபாதமலைக்குச் செல்லும் நடைபாதையில் படிக்கட்டுகள் சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் பாத யாத்திரையை மேற்கொள்வதில் பக்தர்கள் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

# கடும் குளிரான காலநிலையால் மரக்கறிச் செய்கை பாதிப்பு

நுவரெலியா, ஜன.6

மலையகத்தில் நிலவும் கடும் குளிரான காலநிலை காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி செய்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த மாவட்டத்தின் அதிகமான பிரதேசங்களில் இரவில் கடும் குளிரான காலநிலையும், பகலில் கடும் வெப்பமும் நிலவுவதாக மாவட்டச் செயலாளர் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்துள்ளார்.

புல்மேடுகள், மரக்கறித் தோட்டங்கள் மற்றும் தேயிலைத் தோட்டங்கள் அதிகாலை வேளையில் பனித்துளிகளால் மூடப்பட்டு காணப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

வழமைக்கு மாறாக தொடர்ச்சியாக பல நாள்களாக நிலவும் இந்தக் காலநிலை சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்ற போதிலும் வாழ்வாதாரமான பயிர்கள் பாதிக்கப்படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் காலநிலையால் தேயிலைத் தோட்டங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக அவற்றின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ச)

# அதிகளவு சுற்றுலாப் பயணிகள்

இந்தமுறை சிவனொளி பாதமலைக்கு பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் வந்த வண்ணமுள்ளனர்.

உல்லாசப்பயணிகளின் வரவால் கடந்த ஒருவார காலமாக நல்லதண்ணி நகரில் உள்ள விடுதிகள் அனைத்தும் நிரம்பிவழிகின்றன. நகரில் வர்த்தக நடவடிக்கைகளும் என்றுமில்லாத வகையில் சூடுபிடித்துள்ளன. வரலாறு காணாத வகையில் இவ்வாறு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகை தந்திருப்பது இதுவே முதற் தடவையாகும் என்று பலரும் தெரிவிக்கின்றனர்.

# இயந்திரப் படகின் இயந்திரம் திருட்டு

**பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு**

காத்தான்குடி, ஜன.6

அவசரகால நிலைகளில் ஏற்படும் உதவிகளை மேற்கொள்வதற்கும் வெள்ளம் ஏற்படும் பட்சத்தில் மனிதாபிமான நிவாரண உதவிகளை வழங்குவதற்கும் ஜேர்மன் நாட்டின் ஆச்சினோவா என்ற அரச சார்பற்ற நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டு வந்த பல லட்சம் பெறுமதியான இயந்திரப் படகுகள் இனந் தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன என்று காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் சேவைக்காகப் பயன்படுத்தப்பட்ட இந்த இயந்திரங்கள் சம்பந்தமான தகவல்களைத் தெரியப்படுத்துமாறு மக்களிடம் ஆச்சினோவா நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தகவல்தெரிவிப்போருக்கு சன்மானமாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என ஆச்சினோவா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# பஸ் சேவை சீரில்லை

மஸ்கெலியா, ஜன.6

மஸ்கெலியா, மறே வீதியில் சேவையில் ஈடுபட்டு வந்த அரச பஸ் கடந்த இரண்டு மாத காலமாக சேவையில் ஈடுபடுத்தப்படாதமையால் பாடசாலை மாணவர்கள், மற்றும் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த பஸ்சேவை சம்பந்தமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஏ. ஆர். சி. திருக்கோணபெருமாள் ஹற்றன் அரச பஸ் சபையிடம் பலமுறை நேரடியாக தொடர்பு கொண்டு பேசியபோது, சேவைகள் முறையாக நடத்தப்படும் எனக் கூறப் பட்டபோதிலும் கடந்த 45 தினங்களாக இச்சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# ஏன் நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது?

**சரியான சேவைகள் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் மக்களுடன் மக்களாகக் கிராமம் கிராமமாக ஒன்றிணைந்து தேவைகளையும், சேவைகளையும் அறிந்து செய்யக் கூடிய தன்மை பிரதேச சபை, நகரசபை உறுப்பினர்களுக்கே இருக்கிறது.**

அம்பாறை, ஜன. 6

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கு பொதுநல சேவைகளுக்காக நிதி வழங்குவது போன்று ஏன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது? - என்று அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.எல். முனாஸ் கேள்வியெழுப்பியுள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேசசபையின் மாதாந்த சபை அமர்வும், 2012 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட சமர்ப்பிப்பும் கடந்தவாரம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று ஒவ்வொரு அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆளுக்கொரு ‘ஏஜண்ட்’ வைத்துக்கொண்டு பண ஒதுக்கீடு செய்கிறார்கள்.

அவர்கள் நினைக்கும் இடங்களில் மட்டும் சேவைகள் செய்கிறார்கள். ஆனால், எங்கு மக்கள் முக்கிய தேவையுடன் இருக்கிறார்கள், எங்கு சேவைகள் செய்யவேண்டும் என்பன கவனத்தில் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை.

எனவே, சரியான சேவைகள் மக்களைச் சென்றடைய வேண்டுமானால் மக்களுடன் மக்களாகக் கிராமம் கிராமமாக ஒன்றிணைந்து தேவைகளையும், சேவைகளையும் அறிந்து செய்யக் கூடிய தன்மை பிரதேச சபை, நகரசபை உறுப்பினர்களுக்கே இருக்கிறது.

இன்று ஒலுவிலில் அமைக்கப்பட்டுள்ள துறைமுகத்தின் தாக்கத்தால் ஒலுவில் மக்களின் கடற்றொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டிருப்பதுடன் தொழில் செய்ய அந்த மக்களுக்குத் தரையிலும் இடம்இல்லாதவாறு கடலரிப்பு ஏற்பட்டு 500 இற்கு மேற்பட்ட தென்னை மரங்கள் கடலுக்குள் சங்கமித்து அழிந்துபோய்க் கொண்டிருக்கின்றனர். இதனை இதுவரை யாரும் கண்டுகொள்ளாமல் இருப்பதுதான் வேதனையளிக்கிறது.

அந்த மக்களின் அன்றாட உணவுக்கே கடற்றொழில்தான் வருமானமாக இருந்தது. ஆனால், அது இன்று இல்லை என்னும் போது அம்மக்களின் நிலை என்ன பரிதாபமாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாகக் கவனம் செலுத்தி இதற்கான மாற்று நடவடிக்கையை எடுக்க வேண்டும். இல்லையேல் பிரதேசசபை வழக்குப் பதிவு செய்தாவது இதற்குச் சரியான தீர்வுகாண வேண்டும் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறைகள் வாடகைக்குத் தேவை

தனியார் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள் அறைகள் வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:

**NEW SCIENCE HALL**
**Jaffna.**
**0777917611**

## துயர்பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் பிரதி அதிபர் திருமதி ஜெயச்செல்வி மகேந்திரன் அவர்களின் அன்புத் தாய் திருமதி செல்வநாயகம் புனிதவதி அவர்களது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தவர்களோடு நாமும் துயர்பகிர்ந்து சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்.
பாடசாலைச் சமூகம்.

# கோழிப்பண்ணை சுற்றி வளைப்பு

தென்மராட்சி, ஜன,6

வரணியில் இயங்கும் கோழிப்பண்ணை மீது சுகாதாரத் திணைக்களத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று முன்தினம் புதன்கிழமை திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இந்தக் கோழிப் பண்ணையினால் பெரும் சுகாதாரச் சீர்கேடு இடம்பெறுவதாக அயலவர்களும் பொதுமக்களும் பிரதேச சபையினரும் கொடுத்த முறைப்பாட்டையடுத்து சுகாதாரத் திணைக்களத்தினரும் சூழல் பாதுகாப்புப் பிரிவு பொலிஸாரும் இணைந்து பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

சூழல் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படுவதாக பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். வழக்கு எதிர்வரும் ஒன்பதாம் திகதி (9/1) திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

பண்ணையில் உள்ள குறைபாடுகளை 15 தினங்களுக்குள் செய்து முடிக்குமாறு சுகாதாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்தப் பண்ணைமீது வழக்குத் தொடர்வதற்குக் காரணங்களாக சுகாதாரத்துக்கு முரணான வகையில் கோழிகளைப் பராமரித்தமை, சுற்றுப்புறத்தைப் பேணியமை மற்றும் துர்நாற்றம் போன்ற அசாதாரண நிலையே என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-207)

## மரண அறிவித்தல்கள்

### சிவக்கொழுந்து கந்தையா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பை (மட்டக்குளியை) வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து கந்தையா நேற்று (05.01.2012) வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பு, கனகவதி, கந்தசாமி, சுப்பிரமணியம் மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் சகோதரனும், இந்திராணி, ஜெயராணி, ரேணுகா, ரதிலக்சுமி, ஜெயலக்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.01.2012) வியாழக்கிழமை மாலை மட்டக்குளியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

B30/3, காக்கை தீவு வீட்டுத்திட்டம்,
மட்டக்குளி.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### திருமதி சலாக்கினி அரியரட்ணம்



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சலாக்கினி அரியரட்ணம் (04.01.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றேமன்ட் கிறிஸ்தோப்பர்-பொலினம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பேனாட்-கிறிஸ்ரீனா (ஆசிரியர்கள் - மயிலங்காடு, ஏழாலை) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பேனாட் யேசுதாசன் அரியரட்ணம் (C.T.B. உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மனைவியும், C.R. ஜோசவ், காலஞ்சென்றவர்களான C.R. சலேசியஸ், C.R. சேவியர், லூட்ஸ் சறோ ஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுதந்திரராஜ் (பிரான்ஸ்), சுஜி (மிருசுவில்), சுறேந்திரராஜ் (சுறேன் - ACX Phone Shop), சுபாஷினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும், சறோஜினி (பிரான்ஸ்), அன்ரன் மதுரநாயகம் (சந்திரன் - மிருசுவில்), ஜெயந்தினி, வின்சன்ற் விஜயன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியும், மீறியம் மறீன் நோயல், மேரி அன் (பிரான்ஸ்), அபிஷாயினி (யா/புனித ஜோண் பொஸ்கோ மாணவி), ஜொயல், ஆயோ ஜணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (07.01.2012) சனிக்கிழமை பிற்பகல் 2. 30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

40/1, அன்னாள் வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

(12593)(2-6)

தகவல்:
மக்கள், மருமக்கள், சுறேன் (மகன்)

# சுவீடன் இடதுசாரிகளுடன் பேசுகிறார் சோமவன்ஸ

கொழும்பு, ஜன,6

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, சுவீடன் இடதுசாரி கட்சிகளின் தலைவர்களை நாளை மற்றும் நாளைமறுதினம் சந்தித்து இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து விளக்கமளிக்கவுள்ளார்.

சுவீடன் இடதுசாரி கட்சியின் 39ஆவது வருடாந்த மாநாடு இன்று முதல் 9ஆம் திகதி வரை அந்நாட்டில் இடம்பெறுகின்றது. இதில் கலந்துகொள்வதற்காக அக்கட்சி விடுத்த அழைப்பையேற்று ஜே.வி.பியின் சார்பில் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நேற்று சுவீடன் பயணமானார்.

அவர் 7ஆம், 8ஆம் திகதிகளில் இடம்பெறும் மாநாட்டு நிகழ்வில் கலந்துகொள்வார். இச்சந்தர்ப்பத்தில் அவர் இடதுசாரி கட்சித் தலைவர்களைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பில் விளக்கமளிப்பார் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

## கண்ணீர்த்துளிகள்

### சிவக்கொழுந்து கந்தையா



நாம் பிறந்ததிலிருந்து நம்மைத்
தூக்கிவளர்த்த நம் பேரனே
நீர் எம்மை விட்டுப்பிரிந்த பின்
தெரிந்தது வாழ்வின் துயரமே
கண்கள் கலங்கியிருக்க
கண்ணீரோ போதவில்லை- நீங்கள்
உலகை விட்டுப் போனாலும் எம்
மனதைவிட்டுப் போகவில்லை
ஞானவைரவர் அருள்பெற்று
அவரடியில் நீர் சேர்ந்தீர்
உம் பிரிவால் இருக்கும் நம் துயர்நீக்க
வருவீரா மறுஜென்மம் எடுத்து...?

அரசடி லேன்,
திருநெல்வேலி.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
பேரப்பிள்ளைகள்.

(12592)(5,6)

## துயரத்தை சுமந்த ஈராண்டு நிறைவு



### மேரி கலைச்செல்வி
### ஜோசப் கொன்விக்ரர்

மண்ணில்
23 ★ 07 ★ 1956

விண்ணில்
06 ★ 01 ★ 2010

அன்னையும் பிதாவும் தந்திட்ட சொத்து
அன்புடன் எமை ஏற்று வாழ்ந்தாய் நித்தம்
ஆண்டவன் செய்த அவசர முடிவால்
ஆருயிராக வாழ்ந்த எங்களைப் பிரிந்தீரே
உண்ணாமல் உறங்காமல் நோயோடு போராடி
உம் பிள்ளைகள் வாழ்வு மலர வைத்தீரே
மம்மி, மம்மி என்று அழைத்த பிள்ளைகள்
விம்மி, விம்மி அழுதிட எங்கு சென்றீர்
ஆண்டுகள் இரண்டு கடந்தாலும்
ஆறாத துயரில் வாழ்கின்றோம்.

(12591) (2-6-7)

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலி 10.01.2012 செவ்வாய்க்கிழமை புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும்.

துயரினில் வாழும்:

புனித அந்தோனியார்,
ஒழுங்கை, பருத்தித்துறை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்

## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்



ஆண்டொண்றாச்சே
ஆவி யெமைப் பிரிந்து
அடைக்கலமாய் ஏதுமில்லை
நடைப்பிணங்கள் எங்களுக்கு
தேடியெங்கு அலைந்தாலும்
தவித்திருக்கும் எமையாற்ற
ஐயா உந்தன் மலர்வதனத்
தரிசனம் தான் கிடைத்திடுமோ?
தேடித் தேடி எங்களுக்கு
நீங்கள் செய்த அத்தனையும்
கோடி கொட்டிக் கொடுத்து நாங்கள்
தேடினாலும் இனி வருமோ....

அமரர்
### விஜயரத்தினம் சுந்தரராமநாதர்

தோற்றம் : 15.02.1923 மறைவு : 06.01.2011

இல.610, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்-

## மரண அறிவித்தல்

### திருமதி தாமோதரம்பிள்ளை செல்லம்மா



சரவணை கிழக்கு, வேலணை மயிலப்புவத்தையைப் பிறப்பிடமாகவும், 227, கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தாமோதரம்பிள்ளை செல்லம்மா நேற்று (05.01.2012) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-மாரிமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான நாகபிள்ளை, தம்பிராஜா, இராசம்மா மற்றும் மகாலிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நல்லம்மா (கனடா-ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), சித்திரா (கனடா), காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், நாகரட்ணம் மற்றும் மகேந்திரன் (ஜேர்மனி), தனலட்சுமி (வசந்தி, ஆசிரியை, யா/ வேம்படி மகளிர் பாடசாலை), சாந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

227, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
செல்வி த. புண்ணியமூர்த்தி
(ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)


(12548)(6,7,8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குண்டுவெடிப்பால் குலுங்கியது பக்தாத்



**தன்னுடைய படைவீரர்களை மீளப்பெறுவதாக அமெரிக்கா அறிவித்த பின்னர் ஈராக்கில் வன்முறைகள் அதிகமாகியுள்ளன**




பக்தாத், ஜன.6

ஈராக் தலைநகர் பக்தாத்தில் சிடார் பகுதியில் அடுத்தடுத்து வெடித்த குண்டுகளால் 24 பேர் உயிரிழந்தனர். 35க்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

நேற்று வியாழக்கிழமை காலை நிகழ்ந்த இந்தக் குண்டுவெடிப்புகளால் பக்தாத் நகரமே குலுங்கியது.

ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியான சிடார் பிரதேசத்தில் தொழில்வாய்ப்புத் தேடி கூடிநின்றவர்கள் மீது முதலாவது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. மோட்டார் சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்ட நேரக்கணிப்புக் குண்டொன்றே இங்கு வெடித்தது.

முதலாவது குண்டு வெடித்த குறுகிய நேரத்தில் பக்தாத் விமான நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளில் அடுத்தடுத்து மூன்று குண்டுகள் வெடித்தன. ஷியா முஸ்லிம்களின் புனித ஊர்வலத்தை இலக்கு வைத்தே இந்த மூன்று குண்டுக்ளும் வெடிக்கவைக்கப்பட்டுள்ளதாக ஈராக்கியப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை நடந்த தொடர்குண்டு வெடிப்புகளில் சிக்கி 24 பேர் உயிரிழந்துள்ளனர். 35க்கும் அதிகமானோர் ஆபத்தாஅன நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அநேகரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதால் இறப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இதேவேளை -தன்னுடைய படைவீரர்களை மீளப்பெறுவதாக அமெரிக்கா அறிவித்த பின்னர் ஈராக்கில் வன்முறைகள் அதிகமாகியுள்ளன. ஈராக்கில் தொடரும் வன்முறைகள் குறித்து அமெரிக்கா கவலைவெளியிட்டுள்ளது. எனினும் படைகளை மீளப்பெறும் முடிவில் மாற்றமோ, தாமதமோ ஏற்பட அனுமதிக்கப்போவதில்லை என்றும் அமெரிக்கா அறிவித்துள்ளது. (ங)

## புயலில் இருவர் மரணம்

பிரிட்டன், ஸ்கொட்லாந்தின் பல்வேறு பகுதிகளில் செவ்வாய்க் கிழமை பலத்த மழையுடன் கடும் புயல் வீசியதில் இதில் சிக்கி இரண்டு மரணமாகியுள்ளனர்.

மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் இந்தப் புயல் வீசியுள்ளது.

இதில் வாகனம் ஒன்றின் மீது மரம் வீழ்ந்ததில் அதன் சாரதி உயிரிழந்தார்.

புயலால் எழுந்த ராட்சத அலைகளில் சிக்கி ஆங்கிலக் கால்வாயில் சென்ற சரக்குக் கப்பல்கள் ஆட்டம் கண்டன.

அப்போது படுகாயமடைந்த கப்பல் சிப்பந்தி ஒருவர் இறந்தார். மேலும் இரு ஊழியர்கள் காயம் அடைந்தனர். (ம)

## ஈரான் அணுசக்தி நிலையங்களை அழிப்பேன்

''நான் அதிபரானால் ஈரானின் அணுசக்தி நிலையங்களைக் குண்டு வீசி முற்றாக அழிப்பேன்'' என்று அமெரிக்க குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ரிக் சன்ட்றோய் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ளது.


இதில் போட்டியிடவுள்ள குடியரசுக் கட்சி வேட்பாளர் ரிக் சன்ட்றோய் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நான் அதிபராகத் தெரிவு செய்யப்பட்டால், ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது வான்வழித் தாக்குதல் நடத்தி அழிப்பேன். எனது காண்காணிப்பில் ஈரான் எந்த அணு ஆயுதத்தையும் தயாரிக்க முடியாது.

ஈரான் ரகசியமாக அணு ஆயுதங்களை தயாரித்து வருவதாக அமெரிக்கா தலைமையிலான மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. ஐ.நா. உள்பட பல நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளன.

எனினும் ஆயுதங்கள் தயாரிக்கவில்லை. மின் உற்பத்திக்காக அணுசக்தித் திட்டங்களைத் தொடர்ந்து செயற்படுத்துவோம் என்று ஈரான் திட்டவட்டமாகக் கூறிவிட்டது. (ம)



அமெரிக்காவின் ஒஹிகோ மாகாணத்தின் ஆண்ட்ருஸ் விமானப்படை தளம் வந்த ஒபாமாவை, விமானப்படை வீரர் ஒருவர் வரவேற்கிறார்.

## பாதுகாப்பை அதிகரித்தால் போதும்

பிரான்ஸில் உள்ள அணு மின் நிலையங்களின் பாதுகாப்பை மட்டும் அதிகரித்தால் போதும், அணு உலைகளை மூட வேண்டியதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் புகுஷிமாவில் ஏற்பட்ட அணுக்கதிர் வீச்சு விபத்துக்குப் பின்னர் உலகம் முழுவதும் அணு சக்தி குறித்து அச்சம் பரவியிருந்தது. அந்த அச்சத்தை விலக்கும் வகையில் அணுசக்தி மையங் களின் பாதுகாப்பு குறித்து ஒரு குழுவினர் பிரான்ஸில் ஆய்வு நடத்தினர். இதன் பிறகு அணு உலைகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளை தற்பொழுது அதிகப்படுத்த வேண் டும் என்று பிரான்ஸ் அணுப் பாதுகாப்பு மையம் அறிவித் துள்ளது. உலகிலேயே மின்சாரத் தேவைக்காக அணு மின் நிலையங் களையே அதிகமாக நம்பிக் கொண்டிருப்பது பிரான்ஸ் மட்டுமே. (ம)

## சவூதி மன்னரைச் சந்திக்கவுள்ள முஷாரப்

இந்த மாத இறுதியில் நாடு திரும்ப முடிவு செய்துள்ள, பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப், பாக்., அரசு மற்றும் ராணுவம், தன்னை கைது செய்வதைத் தடுப்பதற்காக, சவுதி அரேபிய மன்னரைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

பாகிஸ்தானில், அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் நடத்தவுள்ள நிலையில் அதில் போட்டியிடப் போவதாக அறிவித்த முஷாரப், இந்த ஆண்டு மார்ச்சில் வருவதாக முதலில் தெரிவித்தார். பின்னர், பெப்ரவரியில் வரப் போவதாக அறிவித்தார்.

அண்மையில் அறிக்கைவெளியிட்ட அவர், இம்மாத இறுதியிலேயே, பாகிஸ்தான் திரும்ப முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்தார். இந்த நிலையில், அவர் நாடு திரும்பிய பின் அவர் மீதான வழக்கின் அடிப்படையில், அவரை அரசு மற்றும் ராணுவம் கைது செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. இந்த கைது நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காக, இம்மாதம் 22 ஆம் தேதி, சவுதி மன்னர் அப்துல்லாவை, முஷாரப் சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

பாகிஸ்தான் உள்நாட்டு அரசியலில், சவுதி அரேபியா நடுவர் பணியாற்றி வருவதால், அந்த நாட்டின் மன்னர் மூலம், தன் மீதான வழக்கின் அடிப்படையில் கைது நடவடிக்கைகள் இருக்காது என்ற உறுதியை, அதிபர் சர்தாரி மற்றும் ராணுவத் தளபதி கயானி ஆகியோரிடமிருந்து பெறுவதற்காக இந்த சந்திப்பை, அவர் ஏற்பாடு செய்துள்ளார்.

அமெரிக்காவில் வசிக்கும் பாகிஸ்தான் தொழிலதிபர் ரஜா புகாரி, முஷாரப்பின் மிக நெருங்கிய வட்டாரத்தைச் சேர்ந்தவர். அவர், இதுகுறித்து அமெரிக்க அதிகாரிகளை விரைவில் சந்தித்துப் பேச உள்ளார். (ம)

## சிங்கப்பூர் அமைச்சர்களின் சம்பளத்துக்கு வந்தது – வேட்டு

சிங்கப்பூரில் அதன் பிரதமர் லீ சியன் லூங்கால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு புதிய சம்பள வீதங்களின் அடிப்படையில் அவர் உட்பட அனைத்து அமைச்சர்களின் சம்பளமும் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு குறைக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு மே மாதம் அரசால் அமைக்கப்பட்ட ஒரு குழுவின் பரிந்துரைகளை அடுத்து அமைச்சர்களின் சம்பளங்களில் இந்தப் பெரிய வெட்டு அமுலுக்கு வருகிறது.

அந்தக் குழு நாட்டின் பிரதமர் லீ சியன் லூங் அவர்களின் சம்பளம் 36 சதவீதம் குறைக்கபட வேண்டும் என்று பரிந்துரை செய்தது. இதன்படி அவரது ஆண்டுச் சம்பளம் இனி 1.7 மில்லியன் அமெரிக்க டொலர் களாக குறைகிறது.

இருந்த போதிலும் அவர் தான் உலகிலேயே தேர்தெடுக்கப்பட தலைவர்களில் அதிக ஊதியம் பெரும் தலைவராக இருப்பார். அவரது சம்பளம் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் சம்பளத்தைவிட நான்கு மடங்குக்கும் கூடுதலானது.

பராக் ஒபாமா ஆண்டொன்றுக்கு நான்கு லட்சம் டொலர்களே சம்பளமாகப் பெறுகிறார்.

கடந்த தேர்தலில் வாக்களிப்பு நிலையத்தில் மக்கள் சிங்கப்பூர் அரசால் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள பரிந்து ரைகளின் படி, அனைத்து அமைச்சர்களின் சம்பளமும் பிரதமரைப் போலவே 36 சதவீதம் குறையும். அவர்களின் ஆண்டுச் சம்பளம் இனி எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் டொலர்களாக இருக்கும்.


அரசின் குழு அளித்துள்ள பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொள்ளும் எண்ணம் இருந்தாலும், இது குறித்து இருவார காலம் விவாதங்கள் நடைபெறும் என்றும், பிரதமர் லீ தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் விடுதலை அடைந்த பிறகு முதல் முறையாக ஒரு பொதுத் தேர்தலில், எதிர்கட்சிகள் அதிகப்படியான இடங்களை வென்ற பிறகு அரசு கடும் அழுத்தத்துக்கு உள்ளான நிலையில், கடந்த மே மாதம் பிரதம் லீ இந்த சம்பள ஆய்வுக் குழுவை நியமித்தார்.

அந்தத் தேர்தலின் போது தீவு நாடான சிங்கப்பூரில் இருப்பவர்களுக்கும் இல்லாத வர்களுக்கும் இடையே, செல்வ நிலைகளில் உள்ள வித்தியாசம் வாக்காளர் க[illegible] லையை ஏற்படுத்தியுள் ளது. (ம)

## சீனாவில் பஸ் விபத்து

### 16 பேர் உடல் நசுங்கினர்



சீனாவில் பனி மூட்டத்தால் வீதிகள் மூடப்பட்டுள்ளன. விபத்துக்களும் அதிகரித்துள்ளன.

சீனாவில் கடும் பனி மூட்டத்தால் பாலத்தில் இருந்து பஸ் விழுந்து 16 பேர் உடல் நசுங்கி இறந்தனர்.

சீனாவில் கடும் பனிப் பொழிவு நிலவுகிறது. பல இடங்களில் பனிமூட்டம் காணப்படுவதால் சாலைகள் மூடிகிடக்கின்றன.

வழி தெரியாமல் சமீப காலமாக பல விபத்துகள் நடந்து வருகின்றன. பல இடங்களில் போக்குவரத்து ஸ்தம்பித்து வருகிறது.

இந்த நிலையில் சீனாவின் மத்திய பகுதியில் உள்ள அன்ஹூய் என்ற பகுதியில் நேற்று முன் தினம் பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. அதில் 50 இற்கும் அதிகமான பயணிகள் இருந்தனர்.

மலைப்பாங்கான இடத்தில் பாலத்தில் பஸ் சென்ற போது பனிமூட்டம் அதிகமாக இருந்தது. வழி தெரியாமல் சென்ற போது, பஸ் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தில் இருந்து கீழே விழுந்தது. இதில் 16 பயணிகள் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி இறந்தனர். 30 பேர் படுகாயம் அடைந்தனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய யூனியனுடன் பேச்சுக்கு ஈரான் தயார்

தெஹ்ரான்,ஜன.6

அணுஆயுதங்கள்தயாரிப்பு விவகாரம் குறித்து ஐரோப்பிய யூனியனுடன் பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாக ஈரான் அறிவித்துள்ளது.

அணுமின் நிலையங்களுக்காகத் தான் அணுசக்தியைப் பயன்படுத்துவதாக ஈரான் கூறிவந்தாலும், அணு ஆயுதத் தயாரிப்பில் அந்த நாடு ஈடுபடுவதாகஅமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன.இதன் காரணமாக, ஈரான் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை அந்த நாடுகள் விதித்துள்ளன.

இதற்கிடையில், ஈரான் ஏவுகணைப் பரிசோதனைகளை நடத்தி மேற்குலகத்தை மிரட்டியுள்ளது. அதனால், ஈரானைப் பணிய வைக்க மேலும் பல பொருளாதாரத் தடைகளை விதிக்க மேற்குலகம் தயாராகி வருகிறது.

இதன்படி ஐரோப்பிய யூனியன் ஈரான் மீது எரிபொருள் தடையை விதிக்கத் திட்டமிட்டுள்ள நிலையில்,அணு ஆயுதத் தயாரிப்பு குறித்த பேச்சுக்குத் தயார் என்று



ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மேமன்பிரஸ்ட் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில் தெரிவித்ததாவது:

ஐரோப்பிய யூனியன் கொள்கைப் பிரிவுத் தலைவர் கேத்ரீன் ஆஷ்டனின் திகதி மற்றும் இடம் குறித்த அறிவிப்புக்காகக் காத்திருக்கிறோம். அவரது அறிவிப்பு வெளியான உடன், ஈரான் தேசிய பாதுகாப்புக் குழுச் செயலர் ஜலீலி, தனது முடிவுகளை அறிவிப்பார். அதைத் தொடர்ந்து ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார். (ந)

## கட்டாரில் தலிபான்களின் இணைப்பு அலுவலகம்

ஆப்கானிஸ்தான் அரசுக்கும், தலிபான்களுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுக்காக கட்டாரில் இணைப்பு அலுவலகம் ஒன்றை அமைப்பது குறித்த தலிபான்களின் கோரிக்கை ஆப்கான் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் அரசுக்கும் தலிபான்களுக்கும் இடையில் கடந்த 10 மாதங்களாக அமைதிப் பேச்சு நடந்து வருகிறது.

தற்போதுதான் இது முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது. அதன்படி இரு தரப்பிலான பேச்சுத் தொடர கட்டாரில் இணைப்பு அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற தலிபான்களின் கோரிக்கையை ஆப்கன் அரசு ஏற்றுள்ளது.

சவுதி அரேபியா அல்லது துருக்கியில் அந்த அலுவலகத்தை அமைக்கலாம் என்ற அரசின் பரிந்துரையை தலிபான்கள் நிராகரித்து விட்டனர்.

அத்துடன் குவான்டனமோ சிறையில் உள்ள தலிபான்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும், தலிபான்கள் முன் வைத்துள்ளனர். ஆனால் அமெரிக்கா அவர்களை ஆப்கான் அரசிடம் ஒப்படைப்பது குறித்து ஆலோசித்து வருகிறது. (ந)

## புதிய இராணுவத் தளபதி லிபியாவில் நியமனம்

திரிபோலி,ஜன.6

லிபியாவில் கடாபியின் ஆட்சிக்காலத்தில் இராணுவத்தில் கேணலாகப் பதவி வகித்த ஒருவர் தற்போது லிபிய இராணுவத்தின் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மேற்படி தகவலை அந்த நாட்டின் இடைக்கால தேசிய சபை அறிவித்துள்ளது.

கடாபி அரசின் இராணுவத்தில் பணியாற்றி பின்னர் பதவி விலகிய யூசெப் அல் மன்குஸ் என்பவரே இப்போது இராணுவத்தின்புதியதலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பதவி விலகிய பின்னர் கடாபிக்கு எதிரான போராட்டத்திலும் பங்கு பற்றியிருந்தார்.

முன்னர் லிபிய இராணுவத்தின் தலைமை அதிகாரியாக இருந்த ஜெனரல் படா யூனிஸ் கடந்த ஜூலை மாதம் மர்மமான முறையில் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து நீண்ட நாள்களுக்குப் பின்னர் யூசெப் அல் மன்குஸ் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். தற்போது யூசெப் அல் மன்குஸ் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும் உள்ளார்.

## 77 வருடங்களுக்குப் பின் மகளைச் சந்தித்த தாய்!

பிறந்ததும் தத்துக் கொடுத்த தன் மகளை 77 ஆண்டுகளுக்குப் பின் சந்தித்த 100 வயது தாய் அளவு கடந்த மகிழ்ச்சியடைந்துள்ளார்.

டச்சு நாட்டைச் சேர்ந்த மின்கா டிஸ்ப்ரோ மிக சிறிய வயதிலேயே டாக்காவின் தென் பகுதியில் இடப்பெயர்வில் குடும்பத்தை விட்டு அநாதையானார்.

கடந்த 1928 ஆம் ஆண்டு இவர் அழகிய பெண் குழந்தையை பெற்றெடுத்தார். ஆனால் அந்த குழந்தையை வளர்க்க போதிய அனுபவம் மற்றும் வயது இன்மையால் தத்துக் கொடுத்தார். சமீபத்தில் தன் மகளை பார்க்கும் ஆர்வத்தில் தொடர்ந்து தேடி வந்தார். அவரது தேடல்களுக்குப் பயனாக 77 ஆண்டுகள் கடந்த நிலையில் தன் மகளைக் கண்டுபிடித்துள்ளார். பெட்டி ஜேன் என்ற தன் பெயரை ரூத் லீ என்று மாற்றிக் கொண்ட மின்காவின் மகளும் தனது தாயைப் பார்த்த மகிழ்ச்சியைக் கொண்டாடி வருகிறார்.

நோர்வே நாட்டை சேர்ந்த பாதிரியார் குடும்பத்தாரால் பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட ருத் லீ விண்வெளி வீராங்கனையாகப் பணியாற்றி வந்துள்ளார். தனது பணிக் காலத்தில் 4 முறை விண்கலத்தில் சாகச பயணம் மேற்கொண்டதாகவும் 517 முறை உலகைச் சுற்றி வந்துள்ளதாகவும் பெருமையுடன் தெரிவிக்கிறார் லீ.

கடந்த 2006ஆம் ஆண்டு தற்செயலாகப் பலமுறை தாங்கள் இருவரும் சந்தித்து கொண்டதாகத் தெரிவிக்கும் லீ, உறவு முறை தெரியாத நிலையில் தான் இந்தச் சந்திப்புகள் நடந்ததாகக் கூறுகிறார்.

இவர்களுடைய சந்திப்பு பலரையும் வியப்பில் ஆழ்த்தி உள்ளது. (ந)

## தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

### கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தகமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்குக் கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின்படி யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08 ஆம் திகதி 1596/17 இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தகமானி மூலம் என்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய சங்கத்தின் கீழ்க்குறிப்பிடப்படும் கிளைகளின் கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைபொதுச்சபைக் கூட்டங்களை 08.01.2012 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில் நடத்துவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களை நியமித்துள்ளேன்.

| கிளை இல | கிளையின் பெயர் | நேரம் | கிளை பொதுச் சபைக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | கொடிகாமம் | மு.ப. 10.00 மணி | யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் |
| 2 | கச்சாய் பாலாவி | மு.ப. 10.00 மணி | யா/ கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை |
| 3 | வினோபா | மு.ப. 10.00 மணி | வினோபா சனசமூக நிலையம், கச்சாய் |
| 4 | அல்லாரை | மு.ப. 10.00 மணி | யா/அல்லாரை அ.த.க பாடசாலை |
| 5 | மந்துவில் மத்தி | மு.ப. 10.00 மணி | யா/மந்துவில் றோ.க.த.க பாடசாலை |
| 6 | மந்துவில் | மு.ப. 10.00 மணி | யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் |
| 7 | இயற்றாலை | மு.ப. 10.00 மணி | யா/இயற்றாலைஅமெரிக்கன் மி.த.க பாடசாலை |
| 8 | வடவரணி | மு.ப. 10.00 மணி | யா/ வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம் |
| 9 | இடைக்குறிச்சி | மு.ப. 10.00 மணி | யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம் |
| 10 | நாவற்காடு | மு.ப. 10.00 மணி | நாவற்காடு 10 கிளை மண்டபம் |
| 11 | நவஜீவனம் | மு.ப. 10.00 மணி | யா/மிருசுவில் றோ.க.த.க பாடசாலை |
| 12 | மிருசுவில் | மு.ப. 10.00 மணி | யா/மிருசுவில் அ.த.க பாடசாலை |
| 13 | விடத்தற்பளை | மு.ப. 10.00 மணி | யா/விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம் |
| 14 | எழுதுமட்டுவாள் | மு.ப. 10.00 மணி | யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் |
| 15 | நாவற்காடு | மு.ப. 10.00 மணி | யா/நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் |
| 16 | கரம்பைக்குறிச்சி | மு.ப. 10.00 மணி | யா/வரணி மகாவித்தியாலயம் |
| 17 | கெற்பேலி | மு.ப. 10.00 மணி | வீரபத்திரர் சனசமூக நிலையம் கெற்பேலி |
| 18 | தவசிகுளம் | மு.ப. 10.00 மணி | யா/போக்கட்டி றோ.க.த.க பாடசாலை |
| 19 | உசன் | மு.ப. 10.00 மணி | யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்குச் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் எவரேனும் மேற்குறிப்பிட்ட தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல் கிடைக்காது விடினும் குறித்த கூட்டத்தில் இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு சமுகமளிக்க முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

ஒப்பம்
[illegible]
கூ.அ.உ. ஆணையாளர்,
யாழ்மாவட்டம்.

கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம்.
05.01.2012

(C/7720)(6-7-8)

உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள்



(7 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான விசேட ஆங்கிலக் கற்கை நெறி)

TKY 07

புறொஜக்ரர் மூலம் அகலத்திரையில்

உள்ளடக்கங்கள்:

ஆங்கில எழுத்துக்கள் அறிமுகம், உறுப்பமைய எழுதுதல், சொல்லாக்கம், வசனநடை, ஆங்கில உச்சரிப்பும் வாசிப்பும், படங்களை சொற்களுடன் இணைத்தல், ஆங்கிலக் கதைகள், பாடல்கள்

மாதாந்த தரமதிப்பீடும்

பெற்றோர் கலந்துரையாடல்

5 மாதகாலம்

மாதாந்தம் 1850/=

தொலைபேசி மூலம் முன்பதிவு இடம்பெறாது

7வது பிரிவு சனி; ஞாயிறு பி.ப.1 மணி

[illegible]

முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்,

37, சிவகுருநாதர் ஒழுங்கை,

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ் நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ். இந்துக்கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)



0212219016

0214914527

www.thisaikaddi.lk

thisaikaddi@sltnet.lk

## 10 ஆம் ஆண்டு நினைவலைகள்



### திருமதி பரமரத்தினம் மகாலிங்கம்

அன்னை மடியில்
06★ 02 ★ 1926

ஆண்டவன் அடியில்
10 ★ 01 ★ 2002

(துவாதசி 06.01.2012)

பத்து ஆண்டுகள் உருண்டோடினாலும்
என்றும் உங்கள் நினைவலைகள்
எம் இதயங்களிலே.....

தபாற் கந்தோர் வீதி,
முதலாம் ஒழுங்கை, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

(7889)(2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயலால் பாதித்த மக்களின் துயர் துடைத்தார் ஜெயா

மக்களுக்கான அனைத்து சகல உதவிகளும் வழங்கத் தயார் என்கிறது தமிழக அரசு



கடலூர் மாவட்டத்தில் 'தானே' புயலால் பாதிக்கப் பட்ட இடங்களுக்குப் பயணம் செய்த முதல்வர் ஜெயலலிதா பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவிப் பொருள் களை நேற்று வழங்கி னார்.

தானே புயல் பாதிக்கப் பட்ட மக்களுக்கு அனைத்து உதவிகளையும் அரசு செய் யும் என்றும் அவர் தெரிவித் தார்.

கடலூர் மாவட்டத்தில் கடந்த 30 ஆம் திகதி 'தானே' புயல் தாக்கியதில் 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மாவட்டத்தில் மீட்புப் பணி கள் இடம்பெற்றுக்கொண்டி ருக்கின்றன.

இந்தநிலையில் கடலூ ருக்கு ஹெலி கொப்டர் மூலம் தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று முன் தினம் சென்றார். கடலூர் பாரதி வீதியில் உள்ள தனி யார் மண்டபம் ஒன்றில் ஏற் பாடு செய்யப்பட் டிருந்த நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டார். புயலால் பாதிக் கப்பட்ட 25 பேருக்கு நிவா ரண உதவிகளை வழங்கி னார்.

அதன்பின்னர், முதல்வர் ஜெயலலிதா பேசியதாவது:

'தானே' புயல் பாதிப்பை அடுத்து, அரசு இயந்திரம் நிவாரண பணிகளில் முடுக்கி விடப்பட்டுள்ளது. மக்களுக் குத் தேவையான மின்சாரம், வீதி, குடி தண்ணீர், வீடு உள்ளிட்ட நிவாரண உதவி களுக்காக 850 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள் ளது.

பயிர்களை இழந்தவர் களும், வீடுகளை இழந்த வர்களும் கவலைப்பட வேண்டாம்.

உங்களுக்குத் தேவை யான அனைத்து உதவி களுக்கும், மறுவாழ்வுக் கும் அரசு இருக்கிறது. உங்களுக் குத் தேவையான அனைத்து உதவிகளையும் அரசு செய் யும். - என்றார் அவர். (வ)

## விமானியின் தூக்கத்தால் இடம் மாறிய விமானம்

விமானிகளின் தூக்கத்தால் மும்பைக்குச் செல்ல வேண்டிய விமானம் கோவாவுக்குச் சென்ற அதிர்ச்சி கரமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

துபாயிலிருந்து மும்பைக்கு வந்து கொண்டிருந்த ஏர் இந்தியா விமானத்தின் இரு விமானிகளும் தூங்கி விட்டதால் விமானம் மும்பையைத் தாண்டி கோவா அருகே சென்ற அதிர்ச்சிகரமான சம்பவம் நடந்து 15தினங்களுக்குப் பின்னர் தற் போது வெளியே கசிய ஆரம்பித்துள்ளது.

கடந்த 15 தினங்களுக்கு முன்பு, துபாயிலிருந்து 100 பயணிகளுடன் மிசி 612 என்ற ஏர் இந்தியா விமானம் மும்பை புறப்பட்டது. துபாய் நேரப்படி இரவு1.35 மணிக்கு இந்த விமானம் கிளம்பி இந்திய நேரப்படி காலை 7 மணிக்கு ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் தரையிறங் கியது.

பின்னர் ஜெய்ப்பூரிலிருந்து மும்பைக் குப் புறப்பட்டது. ஆனால் புறப்பட்ட சிறிது நேரத்தில் ஓட்டோ பைலட்டை இயக்கி விட்டு முதலில் ஒரு விமானி தூக்கத்தில் ஆழ்ந்தார். இதைத் தொடர்ந்து துணை விமானியும் தூங்கி விட்டார்.

இதையடுத்து மும்பை விமான கட்டுப்பாட்டு நிலையம் விமானத்தைத் தொடர்பு கொண்டதும் விமானத்திலுள்ள அலாரம் ஒலிக்க ஆரம்பித்தது. அதைக் கேட்டு திடுக்கிட்டு இரு விமானிகளும் விழித்துள்ளனர். இதற்கிடையே ஏர் இந்தியா விமானம் மும்பை வான்வெளியைத் தாண்டி கோவாவுக்குப் அரைவாசித் தூரம் வரை போய் விட்டது. இதை யடுத்து இரு விமானிகளும் விமானத் தைத் திருப்பி மும்பையில் தரையிறக்கியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (வ)

## உலக மொழிகள் மாநாடு குஜராத்தில்

இந்திய மாநிலமான குஜ ராத்தில் நடைபெற உள்ள உலக மொழிகள் மாநாட்டில் 23 நாடுகளைச் சேர்ந்த 900 மொழிகள் இடம் பெற உள் ளன.

குஜராத் மாநிலம் வதோ தராவில் உலக மொழிகள் மாநாடு இந்த வாரம் நடை பெற உள்ளதால் உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து மொழி நிபுணர்கள் வருகை தர உள்ளனர்.

பாஷா ஆராய்ச்சி மற்றும் வெளியீடு மையத்தின் சார் பில் நடத்தப்பட உள்ள இந்த மாநாடு நாளை சனிக் கிழமை ஆரம்பமாகி 2 தினங் கள் நடைபெற உள்ளது. இந்தியாவில் 12 மாநிலங் களில் 375 மொழிகள் பேசப் பட்டு வருவதாக அண் மைய ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது குறிப்பிடத்தக் கது. (வ)





ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் சுவாமி கோயிலில் நேற்று அதிகாலை பெருமாள் இரத்தின அங்கி அணிந்து தங்கக் குடை பிடிக்க, தோளில் அழகிய கிளி மாலை சூட்டி, பாண்டியன் கொண்டை மின்னியபடி சொர்க்கவாசலைக் கடந்து பக்தர்களுக்கு அருள் வழங்கினார். (வ)

## விமான நிலையத்தில் தீ பொருள்கள் எரிந்து நாசம்

டில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலை யத்தில் நேற்று அதிகாலை ஏற்பட்ட பெரியளவில் தீ விபத்து ஏற்பட்டது. ஆறு மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வரப்பட்டுள் ளது.

இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் உள்ள சரக்கு முனையத் திலேயே இந்த தீவிபத்து ஏற்பட்டது. நேற்று அதிகாலை 12.30 மணிக்கு சரக்கு முனையத் தின் மனித வளத்துறையில் திடீரென தீ பிடித்தது.

உடனடியாக அங்கிருந்த ஊழியர்கள் தீயை அணைக்க முயன்றனர். ஆனால் அவர் களால் தீயைக் கட்டுப்படுத்த இயல வில்லை. இதற்கி டையே பொருள்களில் பிடித்த தீ ஏனைய பகுதி களுக்கும் பரவியது. இத னால் தீயணைப்பு நிலையத் துக்கு தகவல் கொடுத்தனர்.

சுமார் 400 இற்கும் மேற் பட்ட தீயணைப் புத் துறை யினர் தீயை அணைக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட் டனர். சுமார் 6 மணி நேரம் போராட்டத்தின் பின்னர் தீ அணைக் கப்பட்டது.

பொருள்கள் முனையத் தில் விமான நிறுவனங்கள் தனித்தனியாக பொருள்க ளுக்கான அறைகளைப் பயன்படுத்தி வந்தன. இதில் ஏர்-இந்தியா, கல்ப் ஏர், தாய் ஏர், மற்றும் ஏரோ பிளாட் உள்பட 10 விமான நிறுவ னங்களின் பொருள்கள் முழு மையாக எரிந்து நாசமாயின.

## விரைவில் உடல் பரிசோதனைக் கருவி

திஹார் சிறைக் கைதிகள் விரைவில் உடல் பரிசோதனைக்கு

டில்லி, ஜன.6

இந்தியாவின் மிகப் பெரிய சிறைச்சாலை யான திஹாரில் ரூ2.5 முதல் 3 கோடி செலவில் உடல் பரிசோதனை செய்யும் கருவி பொருத்தப்பட உள் ளது.

நாட்டில் முதல் முறை யாக திஹார் சிறையில் உடல் களைப் பரி சோதனை செய் யும் (Scanning machine) பொருத்தப்பட உள்ளது. இதன் மூலம் போதைப் பொருள்கள், ஆயுதங்கள், மொபைல் போன்கள் ஆகிய வற்றின் நடமாட்டம் கண் காணிக்கப்படும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

தற்போது 2 முறை வெற்றி கரமாக இந்த சோதனை நடத்தி ஆய்வு செய்யப்பட் டுள்ளதாக சிறை அதிகாரி கள் தெரிவித்துள்ளனர். மேலும் தற்போது நடை முறையில் உள்ள சோதனை முறையில் இத்தகைய பொருள்களை கண்டு பிடிப்பது சிரமமாக இருப் பதாகவும் அவர்கள் தெரிவித் துள்ளனர். (வ)

## நவீன மயமாகிறது விமானப் படை

பிரான்ஸிடமிருந்து 6 ஆயிரத்து 600 கோடி ரூபா செலவில் 490 நவீன ஏவுகணைகளை வாங்குகிறது இந்தியா

டில்லி, ஜன.6

இந்திய விமானப் படை யில் உள்ள மிராஜ்-2000 ரக போர் விமானங்களில் பயன் படுத்துவதற்காக 6 ஆயிரத்து 600 கோடி ரூபா செலவில் 490 நவீன ஏவுகணைகளை பிரான்ஸிடம் இந்தியா வாங்க வுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் டஸ் ஸால்ட் ஏவியேசன் (Dassault Aviation) நிறுவன தயாரிப்பு தான் மிராஜ்-2000 போர் விமானங்கள். பல ஆண்டு களாக இந்திய விமானப் படையில் பயன்பாட்டில் உள்ள இந்த விமானங்கள் எதிரி நாட்டு விமானங்களை நடுவானில் வழி மறிப்பது, குறைந்த உயரத்தில் பறந்து எதிரிகளின் ரேடார்களில் கண்ணில் படாமல் இலக் கைத் தாக்குவது, எதிரி நாட் டின் ரேடார்களையே செய லிழக்கச் செய்வது உள் ளிட்ட திறன்களைக் கொண் டது.

இந்தியாவிடம் இந்த ரகத்தைச் சேர்ந்த 51 விமா னங்கள் உள்ளன.

இவை இப்போது 10 ஆயிரம் 947 கோடி ரூபா செலவில் நவீனப்படுத்தப் பட்டு வருகின்றன.

மேலும் இந்த விமானங் களில் நவீன ஏவுகணை களையும் பொருத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற் காக தனியாக 6 ஆயிரத்து 600 கோடி செலவில் 490 ஏவு கணைகள் பிரான்ஸ் நாட் டின் தேல்ஸ் நிறுவனத் திடம் கொள்வனவு செய்யப் படவுள்ளன. இந்த ஏவு கணைகள் எதிரி நாட்டு விமா னங்களை விரட்டிச் சென்று தாக்கி அழிக்கும் திறன் கொண்டவை.

இந்திய விமானப் படை யில் உள்ள மிகச்சிறந்த விமானங்களில் ஒன்றான மிராஜ்-2000 விபத்துகளை அதிகம் சந்திக்காத விமான மாகும். (வ)

## தமிழக சட்டசபை ஜன.30 இல் கூடுகிறது

சென்னை, ஜன.6

தமிழக சட்டசபைக் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாவதற்குப் பதிலாக 30 ஆம் திகதி நடை பெறும் என்று சட்டசபைச் செயலகம் அறிவித்துள் ளது.

இந்த வருடத்துக்கான முதல்லாவது சட்டசபைக் கூட்டத் தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி நடை பெறும் என்றும் ஆளுநர் கே.ரோசய்யா உரை நிகழ்த் துவார் என்றும் அறிவிக்கப் பட்டிருந்தது.

தற்போது இதில் மாற்றம் செய்யப்பட் டுள்ளது. 18 ஆம் திகதிக்குப் பதில் 30 ஆம் திகதி சட்டசபை கூட்டம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் சட்ட சபையில்ஆளுநர்கே.ரோசய்யா தொடக்க உரை நிகழ்த்து வார். (வ)

## வெளிநாடுகளில் பணியாற்றும் இந்தியர்களுக்கு ஓய்வூதியம்

டில்லி, ஜன.6

வெளிநாடுகளில் பணி யாற்றும், குறிப்பாக வளை குடா நாடுகளில் பணி புரியும், இந்தியத் தொழி லாளர்கள் பயன்பெறும் வகையில் அந்த நாடுகளில் ஓய்வூதிய மற்றும் ஆயுள் காப்பீட்டு நிதியத்தை அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கான திட்டத்துக்கு மத்திய அரசு நேற்று முன் தினம் ஒப்புதல் அளித் தது.

வளைகுடா நாடுகள் உள்பட, குடி யேற்ற அனுமதி கட்டாயமான நாடுகளில் இந்த நிதியம் அமைக்கப்ப ட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி வருடத் துக்கு ரூ. ஆயிரம் முதல் ரூ. 12 ஆயிரம் ரூபா வரை செலுத்தும் தொழி லாளர்களுக்கு அரசின் பங்களிப்பாக ஆண்டுக்கு ஆயிரம் ரூபா கிடைக்கும்.

பெண் தொழிலாளர் களுக்கு அரசின் ஆயிரம் ரூபா பங்களிப்புத் தவிர வெளிநாடுவாழ் இந்தியர் விவகாரத்துறை அமைச்சகத் தின் சார்பில் கூடுதலாக இன்னொரு ஆயிரம் ரூபா வும் அளிக்கப்படும்.

இதுபோன்ற நாடுகளில் பணியாற்றும் இந்தியத் தொழிலாளர்களில் 20 சத வீதத் துக்கும் அதிகமானோர் பெண்கள் என்பது குறிப் பிடத்தக்கது.


குறைந்த பணிக் காலம், குறைந்த வருமானம் போன்ற காரணங்களால் வயதான காலத்தில் அவர் கள் வறுமையில் வாடும் ஆபத்து அதிகமாக உள்ள தால், பெண்களுக்கு கூடு தல் உதவி வழங்கப்படவுள் ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் தவிர ஆயுள் காப்பீடும் கிடைக்கும் என்று மத்திய அரசு தெரி வித்தது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுச் சொல்லை மாற்ற எளிமையான வழி

இயங்குதளத்தில் பயனர் கடவுச்சொல்லை மாற்ற மிக எளிமையான வழி விண்டோஸ் இயங்குதளத்திலேயே உள்ளது. நாம் சாதாரணமாக கடவுச் சொல்லை மாற்றும்போது முந்தைய கடவுச்சொல்லை உள்ளிட்ட பின்னரே நாம் புதிய கடவுச்சொல்லை உருவாக்கிக் கொள்ள முடியும். ஆனால் முந்தைய கடவுச்சொல் இல்லாமலேயே புதிய கடவுச்சொல்லை உருவாக்க முடியும். இதனைச் செய்ய நாம் எந்த மூன்றாம் தர மென்பொருளின் உதவியையும் நாடிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. விண்டோஸ் இயங்குதளத்தின் உதவியுடனே இதனை நாம் செய்ய முடியும்.முதலில் Start Control Panelஐ Open செய்யவும். அதில் View by என்ற வரிசையில் Small Icons என்பதை தெரிவு கொள்ளவும். அதில் Administrative Tools என்பதை கிளிக் செய்யவும். அடுத்ததாகத் தோன்றும் விண்டோவில் Computer Management என்னும் சுருக்குவிசையை கிளிக் செய்யவும். அடுத்ததாகத் தோன்றும் விண்டோவில் Local Users and Groups User என்னும் வரிசையைத்தெரிவு செய்யவும். அதில் உங்கள் கணினியில் உள்ள பயனாளர்களின் பட்டியல் தோன்றும். அதில் எந்தப் பயனாளரின் கடவுச் சொல்லை மாற்ற வேண்டுமோ, அந்த பயனாளர் பெயர் மீது வலது கிளிக் செய்து தோன்றும் வரிசையில் Set Password என்பதைத் தெரிவு செய்யவும். அடுத்ததாகத் தோன்றும் விண்டோவில் Proceed என்னும் பொத்தானை அழுத்தவும். பின் நீங்கள் மாற்ற நினைக்கும் கடவுச் சொல்லை உள்ளிட்டு OK பொத்தானை அழுத்தவும். அதனையடுத்து தற்போது கடவுச்சொல் மாற்றப்பட்டதாக செய்தி வரும். இதே போல் நீங்கள் எந்த பயனாளர் கணக்கின் கடவுச் சொல்லையும் மாற்றிக்கொள்ள முடியும். தற்போது கணினியை மறுதொடக்கம் (Restart) செய்யுங்கள், கடவுச்சொல் மாற்றப்பட்டிருக்கும்.




# அழகான பேஸ்புக் கவர் பனர்களை மாற்ற வேண்டுமா?

பேஸ்புக்கின் புதிய Timeline தோற்றத்தில் Cover என்ற ஒரு புதிய வசதி உள்ளது. இந்த இடத்தில் எமக்குத் தேவையான போட்டோவை வைத்து கொள்ளலாம். இணையத்தில் அதிகமான போட்டோக்கள் இருந்தாலும் அனைத்தும் பேஸ்புக் timeline cover ஏற்ற அளவில் இருக்காது.

இதற்காக பேஸ்புக் timeline போட்டோக்கள் வைப்பதற்கென்றே சில பிரத்தியேகமான தளங்கள் உள்ளது. அதில் சிறந்த தளங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

Facebook timeline banner : இந்தத் தளத்தில் சிறந்த cover பனர்கள் உள்ளன. பனர்கள் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மற்றும் இந்த தளத்தில் உங்களுடைய Banner பதிவேற்றம் செய்யும் வசதியும் உள்ளது.

Facebook timeline banners : அழகான பனர்கள் அதிகமாக உள்ளன இந்தத் தளத்தில். பனர்கள் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

99covers : இந்தத் தளமும் இந்தப் பட்டியலில் அடங்கும். மிகச் சிறந்த பனர் இந்தத் தளத்தில் உள்ளது.

Facebook profile covers : இந்தத் தளத்திலும் பல்வேறு விதமான அழகான பேஸ்புக் கவர் புகைப் படங்கள் உள்ளன. Time linecover banner : இங்கு விதவிதமான அழகான பேஸ்புக் பனர்கள் உள்ளன.

இதில் உங்களுக்குத் தேவையானதை தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள். மற்றும் இதில் உள்ள பனர்களை உங்கள் விருப்பப்படி மாற்றிக் கொள்ளலாம்.


# கண்ணாடி மயமான புதிய வகை சுற்றுலா விமானங்கள்

## 2050 பயணம் செய்யலாம்

2050 ஆம் ஆண்டில் சேவைக்கு வரவுள்ள புதிய வகை சுற்றுலாப் பயணிகள் விமானத்தின் மாதிரி வடிவத்தை பிரபல Airbus விமான நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

விமான இருக்கைகளைச் சுற்றியுள்ள அனைத்துக் கூரைப் பகுதிகளும் முழுவதுமாக கண்ணாடியால் வடிவமைப்பதன் மூலம் விமான பயணிகளுக்கு முகில்களின் மேல் பறக்கும் அனுபவத்தையும் வானத்தில் அந்தரத்தில் மிதக்கும் உணர்வுகளையும் கொண்டுவரப் போகிறார்களாம்.

வெளி காலநிலைக்கு ஏற்ப விமானத்தில் வெப்பநிலையைச் சரிசெய்தல், பகல், இரவு காலங்களுக்கு ஏற்ப விமானத்தின் உட்புறத்திலும் வண்ணங்கள், மின் ஒளியை மாற்றல் என்று முற்றிலும் நவீனமயமாக அறிமுகமாகும். இந்த விமானசேவை பிரான்ஸில் இருந்து நியூ யோர்க்குக்கு உத்தியோகபூர்வ சேவையை முதலாவதாக ஆரம்பிக்கும் என்கின்றனர்.





# உலகின் முதல் 3D சனல்:

## சீனாவில் ஆரம்பம்

உலகின் முதல் 3டி ரி.வி அலைவரிசைச் சோதனை முறையில், அண்மையில் சீனா ஆரம்பித்துள்ளதாக அந்தநாட்டு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சீனாவில் உள்ள சில தொலைக்காட்சி நிறுவனங்கள் ஒன்றிணைந்து இந்த 3டி ரி.வி சனலை ஆரம்பித்துள்ளன. ஆங்கில புத்தாண்டான ஜனவரி 1 -முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்த 3டி சனல் தினமும் 13.5 மணி நேர நிகழ்ச்சிகளை சோதனை முறையில் ஒளிபரப்புச் செய்து வருகிறது. இந்த சனலை சீனாவின் மத்திய தொலைக் காட்சி நிறுவனம் நடத்தி வருகிறது. எதிர்வரும் 23 ஆம் திகதி சீனாவில் வசந்த விழா கொண்டாடப்பட இருக்கிறது. அன்றைய தினத்தில் இந்த 3டி சனல் அதிகாரப் பூர்வமாக ஒளிபரப் பப்படும்.

# இணையத்தில் இலவசமாக தமிழ்ப் புத்தகங்கள்



ரீட் எனி புக், லிட்பை உட்பட இணையத்திலேயே புத்தகங்களை வாசிக்க பல இணையத்தளங்கள் உள்ளன. ஓபன் ரீடிங் புக் என்னும் அந்த இணையத்தளம் தமிழில் புத்தகங்களை ஈ-புக் வடிவில் இலவசமாகப் படிக்க உதவுகிறது. முகப்புப் பக்கத்தில் வலைப்பதிவு வடிவில் வரிசையாகப் புத்தகங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. எந்தப் புத்தகம் தேவையோ அதனை கிளிக் செய்து படிக்கத் தொடங்கி விடலாம்.

அருகிலேயே ஏனைய புத்தகங்கள் அவைகளின் வகைகளுக்கு ஏற்ப தொகுக்கப்பட்டுள்ளன. அரசியல், இலக்கியம், உடல் நலம், இசை என்ற வகைகளின் பட்டியல் நீண்டு செல்கின்றது. நாட்டுப்புற இலக்கியம், நாவல்கள், பயண இலக்கியம் என பல வகையான புத்தகங்களும் இருக்கின்றன. அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு இந்தத் தளம் செயற்படுகின்றது. அண்மையில் இதில் உள்ள புத்தகங்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளது, மேலும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இதற்கான இணையத்தள முகவரி http://www.openreadingroom.com/

# தேவைக்கு ஏற்ப ரீ- சைக்கிள் பின்னின் அளவை மாற்றுவதற்கு

எமது கணினியில் உள்ள டிரைவின் அளவுக்கு ஏற்ப நாம் ரீசைக்கிள் பின்னை அமைத்துக் கொள்ளலாம். இதனைத் தெரிவு செய்ய ரீ-சைக்கிள் பின்னை ரைட் கிளிக் செய்து Properties தெரிவு செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு திறக்கும் விண்டோவில் Global ஐ தெரிவு செய்யவும்.

எல்லா டிரைவ்வுக்கும் ஒரே அளவிலான ரீ -சைக்கிள் பின்னைக் வேண்டும் என்றால் Use one settings for all drives எதிரில் உள்ள ரேடியோ பட்டனைத் தெரிவு செய்யுங்கள். உங்களுக்கு தேவையான டிரைவுக்கு ஏற்ப அளவினை தெரிவு செய்ய Configuare drives independently எதிரில் உள்ள ரேடியோ பட்டனை கிளிக் செய்யுங்கள். பின் திறக்கப்படும் விண்டோவில் உங்களது கணினியில் உள்ள டிரைவ்கள் இருக்கும். தேவையான டிரைவ்வைத் தெரிவு செய்து தேவையான அளவை ஸ்லைடர் மூலம் நிர்ணயிக்கலாம்.

இறுதியாக Apply செய்து Ok கொடுக்கவும். நாம் பொதுவாக ரீ-சைக்கிள் பின் அனைத்து டிரைவ்விற்கும் சேர்த்து ஒன்றாக இருக்கும் என நினைத்துக் கொண்டிருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னத்தைச்...

## ...சொல்ல?!

## ஆற்றிலே புளி கரைக்கலாமோ?

நாம் வாழும் ஈழமணித் திருநாட்டுக்கு, சிவபூமி என்றும் ஒரு பெயர். இன்னிசைப் பிரியனான இராவணன் சீதையைக் கவர்ந்து வந்து தடுத்து வைத்த பெருமையும், நம் இலங்கைகே உரியது. யாழினை மீட்டுப் பரிசு பெற்ற பெருமையும், நம் தமிழ் யாழ்ப்பாணத்துக்கே உரியது.

இவ்வாறாக தெய்வீகமும், இசையும், பண்ணும், பரதமும், இன்னும் சொல்வதானால், பண்புமிகு, பண்பாடும் கலையும், கலாசாரமும், நீதியும், நெறிமுறையும் நின்று நிலைத்தோங்கிய, நீள் புகழ் நிலைத்து நிலவிய, நிகரிலா திருநகரம் ஈழம் எழில் சேர் இன்பத்திருநாடு, இனமத குரோதமற்று, அன்பும் அறமும் தழைத்தோங்க, அருந்தமிழ்ப் பண்பின் பெருந்தமிழ் நாடாக பிறர்கண்டு வியக்க, பெரும்பேறு பெற்று பொலிவுடன் விளங்கிய வெற்றியை உடையது இத்திருநாடு.

பளிங்கு மாளிகைத்தலம் தோறும் மற்றுமுள்ள இடம் தோறும் பசுந்தேன் தெறிக்கும் தென்னறும் சோலைகள் தோறும் மக்கள் ஆடுநர் பாடுநராகி களிக்கின்றாரன்றி கவல்கிறார் ஒருவரைக் காணோன்- என்று அனுமன் வாயிலாக கம்பர் பெருமான் தந்த நற்சான்றிதழுக்கு மேலாக வேறு என்ன சான்று வேண்டிக் கிடக்கின்றது.

பேராசான் ரா.பி .சேதுப்பிள்ளையின் செந்தமிழில் சொல்வதானால் தமிழர் தம் பண்பாட்டைக் கட்டிக் காத்து தமிழ் வளர்க்கும் திருநாடு யாழ்ப்பாணத் திருநாடு.

நாற்புறமும் ஆழ்கடலின் அலைகள் மோதிக் கொஞ்சி நிற்க, கிறிஸ்தவர்களும், இஸ்லாமியரும் சைவர்களோடு இணைந்து வாழ யாழ்ப்பாணப்பட்டினத்தில் அதிகாலை நல்லூரான் மணி ஒலிக்க, கிறிஸ்தவ தேவாலயத்து மணி ஒலிக்க, இஸ்லாமியரது பள்ளிவாசல் பாங்கு ஒலிக்க, விட்டேனா கேள் எனப் பெளத்த விகாரையில் பிரித் ஓதக் கேட்ட சான்றோர், என்னே! சர்வமத ஒற்றுமை என்று ஏற்றும் திரு நகரமாய் திகழ்ந்தது, திகழ்வது எங்கள் யாழ்ப்பாண நன்னகரம்.

இத்தனை மகுடங்களையும் தன் மீது சூட்டிக் கொண்ட யாழ்ப்பாணம் குறித்து என்ன சொல்ல வருகிறேன் என்றால் உலக்கை தேய்ந்து உளிப்பிடியானது போன்று, கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போன்று, அனைத்துமே தேய்ந்து அறிவிழந்து, செயலிழந்து வாழும் சிங்களத் தமிழர் தமது வாழ்வைச் சீர்செய்ய வேண்டிய காலமும் நேரமும் இப்போது கனிந்து விட்டது.

இதனை அரைநூற்றாண்டுகளுக்கு முன்னரே கண்ணுற்ற மாபெரும் புலவன், நாடு இற்றைவரை இனங்கண்டு போற்றாத தங்கத் தமிழ்த் தாத்தா நவாலியூர் சோமசுந்தரப் புலவர் பாடிய பாட்டின் ஒரு சில வரிகளையாவது எண்ணிப் பாருங்கள்.

*வேற்று மொழிதனைக் கற்றோம்- எங்கள்*
*விலையான முதுசொத்தை விலைபேசி விற்கிறோம்*
*ஆற்றிலே புளியினைக் கரைத்திட்டோம்- எங்கள்*
*அருமந்த தமிழினை அறியாது கெட்டோம்.*

முன்னொரு காலத்தில் இசைவிழா, கலைவிழா, பட்டிமன்றம், இலக்கிய விழா, கவியரங்கு ஆகியவற்றுக்குக் கூடிய மக்கள் எண்ணிக்கையை எண்ணிப் பார்த்தால் இன்று நடப்பவை எமக்கு எதையோ சொல்லாமல் சொல்வது புலனாகும்.

இன்று ரியூசன் கொட்டில்களில் மாணவர்களும், ஏன் பெற்றோர்களும், மதுக்கடைகளில், வாலிபர்கள் முதியோர்கள் , முண்டியடித்து தம் காலத்தைப் போக்கும் அவலக் காட்சிகள் சமகாலநிலையில் எதைஎதையோ சொல்லாமல் சொல்கின்றன.

அதனைப் பின்னர் ஒருதடவை என்ன என்னவென்பதை ஆராய்வோம்.

தீதும் நன்றும் பிறர் தர வாரா

இந்தத் தாரக மந்திரத்தை நாம் உணரவேண்டும், நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றுவது, சுயநிர்ணயம் பற்றிப் பேசுவது மட்டும் எம்மை அழிவிலிருந்து காப்பாற்ற உதவமாட்டாது.

நமது மொழியை, நம் கவலைகளை, நமது பண்பாட்டை, வாழ்க்கை முறைமையை பேணப் போவது கொழும்பு நாடாளுமன்றம் அல்ல, நாமே எமது பிரதேசங்களில் உள்ள பட்டி தொட்டிகள் முதல், பல்கலைக் கழகம் ஈறாக, ஆலயங்கள் முதல் அனைத்து இல்லங்கள் தோறும், நம்மவர் முத்திரையை நாமே பேண மனங்களைத் திசை திருப்ப வேண்டும்.



பிரசண்டன்

# பொருளோடு போராடாமல் தமிழோடு போராடியவர்கள்

-பேராசிரியர் சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி குறித்து புகழாரம்

யாழ்ப்பாணம், ஜன.6

பொருளோடு போராடாமல் தமிழோடு போராடியவர்கள் வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் என அவர்களுக்குப் புகழாரம் சூட்டினார் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்.

வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸின் 72 ஆவது பிறந்த நாள் பரிசாக அவரது துணைவியார் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய இலங்கைத் தமிழியல் - சில பதிவுகள், நாலும் - இரண்டும் சொல்லுக்குறுதி என்ற இரு நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆறு.திருமுருகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும் போது தெரிவித்ததாவது: வீடு வாங்க வேண்டும், வாகனம் வாங்க வேண்டும், சொத்து சுகங்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசைகளை விடுத்து, எந்த நெருக்கடி வந்த போதும் இந்த மண்ணை விட்டு விலகிப் போகாமல் தமிழுக்காகவே வாழ்கின்ற பெருமைக்குரியவர்கள்.

அதனால் இன்று இலங்கைத் தமிழ் சமூகம் மட்டுமல்ல உலகத் தமிழ் சமூகமே ஏற்றுக்கொள்கின்ற மதிக்கப்படுகின்ற ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

வாழப்போகும், வளரப்போகும் பிள்ளைகளின் வாழ்வுக்கு ஆதாரமாகத் தமிழ் மொழியை வளர்த்து சமுதாயத்துக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. அதனால் இன்று உலக அங்கீகாரத்தைப் பெற்று இருக்கின்றார்கள்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் நல்ல வாழ்க்கைத் துணையாக மட்டும் நின்று விடாது இளம் பராயத்திலிருந்து இன்றுவரை எழுதிக்கொண்டு இருக்கின்ற, தமிழ் மொழியை இன்னமும் வளர்க்கப் போகின்ற பெருமைக்குரியவராக விளங்குகிறார்.

பொதுவாக இருவருமே சமூகத்தின் அனைத்து மட்டத்தோடும் பழகி, எல்லோர் மனத்திலும் இடம் பிடித்து நிற்கும் இவர்களின் தமிழ்பணி மேன்மேலும் வளரட்டும் என்றார் (எ-ரி)



பளை பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் நடத்தப்பட்ட கலாசார விழாவில் பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 05 கலைஞர்கள் பல்வேறு துறைக்கு ஆற்றிய சேவைக்காக கலைத் தென்றல் பட்டம் வழங்கி கெளரவிக்கப்பட்டனர். பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த தாமோதரம், வல்லிபுரம், ஆறுமுகம், அல்பிரட், மரியநாயகம் ஆகியோரே கெளரவிக்கப்பட்டனர். கெளரவிக்கப்பட்ட கலைஞர்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் அதிகாரிகள் அமைப்பாளர்களுடன் நிற்கின்றனர். (எ-86)

## புதிய பணிப்பாளர் சபைத் தெரிவு

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையின் புதிய பணிப்பாளர் சபைத் தெரிவு கடந்த ஞாயிற்றுக் கிழமை தெல்லிப்பழை பிரதேச சபை மண்டபத்தில் கூட்டுறவுப் பரிசோதகர் ச.பாலகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டுக்கான புதிய பணிப்பாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்.சு.கணேசமூர்த்தி, உப தலைவர் சு.பரமநாதன், செயலாளர் க.ஏழுர்நாயகம், பொருளாளர் க.இராதகிருஸ்ணன், செயற்குழு உறுப்பினர்கள் நா.நவரத்தினராசா, க.கணபதிப்பிள்ளை, சி.செந்தூரன், கே.உமாகரன், செ.செல்வரத்தினம், கே.விக்கினராசா, எஸ்.சுதன். (எ-86)

## நீதிமன்ற சேவையாளர் இளைப்பாறினார்

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் எழுதுநராகக் கடமையாற்றிய வீரகத்தி சிவராஜலிங்கம் அண்மையில் தனது 31 வருட நீதிமன்ற சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் எழுதுநராக அரச பணியில் இணைந்த இவர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாண நீதிமன்றம், சாவகச் சேரி பருத்தித்துறை ஆகிய மாவட்ட நீதிமன்றங்களிலும் நீதிவான் நீதிமன்றங்களிலும் கடமையாற்றியுள்ளார்.

## புதிய நிர்வாக சபை தெரிவு

காரைநகர், ஜன.6

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற போது அதில் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக அதிபர் பொ.சிவானந்தராசாவும், உபதலைவராக உதவி தபால் அதிபர் க.நிமலதாசனும், செயலாளராக கிராம சேவையாளர் சி.திருப்புகழூர் சிங்கமும் , உப செயலாளராக வி.கம்சனும், பொருளாளராக ஆசிரியர் ப.இராமகிருஷ்ணனும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 11 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த எட்டு வருடங்களின் பின் பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-250)

# சைவசமயப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.6

காரைநகர் மணிவாசகர் சபை நடத்திய சைவசமய பாடப் பரீட்சை முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளது.

**தரம்-2**

இ.சுருதி(யா/சுப்பிரமணியம் வித்தி), ச.கனிஸ்ரன்-(யா/ஊரி அ.மி.த.க வித்தி), சி.லக்சிகன்(யா/சுப்பிரமணியம் வித்தி), அ.யேயந்தினி (யா/சுப்பிர மணியம் வித்தி), ந.துளசி(யா/யாழ்ற்ரன் கல்லூரி).

**தரம்-3**

சு.கிர்தன்(ஊரி அ.மி.த.க வித்தி), க.தர்சிகா(சுப்பிரமணியம் வித்தி),இடம்-3 கி.மதுசன்(ஊரி அ.மி.த.க வித்தி), த.யதுர்சன் (தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தி), சு.பவிராஜ் (சுந்தர மூர்த்திநாயனார் வித்தி).

**தரம்-4**

சு.கடல்வேந்தன்(யாழ்ற்றன் கல்லூரி), வி.தமிழிகை (சுந்தர மூர்த்தி நாயனார் வித்தி), வி.அபிராமி (சுப்பிரமணிய வித்தி), பெ.தமிழினி ( சுப்பிரமணிய வித்தி), [illegible] வடக்கு அ.மி.த.க வித்தி)

**தரம்-5**

சு.புயலிசை (யாழ்ற்றன் கல்லூரி), அ.பிரணவரூபன் (சுந்தர மூர்த்தி நாயனார்), பா.சிவராஜினி (சுப்பிரமணிய வித்தி), சி.நிமல் (சுப்பிரமணிய வித்தி), ம.பவித்திரா(வியாவில் சைவ வித்தி).

**தரம் - 06**

ததே.கம்சிகா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), த.பிரியங்கா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), சி.சிவப்பிரியா (யாழ்ற்றன் கல்லூரி), யோ.கோபிகா( யாழ்ற்றன் கல்லூரி), நி.காயத்திரி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி).

**தரம் - 07**

ச.ரோகினி (யாழ்ற்றன் கல்லூரி), கி.பிரியா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), சு.கவீனா ( சுந்தரமூர்த்தி நாயனார் வி.), பா.கலமதி ( கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), ச.செந்தூரன் (யாழ்ற்றன் கல்லூரி).

**தரம் -08**

மோ.துர்சிகா (யாழ்ற்றன் கல்லூரி), வி.வேதாரணி (யாழ்ற்றன் கல்லூரி), பே.சரண்யா( சுந்தரமூர்த்தி நாயனார் வி), த.திருமகள் (யாழ்ற்றன் கல்லூரி), சி. விசாலினி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி).

**தரம் - 09**

கோ.பாலசயந்தன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), சு.மனோகரி (யாழ்ற்றன் கல்லூரி), வி.குருபரன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), யோ.நருணிதா (யாழ்ற்றன் கல்லூரி), த.லக்ஷிகா ( வியாவில் சைவ வித்தியாலயம்).

**தரம் - 10**

க.சாந்தினி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), சு.துளசிகா (கலாநிதி ஆதியாகராஜா ம.ம.வி), பா.நிதர்சன்(கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), சி.சர்வனன் (யாழ்ற்றன் கல்லூரி), அ.திவ்யா ( யாழ்ற்றன் கல்லூரி).

**தரம் - 11**

க.பானுஜா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), யோ.விதுஷா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), உ.பிரியங்கா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), தி.அம்பிகா ( யாழ்ற்றன் கல்லூரி), தி.கிருசாந்தி ( யாழ்ற்றன் கல்லூரி), ந.சோபிதன் (யாழ்ற்றன் கல்லூரி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல் -
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-5679731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 567 3377,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## ஆளுநரின் அதிகாரத்தை முதலில் ஒழிப்போம்

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கொடுப்பதா? இல்லையா? என்று அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையே காரசாரமான விவாதங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. பேச்சு மேசையின் மேலேயும் கீழேயுமாக இந்த விவகாரம் ஆராயப்பட்டுக் கொண்டிருக்கிறது.

காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கொடுக்கவே முடியாது என்று ஜனாதிபதியும் அமைச்சர்களும் அடித்துக் கூறிய பின்னர், தமது நிலைப்பாட்டைத் தளர்த்தி இப்போது அது பற்றிப் பேச இணங்கி வந்துள்ளனராம். இனிவரும் நாள்களில் அது பற்றிப் பேச்சுக்கள் [illegible]ரப் போகின்றன.

இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு கொடுக்கப்பட்டு விட்ட இந்த இரு அதிகாரங்களையும் வழங்குவதா, இல்லையா? என்பது பற்றியே இப்போதும் பேச்சு. ஆனால், 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைமுறையில் உள்ள அதிகாரம் ஒன்றைப் பற்றிப் பேசக் காணோம். அதுதான் ஆளுநரின் அதிகாரம். வடக்கு, கிழக்கு இரு மாகாணங்களிலும் படைகளின் முன்னாள் உயர் நிலை அதிகாரிகளே ஆளுநர்களாகப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். தங்களுக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இவர்கள் போடும் தட்டுத் தாளங்கள் ஏராளம்.

வடக்கில் ஆளுநரின் மிகச் சமீபத்திய தலையீடாக, யாழ். செயலகத்தில் நடைபெற இருந்த பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினருடனான சந்திப்பை தன்னிச்சையாகத் தனது அலுவலகத்துக்கு ஆளுநர் மாற்றியதை ஊடகங்கள் வெளிப்படுத்தின. பிரிட்டிஷ் குழுவுக்கு நிலைமையை விளக்கும்படி யாழ். அரச அதிபரைத்தான் வெளிவிவகார அமைச்சுக் கேட்டுக்கொண்டிருந்தது. அதன் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயலகத்தில்தான் கூட்டம் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், திடீரெனத் தலையிட்ட ஆளுநர் அந்தக் கூட்டத்தைத் தமது அலுவலகத்திற்கு மாற்றினார்.

வெளிவிவகார அமைச்சின் அலுவல்களில்தான் என்றில்லை, பொது நிர்வாக அமைச்சின் அலுவல்களிலும் இவர் அளவுக்கு மீறித் தலையீடுகளைச் செய்கிறார் என்று அமைச்சின் அதிகாரிகள் அழுது வடிகிறார்கள். அண்மையில்கூட தமது அமைச்சு வரம்புக்குள் வரும் நியமனம் ஒன்றுக்காக ஆளுநர் கொழும்பில் நேர்முகத் தேர்வு நடத்தியுள்ளார் என்று குமுறுகிறார்கள். இத்தனைக்கும் அவர்களும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளே. அவர்களுக்கே இந்த நிலை என்றால் தமிழ் அதிகாரிகளின் நிலையை யோசித்தும் பார்க்கத் தேவையில்லை.

இவற்றில்தான் என்றில்லை, பட்டதாரி நியமனங்கள், ஆசிரியர்களின் இடமாற்றம், வடக்கு மாகாண அதிகாரிகளின் நியமனங்கள், இடமாற்றங்கள், பாடசாலை நிகழ்வுகள், அரச பொது நிகழ்வுகள் என்று அனைத்திலும் அவரது தலையீடு இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் திருமண வீட்டில் மாப்பிள்ளை பெண்ணையும் இறப்பு வீட்டில் இறந்த வரையும் தீர்மானிப்பதைத் தவிர வடக்கில் மற்றெல்லாவற்றையும் ஆளுநரே தீர்மானிக்கிறார்.

இத்தகைய அழிச்சாட்டியங்களுக்கான அதிகாரங்களை ஆளுநரின் கைகளில் இருந்து ஒழிப்பது பற்றித்தான் அரசு - கூட்டமைப்புப் பேச்சில் உடனடியாக ஆராயப்படவேண்டும். இல்லையேல், காணி - பொலிஸ் அதிகாரம் மட்டுமில்லை எந்த அதிகாரத்தைப் பெற்றாலும், ஆளுநரின் அதிகாரங்களை ஒழிக்காத வரை அவற்றால் பயனில்லை.

# நீதிக்கான போராட்டம்

ரேணுபிரேம்

“ ரஜீகர் மனோகரனுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் அவர்களது மகனுக்கு என்ன நடந்தது என்று நீதியான விசாரணை ஒன்றை நடத்துங்கள் என்றும் ரஜீகர் மனோகரன் உள்ளிட்ட 5 மாணவர்களதும் கொலை தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கையை வெளியிடுமாறு வலியுறுத்தியும் ஜனாதிபதிக்குக் கடிதங்களை எழுதுங்கள் என்று உலகெங்கும் உள்ள மக்களை குறிப்பாகத் தமிழர்களை சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2ஆம் திகதி திருகோணமலையில் இரவு 7.50 மணியளவில் அந்தப் பயங்கரம் நடந்தது. ஏதுமறியா அப்பாவி மாணவர்கள் ஐவர் மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். பிடித்து வைக்கப்பட்டிருந்த பின்னர் மிக நெருக்கமாக நின்று அவர்களின் தலைகளின் அருகே துப்பாக்கியை வைத்துச் சிலர் சுட்டதில் அந்த ஏதுமறியாச் சிறுவர்களின் உயிர்கள் பிரிந்தன.

அந்தப் பகுதியில் இடம் பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்தே அவர்கள் கொல்லப்பட்டார்கள். “அவர்கள் எடுத்து வந்த கிரனேட் தவறுதலாக வெடித்துத்தான் அந்த ஐந்து மாணவர்களும் உயிரிழந்தார்கள்” என்று கதையை முடித்துவிட அரச தரப்பினரும் படையினரும் முயன்றனர். ஆனால், அந்த ஐவரும் குண்டுச் சிதறல்களால் அன்றி, மிக நெருக்கமாக நின்று சுட்டவர்களாலேயே கொல்லப்பட்டார்கள் என்பதை மறுநாள் சில ஊடகங்கள் ஒளிப்பட ஆதாரங்களுடன் வெளியிட்டன.




மாணவர்களின் தலையின் பின்புறத்திலும் அவர்களின் காதுகளின் கீழும் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்துச் சென்ற ஆதாரங்களை அந்தப் ஒளிப்படங்கள் தெளிவாக நிரூபித்தன. அதன் மூலம் அரசும் படையினரும் மாணவர்களின் கொலைகளை மூடி மறைத்துவிட எடுத்த முயற்சிகள் அம்பலமாகிப்போன கோபத்தில் பின்னாளில் திருமலையில் சுடர்ஒளிப் பத்திரிகையின் செய்தியாளராக இருந்தவரான எஸ்.எஸ்.ஆர். என அழைக்கப்படும் சுகிர்தராஜனும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

5 மாணவர்களும் படுகொலை செய்யப்பட்டு 6 ஆண்டுகள் கடந்து விட்டன. இப்போது இருந்திருந்தால் அவர்களில் சிலர் பொறியியலாளராகவும் மருத்துவர்களாகவும் வந்திருக்கக்கூடும். ஆனால், தமிழனாகப் பிறந்த ஒரு காரணத்தால் அற்ப ஆயுளில் அவர்களின் உயிர்கள் பறிக்கப்பட்டன.

அதற்கான நீதி நியாயம் இன்னும் கிடைக்கவில்லை. கொல்லப்பட்ட மாணவர்களில் ஒருவரான ரஜீகரின் தந்தையான மருத்துவர் மனோகரன் இன்னும் தனது பிள்ளையின் கொலைக்கு நீதி தேடி நாடு நாடாக அலைந்து கொண்டிருக்கிறார்.

மனோகரனின் குடும்பத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று கேட்டு 2011 டிசெம்பர் முதல் வாரத்தில் “உரிமைக்காக எழுதுங்கள்” என்ற இயக்கத்தை சர்வதேச மன்னிப்புச் சபை அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளில் மேற்கொண்டது.

இது தொடர்பாக மன்னிப்புச் சபை வெளியிட்ட அறிக்கையில், “ரஜீகர் மனோகரனும் அவருடன் கூடப்படிக்கும் வேறு நான்கு மாணவர்களும் 2006 ஜனவரி மாதம் 2ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டிருந்தனர். துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் மனோகரனின் காதில் விழுந்திருந்தது. தனது மகனின் கொலை தொடர்பில் சாட்சியம் அளித்தமைக்காக தந்தைக்குக் கொலை மிரட்டல்களும் வந்திருந்தன.

“ஜனவரி 2ஆம் திகதி திருகோணமலைக் கடற்கரையில் கூடிப் பேசிக் கொண்டிருந்த 5 மாணவர்களில் ரஜீகர் மனோகரனும் ஒருவர். அப்போது அந்த வழியாகச் சென்ற ஓட்டோ ஒன்றில் இருந்து அந்த மாணவர்களை [illegible] சிதறி ஓடியிருந்தனர்.

“சிறிது நேரத்தில் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்தவர்கள் என்று நம்பப்படும் சீருடை அணிந்த சிப்பாய்கள் 10, 15 பேர் அங்கு வந்திருந்தனர். காயமடைந்து கிடந்த மாணவர்களை ஜீப்பில் தூக்கிப் போட்டு, துப்பாக்கியின் பின்பக்கத்தால் அவர்களைத் தாக்கியிருந்தனர். பின்னர் தெருவிலே தள்ளிவிட்டும் இருந்தனர். அந்த ஐந்து மாணவர்களையும் அவர்கள் சுட்டுக் கொன்றனர் என்று சாட்சிகள் சொல்கின்றன. அதில் ஒருவர்தான் ரஜீகர்.

“தான் இறப்பதற்குச் சற்று நேரம் முன்பாக ரஜீகர் தனது தந்தையின் தொலைபேசியில் அவசர அவசரமாகப் பேசி தகவல் ஒன்றைப் பதிவு செய்து விட்டிருந்தார். தன்னைப் பாதுகாப்புப் படையினர் சூழ்ந்துள்ளனர் என்று அவர் அதில் தெரிவித்திருந்தார். தந்தையான மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன் அந்த இடத்துக்குச் சென்றபோது மாணவர்கள் உயிருக்காக மன்றாடியதும் அத்தருணத்தில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்ந்ததும் அவர் காதுகளில் விழுந்துள்ளன. இந்த ஐந்து மாணவர்களும் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தே இறந்தனர் என்று உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை கூறியது என்றாலும் அவர்கள் கையெறி குண்டுத் தாக்குதலிலேயே கொல்லப்பட்டனர் என்று படையினர் தெரிவித்தனர்.

“2006 ஜனவரி 10ஆம் திகதி மரண விசாரணையில் சாட்சியம் அளித்த பின்னர் மனோகரனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தல்களும் தொல்லைகளும் தரப்பட்டன. கொலை அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது. கடைசியில் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாடு ஒன்றில் தஞ்சம் கோர வேண்டி வந்தது.

இந்தக் கொலைகள் தொடர்பில் பாதுகாப்புப் படையினர் 13 பேர் கைது செய்யப்பட்டிருந்தார்கள் என்றாலும் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

“இந்தச் சம்பவத்தையும் வேறு 11 சம்பவங்களையும் விசாரிப்பதற்காக ஜனாதிபதி ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்த ஆணையத்தின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அது வெளியிடப்படவேயில்லை.

“சம்பவம் குறித்து முறையான புலனாய்வு எதுவும் இடம்பெறவில்லை. ரஜீகரின் கொலை தொடர்பில் எவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவும் இல்லை.

தனது மகனது கொலைக்குப் பின்னர் அதற்காக நீதி கேட்டுப் பகிரங்கமாகவே போராடும் ஓர் உரிமை ஆர்வலராகவே மனோகரன் மாறிவிட்டார்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, ரஜீகர் மனோகரனுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றும் அவர்களது மகனுக்கு என்ன நடந்தது என்று நீதியான விசாரணை ஒன்றை நடத்துங்கள் என்றும் ரஜீகர் மனோகரன் உள்ளிட்ட 5 மாணவர்களதும் கொலை தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை வெளியிடுமாறு வலியுறுத்தியும் ஜனாதிபதிக்குக் கடிதங்களை எழுதுங்கள் என்று உலகெங்கும் உள்ள மக்களை குறிப்பாகத் தமிழர்களை சர்வதேச மன்னிப்புச் சபை கேட்டுள்ளது.

இந்த மனித உரிமை மீறல் உட்பட இலங்கையில் நடந்த அனைத்து மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் உண்மையான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று குரல் கொடுக்கும்படியும் மன்னிப்புச் சபை தமிழர்களிடம் மன்றாடியுள்ளது. அத்துடன் மனோகரன் குடும்பத்துக்கு ஓர் ஆதரவுக் கடிதத்தை அனுப்பி வைக்குமாறும் அது கேட்டுள்ளது. எங்கள் உரிமைகளுக்காக மட்டுமல்ல எங்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதிக்காகவும் நாங்கள்தான் போராட வேண்டும். மனோகரனுக்குக் கைகொடுப்பதன் மூலம் அதனை இன்றே ஆரம்பிப்போம்




ரஜீகர் மனோகரனும் அவரது நண்பர்கள் நால்வரும் சுட்டுக் கொல்லப்பட்ட சூழல்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேட்குது... மணி ஓசை...!

*பிரிட்டிஷ் ஊடகமான 'கார்டியன் வீக்லி' பத்திரிகையில் 'Letter from' பத்தியில் வெளியான கட்டுரையின் மொழியாக்கம் இது. யாழ்ப்பாணத்தில் இருந்து அதன் செய்தியாளர் லிண்டா கில் எழுதியுள்ளார். அதன் மொழியாக்கம் 'புதினப்பலகை'.*

உலகில் இணையவழி வணிகச் செயற்பாடுகள் நடைபெறும் அதேவேளையில், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படும் வணிகச் செயற்பாட்டு முறைமை ஒன்று இன்ப அதிர்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது.

காலை 5.30 மணிக்கு சைக்கிளின் முதலாவது மணியோசையைக் கேட்கக்கூடியதாக இருக்கும். துவிச்சக்கர வண்டியில் வரும் பாற்காரர் இரும்பால் செய்யப்பட்ட பழைய மத்திலிருந்து பாலை எடுத்து வீட்டுப் பெண்கள் வைத்திருக்கும் போத்தல்களிலும், பாத்திரங்களிலும் பகிர்ந்து வழங்குவார்.

இதனைத் தொடர்ந்து பாண் விற்கும் வண்டி எரிச்சலை ஊட்டக்கூடிய இசையை எழுப்பியவாறு தெருவுக்குள் நுழையும். அதாவது டா டா டா என மீண்டும் மீண்டும் அவ்வண்டி சத்தத்தை எழுப்பும். சிறிய தெருவொன்றிற்கு எவ்வளவு பாண் தேவை என்பதைப் பார்த்தால் நீங்கள் உண்மையில் ஆச்சரியமடைவீர்கள்.

பாண் வண்டியின் சத்தம் அடங்கி சற்று நேரத்தின் பின்னர், கொஞ்சம் வித்தியாசமான, உரத்த ஒலி எழுப்பியவாறு வருகின்ற ஐஸ்கிறீம் வண்டியைக் காணலாம். அநேகமாக இது பாடல்களை ஒலிபரப்பியவாறு வீதிகளில் நுழைவதைப் பார்க்கலாம். பாண் வண்டியுடன் போட்டிபோடும் விதமாக ஐஸ்கிறீம் விற்பவர் தனது வண்டியில் ஒலிபரப்பப்படும் பாடலின் ஒலியை அதிகரித்த வண்ணம் வருவதையும் காணலாம். இது பாலியல் ரீதியாக கவர்ச்சி மிக்க பாடல்களாக வேறு அமைந்திருக்கும்.

செவிப்பறைகள் அதிரும் விதமாக வீதிகளில் வலம் வரும் இவ்வாறான வணிக வண்டிகளின் ஒலிகளின் பின்னர், மீன்விற்பவர் தனது கையில் வைத்திருக்கும் சாதனத்தின் மூலம் ஒலி எழுப்பியவாறு வீதிகளில் நுழைவார்.

அவரது சைக்கிள் மிகவும் பழைமையானதாகவும் உறுதி மிக்கதாகவும் அமைந்திருக்கும். ஆனாலும் மீன் விற்பவரால் எழுப்பப்படும் ஒலி சற்று ஆறுதலைத் தருவதாக அமைந்திருக்கும்.

இவரது வருகையை அறிந்து கொள்ளும் வீட்டுப் பெண்கள் உடனடியாக அவரைச் சூழ்ந்துகொள்வார்கள். குறைந்தவிலையில்சிறந்தமீனைப் பெற்றுக் கொள்வதற்காக அந்தப் பெண்கள் தமது அயலவர்களை முழங்கையால் இடித்துத் தள்ளியவாறு முண்டியடித்துச் செல்வார்கள்.

> “யாழ்ப்பாணத்தில் நீங்கள் பல்பொருள் அங்காடிகளுக்குப் போகத் தேவையில்லை. வியாபாரிகள், சைக்கிள்களில் உங்களைத்தேடி வருவார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஒலி அடையாளங்கள் உண்டு.

மீன் விற்பவருக்கும் வீட்டுப் பெண்களுக்கும் இடையில் பேரம் நடக்கும்,விட்டுக் கொடுப்புக்கள், சமரசம் என்பன இடம்பெற்ற பின்னர் மீன் விற்பனை ஆரம்பமாகும்.

இவரைத் தொடர்ந்து மரக்கறி வியாபாரி வீதிக்குள் நுழைவார். மரத்தாலான தனது பழைய மாட்டு வண்டியில் வியாபாரத்தில் ஈடுபடுவார். ஆனாலும் இவர் புதிய மரக்கறிகளையே விற்பனை செய்வார்.

அதிகாலையில் ஆரம்பித்து ஒரு பகற் பொழுது முழுமையும் முதுமையை எட்டிவிட்ட பல வியாபாரிகள் பல்வேறு பொருள்களை விற்பதற்காக தமது பழைய சைக்கிள்களில் வீதி வீதியாகச் செல்வதைக் காணலாம். இவர்கள் பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குவார்கள். அதாவது சைக்கிள் வண்டிகளைத் திருத்திக் கொடுப்பார்கள். பத்திரிகைகள், மென்பானங்கள் போன்றவற்றை பல்வேறு வித்தியாசமான ஒலிகளை எழுப்பியவாறு விற்பனை செய்வார்கள்.

இவ்வாறு எழுப்பப்படும் ஒலிகளை அடையாளங் கண்டு கொள்வதற்கான எனது அனுபவம் மிகக் குறைவானதே. ஆனால் எனது அயலவர்கள் இதில் கூடிய அனுபவம் கொண்டுள்ளனர். அவர்கள் குறிப்பிட்ட சில மணியொலிகளைக் கேட்கும்போது மட்டுமே தமது வீடுகளை விட்டு மிகவேகமாக வெளியில் வருவார்கள்.

பின்னர் பிற்பகலில் மீண்டும் பாண், ஐஸ்கிறீம் (மீண்டுமா?), மீன், மரக்கறி, அதிர்ஷ்ட லாபச் சீட்டுக்கள் போன்ற பல்வேறு பொருள்கள் விற்பனை செய்யப்படுவதைக் குறிக்கும் ஒலிகளும், சமிக்ஞைகளும் எழுப்பப்படும்.

வானில் பொருள்களை விற்பனை செய்பவர்களும் வீதிகளில் வருவார்கள். சில வேளைகளில் எல்லோரும் ஒன்றாக வருகின்ற சந்தர்ப்பங்களும் நிகழ்ந்துள்ளன. அப்படிப்பட்ட வேளைகளில் வான்களிலிருந்து எழுப்பப்படும் ஒலிகள் ஒன்றுடன் ஒன்று போட்டிபோட்டுக் கொள்வதாக அமைந்திருக்கும். இவை வீட்டுப் பெண்களுக்குத் திகிலூட்டுவதாகவும் அமைந்திருக்கும்.

இவ்வாறான ஒலிகளின் மத்தியில் இசை நிகழ்வுகளும் உள்ளூர் கோயில்களில் மேற்கொள்ளப்படும் விழாக்களின் ஒலிகளும் கேட்கும். எப்போதும் யாழ்ப்பாணத்தில் விழாக்கள் இடம் பெற்றுக் கொண்டேயிருக்கும். இங்கே நிறையத் தெய்வங்கள் காணப்படுவதைப் போலவே பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றனர்.

இதனால் இவர்கள் போட்டி போட்டுக் கொண்டு தமது விழாக்களை ஒலிபரப்புவார்கள். எனது சகோதரி எனக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியிருந்தபோது இங்கே என்ன சத்தம் என என்னிடம் வினவினார். பாண் வண்டி, ஐஸ்கிறீம் வண்டி, மீன் விற்பவர், கோயில், காகங்கள் என பல சத்தங்கள் கேட்கின்றன. அதில் எதைக் குறிப்பிட்டுக் கூறமுடியும் என நான் பதிலளித்தேன்.

இந்தச் சூழல் மிகவும் சத்தம் சந்தடியானது. இங்கு எழுப்பப்படும் ஒலிகள் எரிச்சலை உண்டு பண்ணுபவை. ஆனாலும் இதை விட்டு வேறு வழி எனக்குத் தெரியவில்லை. இணையவழி வணிகமா? வேண்டாம். நன்றி. இதைப் போல் வேடிக்கை எங்கே இருக்கின்றது?



## சிந்திக்க நாம் தயாராகி விட்டோமா?

தானா

தைப்பொங்கல் பண்டிகை நெருங்கி வருகிறது. வழக்கம்போல் வடக்கிலுள்ள இந்துக்கள் இப்போதிருந்தே அதற்காகத் தம்மைத் தயார்ப்படுத்த ஆரம்பித்துவிட்டனர்.

இது தொடர்பாக ஒரு விடயம் மனதைக் குடைந்து வருவதே இங்கே இதனைப் பதிவு செய்துவிடும் முனைப்பைத் தூண்டக் காரணமாகிவிட்டுள்ளது.

நான் வதியும் கிராமத்தில் எனது வீட்டை அண்டிய பகுதியொன்றில் கணிசமான கிறிஸ்தவர்கள் வாழ்கிறார்கள். அவர்களது வழிபாட்டுக்கு என தேவாலயம் ஒன்று அங்குண்டு.

கிறிஸ்மஸ் தினத்தை அண்டிய நாள்களில் அவர்கள் வாழும் பகுதிகளை கட்டிவிடும் கிறிஸ்மஸ் தினத்துக்குச் சில நாள்கள் முன்பிருந்தே அந்தப் பகுதியில் வாழும் இளைஞர்கள், சிறுவர்கள் ஏன் பெரியவர்களும்கூட பட்டாசு கொளுத்தி மகிழ ஆரம்பித்துவிடுவது வழக்கம்.

பிறகென்ன கேட்கவா வேண்டும்? இரவு பகலென்ற பேதம் எதுவுமின்றி அந்த நாள்களில் அப்பகுதி வெடிச்சத்தத்தில் அதிரும். கிறிஸ்மஸ் தினத்தையும் தாண்டி புத்தாண்டு, ஜனவரி முதலாம் திகதிவரை அது நீளும்.

காது செவிடுபடும் அளவுக்கு சத்தம் எழுப்பும் வெடிஓசை ஒருபுறம். வானத்தில் சீறிப்பாயும் ஈர்க்கு வாணங்களின் 'சர்' என்ற ஒலி ஒருபுறம். மொத்தத்தில் பட்டாசுச் சத்தங்களால் அந்தப் பகுதியென்ன சூழவுள்ள பிரதேசமே அதிரும். வீட்டு நாள்களெல்லாம் வெடிச் சத்தம் கேட்டு பயந்து, மிரண்டு எங்காவது மூலைகளில் போய் ஒளிந்து கொள்ளும்.

அது மட்டுமல்லாது, அந்தப் பகுதி இளைஞர்களில் ஒருவர் 'நத்தார் பாப்பா'வாக வேடம்புனைந்து, ஏனைய இளைஞர்களும் உடன் திரண்டுவர அந்தப் பகுதி வீடுகளுக்குச் சென்று கிறிஸ்மஸ் வாழ்த்துத் தெரிவிப்பதுண்டு. எங்கள் பகுதிச் சிறுவர்களும் கிறிஸ்மஸ் தாத்தாவின் வருகையை ஆவலோடு எதிர்பார்ப்பார்கள். வாத்தியக் கருவிகளை இசைத்தவாறு வீட்டுக்குவீடு சென்று ஆடிப்பாடும் அவர்களை உற்சாகப்படுத்தவும், கௌரவிக்கவும் என நாமும் அவர்களுக்குக் குளிர்பானம், பிஸ்கெட்டுக்கள் வழங்கி மகிழ்வதுண்டு.

வழக்கத்துக்கு மாறாகக் கடந்து சென்ற கிறிஸ்மஸ் நாள்களில் அத்தகைய கொண்டாட்டத்தை அவர்கள் மத்தியில் காணமுடியவில்லை. ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில வெடிச் சத்தங்கள் அந்த நாள்களில் கேட்டனவே ஒழிய முன்னைய வழக்கமான 'வெடி மழை' பொழியவே இல்லை. போதாததற்கு 'கிறிஸ்மஸ் தாத்தா' இம்முறை தலையைக் காட்டக்கூட இல்லை.

என் வீட்டுச் சிறுவர்களுக்கும் 'கிறிஸ்மஸ் தாத்தா' வராததால் ஏமாற்றம்தான். காரணம் கேட்ட அவர்களுக்கு நொண்டிச் சாக்குச் சொல்லிச் சமாளித்தேன்.

இருந்த போதிலும் 'கிறிஸ்மஸ் தாத்தா' காணாமற்போனமைக்கான காரணங்களை அறிய எனது மனம் துடித்துக்கொண்டே இருந்தது. பின்னர் ஒரு நாளில் அந்தப் பகுதியைச் சேர்ந்த நண்பர் ஒருவரைச் சந்தித்த போது சந்தேகத்தை அவரிடம் கேட்டே விட்டேன். அவரது பதிலோ ஆச்சரியம் தந்தது.

கிறிஸ்மஸ் தினத்துக்கு முன்னர் வந்த ஞாயிற்றுக்கிழமையன்று தேவாலயப் பூசையில் சுவாமி (அந்தப் பகுதித் தேவாலயத்தின் பங்குத் தந்தை), ''இந்த முறை கிறிஸ்மஸ் பண்டிகையை நாங்களெல்லாம் ஆடம்பரம் இல்லாமல் எளிமையான முறையில் கொண்டாடுவோம். வன்னிப் போரில் சிக்கி உயிரிழந்த எமது அப்பாவித் தமிழ் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவும், போர் காரணமாக ஏதிலிகளாகித் துன்பத்தையும் துயரையும் சமந்து கொண்டு நடைப் பிணங்களாக வாழும் எமது உறவுகளுக்காக மனதார ஒரு கணம் பிரார்த்தனை செய்யவும் நாம் எமது ஆடம்பரங்களைக் கைவிட்டு அன்றைய தினம் எளிமையாகக் கிறிஸ்மஸ் கொண்டாடுவோம் என எங்களை வேண்டிக் கொண்டார். சுவாமியாரின் வார்த்தைகளுக்கு நாம் எப்போதும் மதிப்பும் மரியாதையும் கொடுப்பவர்கள். அதனால் அவரது வேண்டுகோள் படியே இந்தமுறை கிறிஸ்மஸ் பண்டிகையை மிக எளிமையாகக் கொண்டாடினோம்.

இப்படிப் பதில் சொன்னார் அந்த நண்பர். அவர் கூறிய அந்த விடயம் என்னை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டியது. அத்தோடு என் அனுபவமும் நினைவில் வந்தது.

அண்மைக் காலமாக இந்தச் 'சீன வெடிக் கலாசாரம்' எங்கள் மத்தியில் பெரும் அளவில் ஊடுருவி அலைக்கழிக்கிறது. தைப்பொங்கலில் தொடங்கி, புதுவருடம், தீபாவளி, கொண்டாட்டம், இறப்பு வீடு வரை தொடரும் இந்தக் கலாசாரம் கொஞ்ச நஞ்சக் காசையா கரியாக்குகிறது? காதைச் செவிடுபட வைக்கும் அதிர்வால் என்ன சுகத்தை எம்மால் அனுபவிக்க முடிகிறது?

கடந்த தீபாவளித் தினத்துக்கு முன்தினம் நான் அலுவலகத்தை விட்டு வீட்டுக்குப் புறப்பட்டபோது நேரம் இரவு 7 மணி. 'டைனமோ' வெளிச்சம் இல்லாத சைக்கிளில் குறுக்குப் பாதையால் சென்று பலாலி வீதியில் ஏறியபோது, சந்தியில் கூடிநின்ற பத்துக்கும் மேற்பட்ட இளசுகள், - அவர்கள் வேண்டுமென்றே செய்தார்கள் என்றுதான் இன்றைக்கும் நம்புகின்றேன் - இரண்டு சீன வெடிகளைக் கொளுத்தி எனது சைக்கிள் சில்லுகளுக்குள் போட்டனர். பயங்கரச் சத்தத்தோடு காலுக்குக் கீழே அவை வெடிக்க நான் வெருண்டு அருகிலிருந்த கானுக்குள் விழ.... ''சொறி அங்கிள், வெரி வெரி சொறி, நாங்கள் உங்களைக் கவனிக்கவில்லை'' என்பதுடன் எல்லாப் பிரச்சினைகளையும் முடித்துக் கொண்டன அந்த இளசுகள். என்ன செய்வது பூனைக்கு விளையாட்டு; சுண்டெலிக்குச் சீவ மோசம்.

எனக்குத் தெரிந்த எங்கள் ஊர் பெரியவர் ஒருவர், வன்னி இறுதிப் போர் வேளையில் பரந்தனில் இருந்தார். போர் உக்கிரம் பெறக் கூட்டத்தோடு கூட்டமாக முள்ளி வாய்க்கால்வரை ஓடிக் களைத்து ஒருவாறு உயிர் தப்பி மீண்டார். இப்போது இடைக்கிடையே நாங்கள் சந்திக்கும் வேளைகளில் அது போர்க் காலத்து வன்னி வாழ்க்கை குறித்த அனுபவங்களை அவர் விவரிப்பதுண்டு. இத்தனைக்கும் அவர் வருடங்களாக இருதய நோயாளியாக அடையாளப்படுத்தப்பட்டவர். வன்னிப் போரின் வேட்டுச் சத்தங்களால்கூட தனது இருதய இயக்கத்தை நிறுத்த இயலாது போய்விட்டதென்று அவர் சிலாகித்துக் கொள்வதுண்டு. ஆனால் தன்னால்கூட அண்மைக்கால சீன வெடிச் சத்தங்களைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்று ஆதங்கத்துடன் தெரிவிப்பார்.

தைப் பொங்கல் நெருங்கி வருவதை நினைக்கையில் எனக்கும் கூட ஒரு மாதிரிப் படபடப்பாகத் தான் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எது பாவம் ? எது புண்ணியம் ?

பாவ, புண்ணியம் என்றால் என்ன என்பது பற்றிய இந்துமதக் கோட்பாடு நுட்பமானது. ஆச்சரியமானது. மனிதனை நெறிப்படுத்தும் வலிமையுடையது.

ஆனால் எது பாவம்? எது புண்ணியம் ?என்பதை முடிவு செய்யக் கூர்மையான அறிவு வேண்டும். அரை குறை சமயவாதிகள் மேம்போக்காகச் சில விஷயங்களைக் கவனித்துவிட்டு ''இவர் புண்ணியசாலி. அதனால்தான் நிறைய கார், பணம், சொத்து வைத்திருக்கிறார் '' என்று புகழுகிறார்கள்.

இன்னும் சிலரை ''மகாபாவி...அதனால்தான் தூக்கி வைத்துக் கொஞ்சக் குழந்தை கூட இல்லை...மலடு '' என்றெல்லாம் பண்பாடு இல்லாமல் குறைகூறுகிறார்கள். இந்த விஷயங்களில் தீர்ப்புச் சொல்ல நமக்குத் தகுதி கிடையாது. சில சமயத்தில் நாம் எதைப் பாவம் என்கிறோமோ...அது பாவமாக இருக்காது... எவரைப் பாவி என்கிறோமோ அவர் புண்ணியசாலியாக இருப்பார்.

அவர் ''செய்த புண்ணியம்... மெத்தை வீடு, சுகமான மெத்தை...ஏகப்பட்ட வேலையாள்...கொடுத்து வைத்த மகராசன்'' என்று சிலரைச் சொல்வோம் என்று கூறுவதுண்டு. ஆனால் அதற்கு நேர்மாறாக நினைக்கவும் வாய்ப்பு உண்டு.

அயோத்தியை ஆண்ட தசரத மகாராசாவுக்குக் குழந்தை இல்லை. பெரும் செல்வம் . நாடு, புகழ் எல்லாம் உடையவர். ஆனால் அவருக்கு குழந்தை என்கிற மக்கள் செல்வம் இல்லை. எல்லாம் இருந்தும் பிள்ளை இல்லையே என்று வருந்தினார். அடுக்கி வைக்க ஆயிரம் பொருள் இருந்தாலும் அதைக் கலைத்துப் போட ஒரு பிள்ளை இல்லாவிட்டால் என்ன சுகம்? என்பார்கள். ''கட்டில் ஆடி என்ன பயன்... தொட்டில் ஆடவில்லையே'' என்று பலர் ஏளனமாகக் கூடச் சொல்லுவார்கள்.

சாதாரணமாக ''பாவம்... அவருக்குப் பிள்ளை'' இல்லை என்றுதானே சொல்வோம். தசரதர் என்ன பாவியா? இல்லையே கைவண்டி இழுக்கிற ஏழைக்கு எட்டாவதாக ஒரு பிள்ளை பிறந்தால் அவர் ரொம்ப புண்ணியவான் என்று சொல்ல முடியுமா? ஏற்கனவே ஏழு குழந்தைக்குச் சோறு இல்லை. இப்போது எட்டாவது வேறு. இது எப்படி புண்ணியம் ஆக முடியும்? எனவே அவசரப்பட்டு பாவ புண்ணியம் பற்றி நாம் ஒரு முடிவுக்கு வரக் கூடாது.

தசரதர் மிகப்பெரிய புண்ணியவான். மிக மிக அதிகமாகப் புண்ணியங்கள் செய்தமையால் சராசரி ஆன்மா அவருக்குப் பிள்ளையாகப் பிறக்க முடியாது. சாட்சாத் திருமாலே வந்து பிள்ளையாகப் பிறந்தால்தான் அவர் புண்ணியத்துக்கு ஈடாக முடியும். எனவே நாராயணரே அவருக்கு மகனாக வந்தார். தமது ஆதிசேஷன், சங்கு, சக்கரம் அடுத்தடுத்த தம்பிகளாக வேறுபிறக்கச் செய்து தசரதர் புண்ணியத்துக்குப் பரிசு தந்தார் . எனவே மிகுந்த புண்ணியத்தின் பலனாய் தசரதருக்கு நீண்டநாள் குழந்தை இல்லை. இப்படியும் அவரைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கலாமே.


ஒருவரைக் கோவிலுக்கு அறங்காவலராக நிர்வாகியாக நியமித்தார்கள். உடனே எல்லோரும் ஆஹா.. மிகப் பெரிய புண்ணியவான். அதனால்தான் கடவுளுக்கே படியளக்கும் அறங்காவலர் ஆகிவிட்டார் என்று வாழ்த்தினார்கள். ஒரு சாது மட்டும் ''ஐயா'' நீங்கள் ஏதோ பெரிய பாவம் செய்திருக்க வேண்டும். அதனால்தான் கடவுள் உம்மை இப்படித் தண்டித்து விட்டார் என்றார். சொல்லிவிட்டு அவரே ஒரு கதையும் சொன்னார்.ஸ்ரீ ராமபிரான் அயோத்தியை ஆண்டபோது ஒரு மூடன் ஒரு நாயைக் கல்லால் அடித்துத் துன்புறுத்திவிட்டான். நாய் பெருந்துயரோடு அழுது கொண்டு இராமரிடம் போய் நீதி கேட்டது. வழக்கை விசாரித்து அறிந்த இராமர் அந்த மூடனைக் கைது செய்ய உத்தரவிட்டார். உத்தரவின்படி கல்லால் அடித்தவன் கைது செய்யப்பட்டு இராமனிடம் அழைத்து வரப்பட்டான் அவனுக்கு என்ன தண்டனை தர வேண்டும் என்று நாயிடமே கேட்டார் ஸ்ரீராமன்.

குறும்பாகச் சிரித்தபடி நாய் ''அவனை ஒரு கோயிலுக்கு அறங்காவலராக ஆக்கிவிடுங்கள் என்று கூறியது.

இதைப் புரிந்து கொள்ள முடியாத இராமர் இது எப்படித் தண்டனையாகும்? என்று நாயிடம் கேட்டார் இராமர்.

நாயை அடித்தவனுக்குச் சட்டப்படி தண்டனை மிகக் குறைவு. இப்படிப்பட்டவன் கோவில் நிர்வாகியானால் சின்னத் தப்பு செய்தாலும் பெரும் தண்டனையை இறைவன் தருவார். ஏனெனில் கடவுள் சொத்தை அடைவது மகாபாவம். எனவே இவன் பெரிய தண்டனையை அப்போது அடைய நேரிடும் என்றது நாய்.

இது பகவான் இராமகிருஷ்ணர் சொன்ன கதை. படகு ஒரு நாள் வண்டியில் ஏறி பயணம் செய்ய நேரும். வண்டி ஒருநாள் படகில் ஏற வேண்டி வரும். பாவம் ஒரு நாள் புண்ணியமாகலாம். புண்ணியம் ஒருநாள் பாவமாகலாம்.




எனவே எது பாவம்? எது புண்ணியம்? என்பதை முடிவு செய்வதில் கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருப்பது நல்லது.

என்ன இனி எடுத்ததற்கெல்லாம் பாவ, புண்ணியம் பார்க்க மாட்டீர்கள் இல்லையா?

சுகி.சிவம்

# அற்புதங்கள் நிகழ்த்திய சுதுமலை புவனேஸ்வரி



1775 ஆம் ஆண்டு காலப்பகுதியில் குடிசையாக இருந்த சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயம் 1822 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கட்டடமாக மாற்றம் பெற்றது.

ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழாவானது பதினெட்டுத் தினங்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின்வளர்ச்சியாக கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் முதலியன ஆகமமுறைப்படி வைரக்கற்களால் செப்பனிடப்பட்டு ஸ்தம்ப மண்டம், வசந்த மண்டபம், யாகசாலை என்பவற்றை சீராக நிர்மாணம் செய்து விநாயகர், சுப்பிரமணியர், நந்தி, பலிபீடம், நவக் கிரகம், வைரவர் முதலிய பரிவார மூர்த்திகள் முறைப்படி பிரதிஷ்டை செய்து 1919 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

மகாகும்பாபிஷேகம் நடைபெற்றதைத் தொடர்ந்து வருடம் தோறும் வரும் வைகாசி மாதத்தில் 18 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறுகின்றன. பதினெட்டுத் தினங்கள் சிறப்பாக திருவிழாக்கள் இடம்பெற்று பூரணை தினத்தில் தீர்த்தத் திருவிழாவுடன் திருவிழா நிறைவடைவதும் ஆலயத்தின் தனிச் சிறப்பாகும்.

ஆலய வளர்ச்சிக்குப் பெரிதும் அர்ப்பணிப்பான சேவையை இன்றும் கதிர்காமர் வேலாயுதர் பரம்பரையினரே செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதற்கமைய இன்று பிள்ளையார், சுப்பிரமணியர், சந்தான கோபாலர், நவக்கிரகம், வைரவர், சண்டேஸ்வரி, சமயக்குரவர்கள், சூரியன், சந்திரன் ஆகியோருக்குத் தனித் தனியான கோயில்களைக் கொண்டு சுதுமலைப் பிரதேசத்திலேயே சிறப்பு வாய்ந்த ஆலய மாக இந்த ஆலயம் விளங்குகின்றது.

> அம்பிகையை வழிபடும் மூன்று முக்கிய முறைகளான மந்திரம்,தந்திரம்,யந்திரம் என்பன இன்றுவரை இந்த ஆலயத்தில் பின்பற்றப்படுவது சிறப்புக்குரியது

அம்மனின் அருளாட்சியை பறைசாற்றும் முகமாக ஆலய இராஜ கோபுரம் வானுயர்ந்து காட்சியளிக்கின்றது. ஆலயத்தின் ஆதிமூலத்தின் மேல் உள்ள விமானம் சமய தத்துவங்களையும், கலாசாரங்களையும், எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. இந்த இடத்திலேயே அடியவர்கள் பொங்கிப் படைத்து வழிபட்டு அம்மனின் அருளைப் பெறுகின்றனர்.

அத்துடன் தினமும் நடைபெறும் காலைப் பூசையின் போது விருட்சத்திற்கென சிறப்பான பூசை வழிபாடும் இடம்பெற்று வருகின்றது. ஆலயத்தின் இன்னொரு விசேட நிகழ்வாக வருடா வருடம் இடம்பெறும் தேர்த்திருவிழாவின் போது ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆடி அசைந்து வீதியுலா வரும் போது அன்னைக்கு முன்பாக முருகன், விநாயகர் தேர்களும் வீதியுலா வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

இந்தத் தேர்ப்பவனி இடம்பெறும் போது அம்பிகை அடியார்கள் ஆலயத்தின் கிழக்கு வீதியில் பொங்கிப் படைத்து எல்லாம் வல்ல தாயை மனம் உருகி வழிபாடு செய்வது தலத்துக்கே ஒரு தனிச் சிறப்பான விசேட நிகழ்வாகக் கொள்ளப்படுகிறது. ஆலயத்தில் வருடாவருடம் இடம்பெறும் திருவிழாக்காலங்களில் மட்டுமல்லாது விசேட தினங்கள் மற்றும் நேர்த்திக் கடன்கள் கழிக்கும் மக்களது பூசை நிகழ்வுகள் போன்றவற்றின் போதும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் முகமாக மேள வாத்தியங்கள் இசைக்க அம்மனுக்கு வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. ஆலயத்தின் ஆரம்ப காலம் முதல் கதிர்காமம் வேலாயுதர் எனும் பெரியவர் நெருங்கிய தொடர்புடையவராகவும், ஆலயத்துக்குத் தேவையான தொண்டுகளைச் செய்பவராகவும் விளங்கியுள்ளார். இதன் விளைவாக அவருடைய பரம்பரையைச் சேர்ந்தவர்களே ஆலயப்பணிகளை மேற்கொண்டு வந்தனர்.

1980 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ். மாவட்ட நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக ஆலயம் பரம்பரை தர்மகர்த்தா சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஆலயத்தின் தர்மகர்த்தா சபையில் குமாரசாமி கணேசதாசன், கணபதிப்பிள்ளை பேரம்பலம், சுப்பிரமணியம் சண்முகநாதன் ஆகியோர் இருந்து வருகின்றனர்.

ஏனைய எல்லா வளமும் எல்லாச் சிறப்பும் இருந்தாலும் நற்செயல்கள் உள்ள இல்லான் இல்லாவிடில் வீட்டுக்கு விளக்கமில்லை என்பார்கள். அதே போன்று ஒரு நிலையில் ஆலய விளக்கத்துக்கு உரியவராயிருப்பவர் அர்ச்சகர் ஆவார்.

இந்தக் கோயிலை 1775 ஆம் ஆண்டு மானிப்பாயில் வசித்து வந்த பொன்னம்பல முதலியாரும், மண்ணும் ஓலையுமாக ஆலயம் இருந்த போது கதிர்காமரும், அதனைத் தொடர்ந்து அவருடைய மகன் வேலாயு தராலும் பூசை செய்யப்பட்டன.

1822 ஆம் ஆண்டு கொழும்பு முத்துச்சாமி முதலியாரும் கதிர்காமர் வேலாயுதராலும் கல்லால் கோயில் அமைக்கப்பட்டபோது சுப்பையாக் குருக்கள் அர்ச்சகராகச் சேவையாற்றினார். அதனைத் தொடர்ந்து தியாகராஜக் குருக்கள், பொன்னுச் சாமிக் குருக்கள், தியாகராஜா ஐயரும், சிவஸ்ரீ சம்புகேஸ்வரக் குருக்கள் மகேஸ்வரக் குருக்கள் என அம்மனுக்கு பூசைகளைச் செய்து வந்தனர்.

ஆலயத்தின் மூலஸ்தான வெளிப்புறச் சுவர்களில் தெற்கில் நிர்த்த கணபதி மகேஸ்வரி மேற்கில் வைஷ்ணவி, வடக்கில் பிராம்மி, துர்க்கை ஆகிய கோஸ்த தேவதைகள் அமைந்துள்ளன. ஏகதளமாக இருந்த விமானம் துவிதளமாக அமைக்கப்பெற்ற அழகானசிறப்பு வேலைப்பாடுகளுடன் தற்போது காட்சி தருகின்றது.

இந்த மத புராணக் கதைகளைச் சித்திரிக்கும் தெய்வீக உருவங்கள் கொண்ட கண்கவர் சித்திரத் தேர் என்றும் அழகே உருவான தேர்முட்டி, கேணி, தீர்த்தக்கிணறு, உள்வீதி, கொட்டகைகள் போன்றன பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு அழகாக காட்சி தருகின்றன.

அம்பிகை வழிபடும் முறைகளுள் மூன்று முக்கிய முறைகள் இன்றும் நடைமுறையில் உள்ளன. மந்திரம், தந்திரம், யந்திரம் என்பன பின்பற்றப்படுவது சிறப்புக்குரியதாகும். அத்துடன் வருடந்தோறும் ஆடி மாதத்தில் இலட்சார்ச்சனை தினமாகிய பத்துத் தினங்களிலும், ஆடிப் பூரத்தில் நடைபெறும் கன்னியா பூஜாதினத்திலும், அம்பிகை ஸ்ரீ சக்கர பூசை சிறப்புற நடைபெற்று வருகின்றது.

## சோபனா

ஆலயத்தில் இடம்பெற்ற அற்புதச் செயலாக அர்ச்சனையில் பழங்கள் காணாமல் போனதையிட்டு மனம் நொந்தபோது பழங்கள் பாம்புகளாகக் காட்சி கொடுத்தன. கர்ப்பிணிப் பெண்களுக்கு உதவி தேவைப்பட்டபோது அம்பாள் காட்சி கொடுத்து பிரசவம் பார்த்தார். மூதாட்டி ஒருவர் தனது தலையில் பேன் பார்க்கும்படி சிறுமியை அழைத்துப் பார்க்கச் சொன்னபோது தலைமுழுவதும் கண்கள் காணப்பட்டன. இது போன்ற அற்புதச் செயல்கள் இடம்பெற்றதாக ஆலய வரலாற்றுச் சம்பவங்கள் எடுத்துக் கூறுகின்றன.

அம்பாள் அடியவர்களுக்கு மட்டும் அல்லாது பிரதேச மக்களின் பக்தி நிலையுடன் ஒன்று கூடியுள்ள சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம். மேலும் பல அருளாட்சிகளைக் கொடுத்து சிறப்புற விளங்கும் என்பதில் ஐயமில்லை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடித்தது நினைவுச் சிலை; இராணுவத்தில் இதில் தொடர்பா?

கொழும்பு,ஜன.6

பல்வேறு வகையான இடர்களின்போது மரணித்த ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களுக்காக பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட நினைவுச் சிலையில் வெடிப்புச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2.45 மணியளவில் இடம்பெற்றதாக அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றிய ஏற்பாட்டாளர் சஞ்சீவ பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து உடனடியாக பொலிஸ் அவசர சேவைப் பிரிவுக்கும் , மிரிஹான பொலிஸுக்கும் அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். இந்தச் சிலைக்கு அதிக சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இத்தகைய செயலை சாதாரண மாணவர்கள் மேற்கொண்டிருக்க முடியாது. இந்தச் சம்பவத்துடன் இராணுவத்தினருக்கு நேரடியாகவோ, மறைமுகமாவோ தொடர்பு இருக்கவேண்டும் என்று தான் நம்புவதாக அவர் சுட் டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில் அனைத்து பீட மாணவர்களும் தற்போது வகுப்பு பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருவதாகவும், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரையில் வகுப்புக்குச் செல்லப்போவதில்லை என்றும் மாணவர்கள் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். இந்தப் பல்கலைக் கழகத்தில் இருந்த நினைவு சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிலையின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. இந்தச் சிலை வெடிப்புச் சம்பவம் ஒன்றின் மூலமே தகர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி.என்.எல். ஏ.கருணாரட்ணவிடம் நாம் தொடர்பு கொண்டு கேட்டபோது; பல்கலைக்கழகத்தின் நடவடிக்கைகளை சீர்குலைக்கும் சில மாணவர்களின் முறைகேடான சம்பவமாக இதைக் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நினைவுச் சிலை சேதமாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றில் நேற்று வியாழக்கிழமை ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தால் வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

(ச-2)

## மஹிந்த ஜனாதிபதியால் வீதியில் வாழவேண்டிவரும்

### சந்திரிகா உதவியதாக விக்கிலீக்ஸ்

கொழும்பு,ஜன.6

மஹிந்தராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவானால், தாம் வீதியில் வாழவேண்டிய நிலை ஏற்படும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

தாம் பதவியில் இருந்து விலகிச்செல்லும்போது ராஜதந்திரிகளுக்கு வழங்கிய விருந்துபசாரத்தின்போதே சந்திரிகா இந்தக் கருத்தை வெளிப்படுத்தியதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தகவலை அமெரிக்காவின் அப்போதைய தூதர் ஜெப்ரி லக்ஸ்டெட் அமெரிக்க ராஜாங்க திணைக்களத்துக்கு கேபிள் மூலம் அறிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க,தேர்தலில் வெற்றி பெற்றால் தமது பொது வாழ்க்கை தொடர்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சந்திரிகா குறிப்பிட்டதாக அப்போதைய அமெரிக்கத் தூதர் தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (ச)

## பாவனைக்கு உதவாத முத்திரைகள் மீட்பு

### 18 மில்லியன் பெறுமதியானவை

கொழும்பு,ஜன.6

தபால் திணைக்களத்தில் பாவனைக்குதவாத 18 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதி வாய்ந்த முத்திரைகள் கைப்பற்றப்பட்டதாக தபால் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

முத்திரை அலுவலகங்களில் உள்ள பெட்டகங்களில் இந்த முத்திரைகள் மீட்கப்பட்டதாக தபால் சேவைகள் அமைச்சரின் செயலாளர் ஹேமசிறி பிரனாந்து தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக இந்த முத்திரைகள் பெட்டகங்களில் வைக்கப்பட்டிருந்ததன் காரணமாகவே பாவனைக்குதவாத நிலையில் தற்போது காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தபால் திணைக்களத்தில் உள்ள தொழிற்சங்கம் ஒன்று தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, ஒரு விசேட குழு நாரஹேன்பிட்டியவிலுள்ள தபால் திணைக்களத்தின் அலுவலகத்தில் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் விளைவாக இந்த முத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. இந்த முத்திரைகளைக் கணக்கிடுவதற்காக நாரஹேன்பிட்டி தபால் திணைக்களத்தின் களஞ்சிய சாலைக்கு கையளித்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த முத்திரைகளில் அதிகளவானவை பாவனைக்குட்படுத்த முடியாத அளவுக்கு அதிகமாகச் சேதடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த முத்திரைகளை சர்வதேச சந்தையில் விற்பனை செய்து தபால் திணைக்களத்திற்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## புனர் நிர்மாணத்திலும் பங்களிப்பு

கொழும்பு,ஜன.6

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவை புனர்நிர்மாணம் செய்யும் நடவடிக்கைகளுக்காக பணம் சேகரிக்கும் நடவடிக்கைகளில் தானும் ஈடுபடப் போவதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கட்சியின் தலைமையகத்தை தாக்கி சேதப்படுத்தியவர்கள் துரோகிகள் என்று அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால பயணத்திற்கான இடையூறுகளை அனுமதிக்கப் போவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



ஐக்கிய தேசியக் கட்சியின் புது வருட கொண்டாட்ட நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ரணில் விக்கிரமசிங்க, திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோர் கலந்து கொண்டார்.

## பெற்றோலில் கலப்படம்; உயர்அதிகாரிகள் தொடர்பு

**மண்ணெண்ணெய் கலப்படம் செய்த பெற்றோலைப் பயன்படுத்துவதனால் வாகனங்களுக்கு அதிகளவில் சேதம் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக பெற்றோலிய வள அமைச்சர் குற்றஞ்சாட்டுகிறார்**

கொழும்பு,ஜன.6

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்திய எண்ணெய் நிறுவனம் ஆகியவற்றினால் விநியோகம் செய்யப்படும் பெற்றோலில் கலப்படம் செய்யப்படுகின்றது.

இதில் உயர் அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாக பெற்றோலிய வள அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குற்றம் சுமத்தியுள்ளார்.

பெற்றோலில் கலப்படம் செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

பெற்றோலுடன் மண்ணெண்ணை கலப்படம் செய்த பெற்றோலைப் பயன்படுத்துவதனால் வாகனங்களுக்கு அதிகளவில் சேதம் ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடுவெல , குருநாகல், கந்தளாய் போன்ற பிரதேசங்களை மையமாகக் கொண்டு இந்த மோசடி இடம்பெற்றுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

தரம் குறைந்த பெற்றோலை விற்பனை செய்த எம்பிலிபிட்டிய, அபராதுவ பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

பெற்றோலில் கலப்படம் செய்த 13 பேர் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் பிளவு

கொழும்பு,ஜன.6

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்குதல் மற்றும் 13ஆம் திருத்தச் சட்டமூல அமுலாக்கம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் அதிகளவு பிளவு ஏற்பட்டுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.


காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படமாட்டா என்று அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அண்மையில் தெரிவித்திருந்தபோது, அதற்கு முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த சிலர் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

முஸ்லிம் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அவசியமில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சில சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று கட்சியின் முதன்மை உறுப்பினர்கள் கோரி வருவதாகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச)

## பாதாள உலகக்குழு உருவாவதை ஒருபோதும் தடுக்க முடியாது

### அமைச்சர் விமல் வீரசன்ச கூறுகிறார்



கொழும்பு,ஜன.6

இலங்கையில் பாதாள உலக குழுக்கள் உருவாவதை பொலிஸாராலும், பாதுகாப்புப் பிரிவினராலும் தடுக்கமுடியாது என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் பிரிவினர் தற்போதுள்ள பாதாள உலகக் குழுக்களை ஒழிக்க முடியும், எனினும் பாதாள உலக குழுக்கள் உருவாவதை தடுக்க முடியாது என்று அவர் தெரிவித்தார்.

பாதாள உலகக் குழுக்கள் வறுமையினாலேயே உருவாகிறது. சமூகத்துடன் இணைந்து வாழக்கூடிய சந்தர்ப்பம் இருக்குமாயின் குற்றவாளிகள் உருவாவதற்கான சந்தர்ப்பம் குறைவடையும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ச)

## புனர்வாழ்வு அளிக்க நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,ஜன.6

வன்னியில் போர் முடிவிற்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் அகதி முகாம்களில் இருந்த வேளையில் கைது செய்யப்பட்ட 11 விடுதலைப்புலி சந்தேக நபர்களுக்கு புனர்வாழ்வு அளிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பூஸா தடுப்பு முகாமில் இருந்த இவர்கள் ஆரம்ப கட்ட விசாரணைகளில் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தமை தெரிய வந்துள்ளதாக பயங்கரவாத தடுப்புப் பிரிவு நேற்றுமுன் தினம் புதன்கிழமை நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இவர்களுக்கு மறுவாழ்வு அளித்த பின்னர் அவர்கள் தொடர்பிலான அறிக்கையை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு பயங்கரவாத தடுப்புப் பிரிவினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)

## சந்தேகநபர் கைது

கொழும்பு,ஜன.6

மினுவாங்கொட, மாதம்மன பகுதியில் ஹொட்டல் ஒன்றின் முகாமையாளர் உட்பட மூவரை சுட்டுக் கொன்ற சந்தேகநபரை பொலிஸார் நேற்றுமுன் தினம் கைது செய்துள்ளனர்.

இந்த நபர் மினுவாங்கொட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். இந்தக் கொலைச் சம்ப வம் 2010 ஆம் ஆண்டு நவம்பர் 4 ஆம் திகதி இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/முருகானந்தா கல்லூரி

## பெயர்மாற்றமும் - பெயர்ப்பலகை திறப்பு விழாவும்



### அரச அதிபரின் ஆசிச்செய்தி



கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் பெயர் பூத்த 1-A B தரத்தினைக் கொண்ட முன்னணிப் பாடசாலையாக விளங்குவது கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம் ஆகும். 1939.01.16ந் திகதி ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையில் 30 மாணவர்களும், 07 ஆசிரியர்களும் அன்று இருந்த னர். 1940இல் இந்துபோட் சபையினாலும், 1963ஆம் ஆண்டு அரசினாலும் பொறுப்பேற்கப்பட்டது. 1980-1992ஆம் ஆண்டுகாலப்பகுதிகளில் உயர்தர, கலை, வர்த் தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு அதன் வளர்ச்சிப் பாதையில் பல மாணவர்களை பல்கலைக்கழகம் அனுப்பி பெருமை கொண்டது. 1996-2008ஆம் ஆண்டுக ளில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளால் இடம் பெயர்ந்து பெரும் பாதிப்புக்குள்ளான போதும், மீண்டும் 2010ஆம் ஆண்டளவில் புத்துயிர் பெற்று வளர்ச்சியில் வீறுநடை போட்டு வருகின்றமை மிகவும் பாராட்டுதலுக் குரியது. தற்போது 425 மாணவர்களும், 30 ஆசிரியர்களும் கடமையாற்றி வரும் இப்பாடசாலையானது அரசினதும் ஏனைய நிறுவனங்களினதும் உதவிகளைப் பெற்று அபிவிருத்தி கண்டுவரும் இவ்வேளையிலே கிளி/முருகானந்தா கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டுள்ளமை எமக்கு மிக்க மகிழ்ச்சியினைத் தருவதுடன், மேலும் வளர்ச்சிபெற்று தேசியப் பாடசாலையாக மிளிர எனது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திருமதி றூ.கேதீஸ்வரன்,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

### கண்டாவளை உதவி அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி




**"கல்லூரிக்கு வாழ்த்துக்கள்"**

முரசுமோட்டை மகா வித்தியாலயமானது 25.10.2011 ஆந்திகதி முதல் கண்டாவளை பிரதேசத்தின் முதலாவது கல்லூரியாகத் தரமுயர்த்தப்பட்டமையை அறிந்து மிகவும் மகிழ்வடைகின்றேன். எமது கண்டாவளை பிரதேச செய லர் பிரிவில் உள்ளடங்கும் 23 பாடசாலைகளுள் 1A B தர முன்னணிப் பாடசாலையாக விளங்கி வந்த இவ் வித்தியாலயம் "கல்லூரி" ஒன்றிற்கான தகுதிப்பாடுகளைக் கொண்டிருப்பதனை வட மாகாண கல்வியமைச்சினால் இனங் காணப்பட்டமை எமது பிரதேச மக்களிற்கு கிடைத்த வரப்பிரசாதமேயாகும்.

இனிவரும் காலங்களிலும் தங்கள் கல்லூரி போதிய ஆளணி வளங்களையும் பௌதீக வளங்களையும் பெற்று பிரதேசத்தின் எதிர்காலச் சிற்பிகளை உருவாக்கும் கல்விப் பணியினை தொடர்ந்து சிறப்பாக ஆற்றி கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள புகழ் பூத்த கல்லூரிகளில் ஒன்றாக எதிர்காலத்தில் சிறப்படைய எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இறைவனின் ஆசியையும் வேண்டி நிற்கின்றேன்.

**சி.சத்தியசீலன்,**
**உதவி அரசாங்க அதிபர்,**
**கண்டாவளை.**

### கல்விப் பயிர் வளரும் கல்லூரி



முருகானந்தா மகா வித்தியால்யம் கல்லூரியாகத் தரம் உயர்வதில் பெருமகிழ்வடைகிறேன். மருத நிலமாக மிளிரும் முரசுமோட்டைப் பதியில், 1939 இல் இந்து சபை யின் 07 மாணவர்களுடன் ஆரம் பப் பாடசாலையாக ஆரம்பித்தனர். படிப்படியாகப் பல வளர்ச்சிகளை இப்பாடசாலை பெற்றது. 1986 இல் 1300 மாணவர்களுடன் மகா வித்தியாலயமாகத் தரம் உயர்ந்தது. பொறியியலாளர்கள், மருத்துவர்கள், பட்டதாரிகள் எனப் பலரை உருவாக்கியது.

செந்நெல் விளையும் பதியில் கல்வியிலும் சிறப்பான அறுவடை கிட்டியது. யுத்த சூழல், இடப்பெயர்வுகள் கல்வி யில் பெரிய பின்னடைவை ஏற்படுத்தியது. மீள் குடியேற் றத்தின் பின் படிப்படியாக மீள் கட்டுமானங்கள் உருவாகின அதி உத்தம ஜனாதிபதி அவர்களால் பிரதீபா பிரபா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட தி.வரதன் அவர்கள் தற்போது இப்பள்ளியின் அதிபராக இருந்து சிறப்பான கல்விச் செயற் பாடுகளை முன்னெடுத்து வருகிறார். அவருக்குப் பக்கபல மாக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் எனப் பல தரப்பட்டவர்களும் செயற்படுகின்றார்கள். இப் பள்ளியானது கல்லூரியாகத் தரம் உயரும் அதே நேரத்தில் கல்வியிலும் தரங்கள் உயரும் எனத் திடமாக நம்புகிறேன். வளர்ச்சிகள் பல அடைந்து கல்லூரி சிறப்புடன் மிளிர எல்லாம் வல்ல இறைவனிடம் ஆசி வேண்டி வாழ்த்துகிறேன்.

**கந்தசாமி முருகவேல்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**கிளிநொச்சி.**

### பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



கண்டாவளைப் பிரதேசத்தின் முரசுமோட்டைக் கிராமத்தில் அமைந்து கல்விச் சாதனைகள் பல புரிந்து விளங்கும் கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம் கல்லூரியாகத் தரமுயர்ந்தமை அதன் கல்விப் பணிக்கு மேலும் மெருகூட்டுவதாக உள்ளது. முருகானந்தா கல்லூரி அப்பிரதேச மக்களுக்கு மட்டுமல்லாது கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் நல்ல கல்வியை வழங்கி மக்கள் தம் வாழ்வு வளம் பெற வழிகாட்டும் கலங்கரை விளக்காகத் திகழ வாழ்த்துகிறேன்.

**கி.சின்னராசா பி.க.ப.(நி)**
**வலயக் கல்வி அலுவலகம்**
**கிளிநொச்சி.**

### மேலும் வீறுநடை போட எனது வாழ்த்துக்கள்



முரசுமோட்டையில் 1939ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பொ.கணபதிபிள்ளை அவர்களினால் வழங்கப்பட்ட ஏக்கர் காணியில் 35 மாணவர்களுடன் சைவபரிபாலன சபையின் ஆதரவுடன் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை விரைவாகவும், நிதானமாகவும் வளர்ச்சிப்பாதையில் வீறுநடைபோட்டு பாடவிதானச் செயற்பாடுகளி லும், இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் வலயமட்டம், மாகாணமட்டம், தேசிய மட்டத்திலும் பல சாதனைகள் படைத்துள்ளது.

இப்பாடசாலை தனக்கென ஒரு தனித்துவத்தைக் கொண்டுள்ளது. இப்பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இக்கல்விக்கூடம் நாட்டிற்குத் தேவையான வைத்தியர், பொறியியலாளர் போன்ற சகல தொழிற்துறை சார்ந்தவர்களையும் உருவாக்கியுள்ளது. இப்பாடசாலை ஒழுக்கம், விழுமியப்பண்புகள் போன்றவற்றுக்கு அன்று தொட்டு இன்றுவரை முக்கியத்துவம் வழங்கி செயற்பட்டு வந்துள்ளது.

ஆரம்பப்பாடசாலையாக தொடங்கப்பட்ட இப்பாடசாலை சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து முருகானந்தா கல்லூரியாக இன்று பரிமளிக்கின்றது. இக்கல்லூரி தொடர்ந்து இப்பிரதேச மக்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனவும், தனக்கென உரிய பாதையில் வளர்ச்சி அடைய வேண்டுமெனவும் வாழத்துகின் றேன்.

**வீ.இராசகுலசிங்கம்,**
**கோட்டக் கல்விப்பணிப்பாளர்,**
**கண்டாவளை.**

### கல்லூரி அதிபரின் வாழ்த்துச்செய்தி



எமது பாடசாலை 1939ம் ஆண்டு ஸ்தாபிகப்பட்டது. அன் றைய காலத்தில் 07 மாணவர்க ளுடன் தனது கல்விச் சேவை யினை ஆரம்பித்த இப்பாடசாலை ஆரம்பத்தில் ஆரம்பப்பிரிவுடனேயே இயங்கிவந்தது. பின்னர் படிப்படியாக வளர்ச்சி பெற்று 1986 காலப்பகுதியில் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை பல பொறியியலாளர்களையும், மருத்துவர்களையும், கணக்கியலாளர்களையும் தொழில்நுட்ப வல்லுநர்களையும், ஆசிரியர்களையும், பட்டதாரிகளையும் உருவாக்கிக்கொண்டிருக்கின்றது. நாட்டின் அசாதாரண சூழ்நிலையினால் ஏற்பட்ட இழப்புகள், இடப்பெயர்வுகளின் மத்தியிலும் கம்பீரமாக எழுந்து நின்று கல்விச்சாதனை நிலைநாட்டிக்கொண்டிருக்கின்றது. 2010ஆம் ஆண்டில் மீள ஆரம்பித்த இப்பாடசாலை தற்போது 425 மாணவர்களுடனும் 30 ஆசிரியர்களுடனும் இயங்குகின்றது.

எமது பாடசாலை இன்று கல்லூரியாக தரமுயர்த்தப்பட்டு கிளி/முருகானந்தா கல்லூரி என அழைப்பதில் மட்டற்ற மகிழச்சியடை கின்றேன். கல்லூரியாக தரமுயர்த்தப்படும் நிகழ்வானது எமது பாடசாலையின் கல்விச் சிறப்பினை மேலும் எடுத்தியம்புவதாக உள்ளது. எமது பாட சாலையை கல்லூரியாக தரமுயர்த்துவதற்கு பலவழிகளிலும் உதவி புரிந்த வலயக் கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வா கம்), கோட்டக்கல்விப்பணிப்பாளர், பிரதேச செயலர், பழைய மாணவர் கள், பெற்றோர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோருக்கு இந்நேரத் தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தில்லையம்பலம் வரதன்,**
**அதிபர், கிளி/முருகானந்தா கல்லூரி.**

### எமக்குக் கிடைத்த மகத்தான மகுடம்



கிளிநொச்சி மண்ணின் வரலாற்றுச் சிறப்புமிக்க பழைமை கொண்ட முரசுமோட்டை பதியில் கல்வி வளத்தை அள்ளி வழங்கும் பள்ளியாகத் திகழ்ந்திருக்கும் முருகானந்தா இன்று கல்லூரியாக நாமம் சூட்டப்படு வது எமக்குக் கிடைத்த மகத்தான மகுடமாமே. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் முருகானந்தாவிலே நான் கற்றுக்கொண்ட வகுப்பறைகளை நான் இப்போது எண்ணிப் பார்க்கிறேன். பல சோதனைகள் கண்டு இரு தடவைகள் முற்றாக இடம் பெயர்ந்து சகல வளங்களையும் இழந்து இப் போது நிமிர்ந்து நீலமும் வெள்ளையுமாகக் காட்சித்தரும் முருகானந்தா கல்லூரியாக மாறி நெல் விளையும் பொன் பூமியின் பிள்ளைகளுக்கு சிறப்பான சேவையாற்றி ஊருக்கும் உலகிற்கும் புகழ் சேர்க்க இறைவன் அருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

**த. குருகுலராசா,**
**ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளரும், முருகானந்தா மாணவனும்.**

### கிளி/முருகானந்தா கல்லூரியாக கால்பதிக்க வாழ்த்துகிறேன்



முரசுமோட்டைப் பதியின் முத்தான சொத்தாக மிளிர்வது முருகானந்தா கல்லூரி. மழலையாய் எம் மண்ணிலே தவழ்ந்து தளர் நடை நடந்து, தன் சேவையால் உயர்ந்து, உன்னத நிலையில் இன்று கல்லூரி என்னும் நாமம் சூட்டப் பெறுவது பெருமைக்குரியது. கிளிநொச்சி மாவட்டத்தின் முதல் தரப் பாடசாலையாக, முன்மாதிரியாகத் திகழ்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இக் கல்லூரியானது பல்வேறு துறைகளிலும் உயர்வும் சிறப்பும் பெற்று எமது கிராமத்தின் கலங்கரை விளக்காகத் திகழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**ம.கிருபாகரன்,**
**(பழையமாணவன்), முரசுமோட்டை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளம்பர அனுசரணை : கி.கிருபானந்தகுமார் (பிரான்ஸ்)**




யாழ்ப்பாணத்தில் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை. ஏனைய நான்கு மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம்.

## திருவிழா

அல்வாய் கொல்லரியன் சீமா கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகி 18 நாள்கள் நடைபெறும்.

இதில் 22 ஆம்திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என திருவிழா பிரதம குருசிவஸ்ரீஇ.பாலகிருஷ்ணக் குருக்கள் அறிவித்துள்ளார். (ந-253)

# உயர்தரப் பெறுபேறுகள்

### வடமராட்சி மத்திய கல்லூரி

**கணிதப் பிரிவு:**

அனுதர்சா செல்வராசா - 3ஏ, சிந்துஜா மகேஸ்வரராசா- 2சிஎஸ், அனுஷா அபிமன்ய சிங்கம்- 3எஸ்.

**விஞ்ஞானப் பிரிவு:**

மயூரி பத்மநாதன்- 3ஏ, அனுஷா சுந்தரலிங்கம்- ஏசிஎஸ், நிரோஜா மகேந்திரராசா பி2சி, நிரோஜாநந்தகுமார் 3சி, திவ்யா ஜெயக் குமார் பிசிஎஸ், தேனுவதனி பாலச்சந்திரன்- 2சிஎஸ்.

**வர்த்தகப் பிரிவு:**

ஆராதனா சிவபாலன்- ஏ2பி, திருமகளினி தர்மலிங்கம்- 2பிசி, நிவேதா ஜெயக் குமார் பி2சி, தர்சிகா சின்னத்துரை- பி2சி, நிவேதா யோகேஸ் வரநாதன்- பி2சி, யசோதாகுமரன்- பிசிஎஸ், ஜொஸ் லின் ஜெனிற்றா தவராசா - பி2சி.

**கலைப்பிரிவு:**

யதுநந்தா முருகானந்தன்- 3ஏ, திவ்யாமனோகரன் - 3 ஏ, அமிர்தப்பிரியா விக் னேஸ்வரராஜா- ஏ2பி, அபர்ணா குகதாசன்- 2ஏசி, மயூரி புஸ்பதேவன் ஏ2பி, சுபாஜினி நாகராசா- ஏபிசி, தரணிகா சுந்தரம்- ஏபிசி, பாலகௌரி பாலச்சந்திரன்- ஏபிசி, வினோதர்சினி முருகேசு- 2ஏசி, நிவேதிகா குணசேகரன்- 3பி, தர்சிகா குணரத்தினம்- ஏபிசி, ஜனனி சண்முகநாதன் - ஏபிசி, சர்மிளா சிவஞான சுந்தரம்- ஏபிசி, மேரிகிறிஸ்ரலா மதியாபரணம் - 2ஏசி, அபிரா ராஜேந்திரம்- 2பிசி, கிருஷிகா இராஜேந்திரன்- ஏ2பி, துவாரகா நடராசா -2 ஏபி, நிருபா கருணாநிதி- 2ஏபி, கஜனி கந்தசாமி- 2ஏபி, வசந்தா வரதராசா- ஏ2பி, அனித்தா வேலாயுதம்- ஏ2பி, நிருஷிகா குலசேகரம்- ஏ2பி, நிசாந்தி செல்வரத்தினம்- 2ஏசி.

**கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்**

பிரசாந்தி பிரபாகரன்- ஏ2பி, கிஷாந்தி உதயகுமார்- 2பிசி, சுபாஸ்சந்திரன் மாதுளன்- பி2சி, சுபேந்தினி ராமமூர்த்தி- பி2சி, றஜித்தா விக் னேஸ்வரன்- பிசிஎஸ், இந்துசா சிவஞானமூர்த்தி - 2சிஎஸ், முகுந்தினி கனகராசா- 2சிஎஸ், நிருத்திகா குணசிங்கராசா- 2சிஎஸ்.


**ஊர்காவற்றுறை - புனித அந்தோனியார் கல்லூரி**

**கலைப்பிரிவு:**

அ.அருள்விபில்ராஜ் 2ஏபி, இ.சுபாசினி - 2ஏ பி, வி.கிரு ஷாந்தி ஏபிசி, ஜே.வெரோ ணிக்கா ஏபிசி, சி.மாரின்யூதித் ஏபிசி, அ.டொமின்சோ ஏ 2 சி, ஜீ.பகீரதன் ஏபிஎஸ், அ.அருண் ராஜ் 2பிசி, ச.சந்திர வதனா 2 பிசி, பா.தர்சியா 2பிசி. (ந)

# வீண் வாழ்க்கை எதற்கு?

மனிதர்கள் பிறந்து, வளர்ந்து , உண்டு , உடுத்து, உயிர்த்து,உறங்கி, தளர்ந்து எந்த நன்மையும் செய்யாமல் வீணாக இறந்து போகின்றார்கள். மீண்டும் பிறக்கின்றார்கள். பிறப்பு, இறப்பு ஆகியவற்றுக்கு முடிவே இல்லை. காட்டிலே உள்ள மரங்கள் யாருக்கும் பயன்படாமல்அழிவது போல் இதை நினைத்தால் அறிவுள்ள நெஞ்சம் கலங்குகின்றது. காட்டிலே எரிந்த நிலவும்,கடலிலே பொழிந்த மழையும், களரிலே விதைத்த விதையும், ஆற்றிலே கரைத்த புளியும் அறிவிலார்க்கு உரைத்த அறமும்போல் வீணாகின்றன. ஒரு சிறந்த நன்மைக் காரியத்தைச் செய்து இறந்தவர் உயிரோடு இருப்பவரே ஆவார். ஒரு பயனும் இன்றி வாழ்பவர் உயிரோடு இருந்தும் இறந்தவரே ஆவார். பல திருக்கோயில்களைப் புதுக்கிப் புகழ்பெற்ற கோச்செங் கோட்சோழன், திருமலை நாயக்கர், பச்சையப்ப முதலியார், வள்ளல் சீதக் காதி முதலியோர் இன்றும் புகழுடம்பில் வாழ்கிறார்கள்.




( அறநெறிச் சிந்தனைகள்)

## வைரவப் பெருமான் வெளி வீதியுலா

யாழ்ப்பாணம், ஜன.06

யாழ். மாவடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் திருவெம்பாவை உற்சவம் கடந்த 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பமாகியது.

இந்தத் திருவெம்பாவைத் திருவிழா பூசைகள் தொடர்ந்து 10 நாள்களுக்கு இடம் பெற்று வருகின்றன.

எதிர்வரும் எட்டாம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிழா நிறைவடையவுள்ளதால் அன்றைய தினம் காலை 9 மணிக்கு விசேட அபிஷேகத்துடன் பூசைகள் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு ஞான வைரவர் வெளிவீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (ந-313)

## கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வெளிக்களப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜன.06

2011 ஆம் ஆண்டுக்கான கூட்டுறவுப் பணியாளர்களின் உயர்தரப் பயிற்சி நெறியின் வெளிக்களப் பயிற்சிநெறிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாவட்டத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களில் 14 நாள்கள் பயிற்சியை மேற்கொண்டு பயிற்சி முடிவில் ஒப்படைகளை சமர்ப்பிப்பதன் மூலம் வெளிக்களப் பயிற்சி நிறைவடையவுள்ளதாக யாழ். மாவட்ட கூட்டுறவுச் செயலாளர் திருமதி வே.செல்வரத்தினம் தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்ற கூட்டுறவுப் பணியாளர்களின் உயர்தரப் பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சைகள் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்தன.

இந்தப்பரீட்சையில் கணக்கியல், கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு பதிவியில், முகாமைத்துவம், சட்டம், கூட்டுறவு, சமூகவியல், வணிக கணிதம், கணக்காய்வு, ஆங்கிலம், கணினி ஆகிய 10 பாடங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த ஒரு வருட பயிற்சி நெறியில் புதிதாக 10 பேரும், பணியாளர்கள் 30 பேரும் உள்ளடங்குகின்றனர்.

முன்னர் அறிவித்ததற்கு அமைவாக, எழுத்துப் பரீட்சை, வெளிக்களப் பயிற்சியில் சித்தி பெற்றவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.அருந்தவநாதன் தெரிவித்துள்ளார். (ந-311)

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
இலங்கேஸ்வரன் தேவகி
(யூரன்டோக் ஜேர்மனி)



மண்ணில்
18★ 11 ★ 1967
விண்ணில்
29 ★ 12 ★ 2009
திதி: திரயோதசி (06.01.2012)


பூமிதனில் உன் உயிர் இல்லைபொமி
பூமி அழுதிட வானிலே உன் ஆவி
சுற்றித் திரிய வானம் சிரித்திட
உன் உறவுகள் தேம்பி அழுகின்றோம்
உன்னை இழந்ததினால்
என்றும் உங்கள் நினைவுடன்

சூசையப்பர் கோயிலடி,
கோப்பாய் மத்தி.

கணவர், பிள்ளைகள்
மற்றும் உடன் பிறப்புகள்.

(12583)(2-6-7)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் S.G. சந்தியாப்பிள்ளை

ஆண்டுகள் மூன்றுமே அதி விரைவில் சென்றாலும்
ஈண்டு உம் மனைவி மக்களும் அவர்தம்
பண்பான துணைவிகள், துணைவர்களும், வாரிசுகளும்
கண்களில் நீர்மல்க உம் அலங்காரக் கல்லறையில்
மண்டியிட்டு புலம்பாத நாள் உளதோ
எண்ணம் எல்லாம் உம் நினைவில் கலங்கினாலும்
விண்ணகத்தில் அண்ணல் அவன் பாத
தண்ணொளியில் உறைந்திடவே செபிக்கின்றோம்.

புலோலி தெற்கு,
புலோலி. (12527) (2-6-7)

குடும்பத்தினர்.

## கல்விமாணிக் கற்கை நெறி

யாழ்.மத்திய கல்லூரியின் தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் கல்விமாணிக்கற்கை நெறியின் முதலாம்,இரண்டாம் வருட வகுப்புக்கள் யாவும் எதிர்வரும் 8 ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று பதில் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ந)

**காணி விற்பனைக்குண்டு**

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் கிணற்றுடன் கூடிய 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0213008112 , 0773249094

**SLAS இறுதிக் கருத்தரங்கு**

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில்(யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அருகில்)சனி, ஞாயிறு 9 மணி தொடக்கம் 2 மணி வரை

* எமது வழமையான முன்னணி ஆசிரியர்குழு
* நான்கு வினாத்தாள்களுக்கும் கருத்தரங்கு நடைபெறுவதுடன் உங்கள் வினாக்களுக்கும் விடை பகிரும் ஒரே நிறுவனம்.

தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின்

**இலண்டன் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் கணினிப் பயிற்சி நிலையம்**

114, டச்சு வீதி, சாவகச்சேரி

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

சேவை நோக்கமாகக் கொண்ட எமது நிலையத்தில் 09.01.2012 திங்கட்கிழமை புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

1. Basic computer Application
   (3 months, 1500/=)
   Introduction to computer,
   MS word,
   MS Excel, MS Powerpoint,
   Internet E-mail
2. Desktop Publishing
   (3 months, 1500/=)
   Photoshop, Pagemaker,
   CorelDraw
3. Internet E.mail (10 hr.1000)

★ யாழ். பிரபல சிங்கள ஆசிரியர் ஸ்ரீ மாஸ்ற்ரரின் வார இறுதி வகுப்புகள் ஆரம்பம்.

114, டச்சு வீதி,
சாவகச்சேரி. முகாமையாளர்.

தற்போது வெளியான A/L பரீட்சை முடிவை அடுத்து என்ன?
பல்கலைக்கழக உயர்கல்விக்கு, வேலைவாய்ப்பிற்கு வெளிநாட்டுக் கல்விக்கு உதவும்.

**வாழ் நாள் ஆங்கிலம்**

புறஜெக்ரர் மூலம் அகலத்திரையில்
[ஆங்கில இலக்கணம், பேச்சு ஆங்கிலம், இலக்கியம்]
சனி, ஞாயிறு பி.ப 2 மணி

0212219016,
0214914527
www.thisaikaddi.lk
thisaikaddi@sltnet.lk.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்.
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்,
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

[யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில்
யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை]

# 31 ஆம் நாள் நினைவு தினமும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
01 ★ 07 ★ 1952



உதிர்வு
07 ★ 12 ★ 2011

## அமரர் கந்தையா பரஞ்சோதி (பொன்ராசா)

பரஞ்சோதிப் பெருமகனார் பரமபதம் அடைந்திட்டார்
பெருஞ்சோதிப் பிழம்பாகி பெருமானின் திரு நிழலில்
அருஞ் சேவை ஆற்றுகின்ற அருள் பெற்று அவையத்து
பெருஞ்சேவை புரிந்த மகன் பேறுற்றார் பெயர் வாழும்

கடந்த 07.12.2011 அன்று இறைபதமடைந்த எமது இல்லத் தலைவர் அமரர் கந்தையா பரஞ்சோதி அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நிகழ்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (06.01.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எமது உயிரார்ந்த உறவுகள், நண்பர்கள், எம் துயரறிந்து அதில் பங்குகொண்டு பல்வேறு வகையிலும் ஆறுதல் வழங்கிய பல்துறைசார் அன்புக்குரியவர்கள், அயல் வாழ் மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு, அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திப்பதுடன், மதிய போசனத்திலும் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

14/2, புது வீதி, கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம். (12529)(2-6-7)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்ப உறுப்பினர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்ள முற்படுவீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலரைத் தொடர்பு கொண்டுபேச முற்பட்டு அது முடியாமல் போகலாம். தாய் வழி உறவுகளிடம் ஏற்பட்ட மனஸ்தா பம் தீர்வுக்கு வரும். சுயநலமாகச் செயற்படும் சிலரால் கோபம், எரிச்சல் அடையலாம்.

**இடபம்:** தொட்ட காரியங்கள் துளிர் விட்டு வளரும் நாள். மனக் குழப்பங்கள் அதிகரிக்காமல் இருக்க எதையும் ஒன்றுக்கு, இரண்டு முறை யோசித்துச் செய்ய வேண்டும். நினைத்த பொருள் ஒன்றை வாங்க பணத்தை தண்ணீராகச் செலவு செய்வீர்கள். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலைகளைச் செய்ய நேரிடலாம்.

**மிதுனம்:** அவசரமாக முடிக்க வேண்டிய வேலைகளால் அவதிப்படலாம். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப் போக்குச் சொல்லி சமாளிக்கலாம். சேமித்த பணம் ஒன்றை திடீரென செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்க கணிசமாகச் செலவிடலாம்.

**கடகம்:** கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல் முடிவுக்கு வரும். தொழில் ரீதியான எதிர்ப்புகள், சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பயண அனுகூலம் உண்டு. கடன் மிகுதிகளை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். இனிய நாள்.

**சிங்கம்:** எதிலும் துணிச்சலாகச் செயற்பட்டு சாதனை படைக்கும் நாள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். சுயதொழில் புரிவோர் கூடுதல் முற்பதிவுகள் பெற்று மகிழ்ச்சி அடைவர். இறை அருளால் சில காரியங்கள் நடந்ததாக மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள்.

**கன்னி:** மாமன், மைத்துனர்கள் வழியில் மனதுக்கு இனிய சம்பவங்கள் நடக்கலாம். தொழில் ரீதியான வெளியூர் பயணங்கள் செல்லலாம். நாளைய சில வேலைகளுக்காக இன்றே முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். அரசியல் வாதிகளுக்கு அலைச்சல் அதிகரிக்கும்.

**துலாம்:** சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். ஒருவர் மீதுள்ள கோபத்தை மற்றவர்கள் மீது காட்டுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் வராமல் இழுத்தடிக்கலாம். நீங்கள் வேகமாக செயற்பட நினைத்தாலும், மற்றவர்களால் உங்களின் பணிகளில் குறுக்கீடுகள் ஏற்படலாம். தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம்.

**விருச்சிகம்:** பழைய நண்பர்கள் மூலம் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். மாமன், மைத்துனர்கள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். பிள்ளைகளின் விருப்பங்களை நிறைவேற்ற கணிசமான பணத்தைச் செலவிடலாம். பெற்றோர் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நன்மை தரும். இனிமையான நாள்.

**தனுசு:** காலை வாரி விட்டவர்களே கைகொடுத்து உதவும் நாள். சில வேலைகளுக்காக அலைய நேரிட்டாலும், அதனால், கணிசமான பொருள் வரவுகளைப் பெறலாம். சாமர்த்தியமான, கனிவான பேச்சுக்கள் மூலம் நண்பர் ஒருவரின் ரகசியங்களை அறிந்து கொள்வீர்கள். பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிட்டும்.

**மகரம்:** எதிலும் பற்றுதல் இல்லாமல் வெறுப்பு, விரக்தியோடு செயற்படுவீர்கள். சில விடயங்களில் நினைப்பது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். வியாபாரிகள் வாடிக்கையாளர்கள் சிலருக்குக் கூடுதலாக மிகுதி கொடுக்கலாம். தந்தை வழியில் எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். வீண் பயம் ஆள்கொள்ளும்.

**கும்பம்:** அலைந்து திரிந்து சில வேலைகளை முடிக்க நேரிடலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். உறவினர்கள் சிலர் உங்களுக்கு முக்கியமான விடயங்களில் நல்ல யோசனை சொல்லலாம். உடன் பிறப்புக்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். மற்றவர்களுக்காக உங்களின் கைப் பணத்தை செலவிடலாம்.

**மீனம்:** கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பல நாள்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று, இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். காலை முதல் மாலை வரை பம்பரமாக சுழன்று பணியாற்றுவீர்கள். பரிசு, பாராட்டுக்களைப் பெறலாம்.

**நாளை**

மார்கழி 22 சனிக்கிழமை 07.01.2012
திதி: திரயோதசி பி.ப. 12.26 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.இ. 04.35 வரை
சுபநேரம்: 03.32 - 5.02வரை,
ராகு காலம்: 09.32 -11.02 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | | 7 | 1 | | | | |
| | | 5 | | | 9 | 2 | 4 | |
| | 7 | 9 | | 5 | 4 | | | |
| | 9 | | 4 | 8 | 1 | | | |
| 8 | | | | 6 | | | | 4 |
| | | | 3 | 9 | 2 | | 6 | |
| | | | 8 | 4 | | 5 | 3 | |
| | 6 | 8 | 9 | | | 4 | | |
| | | | | 7 | 3 | | 9 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டி கள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# அமரர் Lion விஜயரத்தினம் கமலநாதன்

அவர்களின்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

அவனியில் 11 - 06 - 1950

அமரத்துவம் 08 - 12 - 2011



எங்கள் குடும்பத் தலைவர் Lion விஜயரத்தினம் கமலநாதன் அவர்களது வீட்டுக்கிருத்திய அந்தியேட்டி நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (06.01.2012) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த் தனையும் மதிய போசன நிகழ்வும் (08.01.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியைக்கு சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்கள், நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அவர் சுகவீனமுற்று இருந்தபோது உதவிய யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்கள், தாதியர் மற்றும் சகலருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆனைக்குட்டி ஒழுங்கை,
தெல்லிப்பழை. (12562) (2,6,9)

- குடும்பத்தினர்.

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 14 -xxxx இலக்க Nissan sunny (B-12) (ரட்ஸி)கார், அண்மையில் செய்யப்பட்ட நம்பர் (3'x4') என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6538060

## PHYSICS English mendium

2014 Batch

Start : 07 January (saturday), 12 o'clock
Place: Green pearl Institution, Navalar Road.
By: M. Kuganeswaran BSc (Hons)
Contact:0774287373

## விற்பனைக்கு

நில நிற சவாரி மோட்டார் சைக்கிள் 49 சிசி 500 கி.மீற்றர் மட்டும் ஓடியது விற்பனைக்குண்டு.
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில் யாழ்.இந்துக்கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

## பெண் உதவியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் சிறு வேலை செய்து கொண்டு உதவியாக இருக்கக்கூடிய 50 வயதுக்கு மேற்பட்ட பெண் தேவை. பொறுப்புகள் இல்லாதவர் விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: 0217900637

# மரண அறிவித்தல்

## கந்தர் ஐயாத்துரை (கார் சாரதி)

உடுவில், டச்சு வீதியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் ஐயாத்துரை 03.01.2012 செய்வாய்க்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர்-இளையாச்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சோமு - தங்கச்சியம்மா தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், தேவராசா (காந்தி), காலஞ்சென்ற மகிழ்ராசா, தவராணி, ஜெயராணி (கனடா), பிக்கினிராஜா (கொலண்ட்), பிறேமராஜா (கொலண்ட்), வளர்மதி (கொலண்ட்), ஜெயமதி (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தவமணி, தர்மலிங்கம் மற்றும் சுந்தரலிங்கம் (கனடா), அருந்தவராணி (கொலண்ட்), லதாரஞ்சினி(கொலண்ட்), ஞானசேகரம் (கொலண்ட்), கமலதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், கௌசிகா, தேவகி, றஜனிகாந் (கனடா), றோபேக்கா, சசிரேகா, துஸ்யந்தன் (கனடா), பிரசாந், அபிகா (கொலண்ட்), பிரஜீஸன் (கொலண்ட்), ரக்ஷன், மதுஷா (கொலண்ட்), தபிஸ், பர்வின் (கனடா) ஆகியோரின் பேரனும், அருஸ்யன், ரணிஷ், தரிஷ் (கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவி னர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(12534) (2-6-7)

டச்சு வீதி, உடுவில், சுன்னாகம்.

தகவல்: தேவராசா (காந்தி), பிக்கினிராசா (பிக்கினி) (மகன்மார்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்புடன் மற்றொரு வருடம்

**ஆயுதம் தூக்கினவன் இறந்தாலும், காணாமல்போனாலும் வீரர் என்று சொல்லுவம். ஆயுதம் தூக்காத அப்பாவி பொதுமக்கள் காணாமல் போகையில் வாழ்க்கை முழுவதும் காணா மல் போறவர்களின் ஞாபகத்திலே இருப்ப வர்களின் வாழ்க்கையும் அழியப் போகிறது.**

2012 முதலாம் திகதி அதிகாலை ஒரு மணி இருக்கும். எனது கைபேசி தொடர்ந்து விட்டு விட்டு ஒலியெழுப்பிக் கொண்டே இருந்தது. எனது தூக்கத்தை கலைத்து விட்டது. ஆனால் பதிலளிக்க வில்லை பனிமூட்டம் அதிகமாகி அதன் குளிரில் போர்வையை விலக்க முடியாமல் இறுக்கிக் கொண்டேன். சூடு எனது உடலை மையம் கொள்ள மீண்டும் உறங்க ஆரம் பித்தேன்.

ஆனாலும் தூங்க விடமாட்டேன் என்று எனது கைபேசி மேலும் ஒலியெழுப்பிக் கொண்டிருந்தது. என்ன ஏது எனப் பார்ப்போம் என்று போர்வையை விலக்க முடியாமல் அதனுடனேயே எனது கைபேசி வைத் திருக்கும் மேசைப் பக்கம் சென்றேன். மேசை லாச்சியைத் திறந்து அதனை எடுத்தேன். 50 இற்கும் மேற்பட்ட புதுவருட வாழ்த்துகள் எஸ்.எம்.எஸ்இல் வந்து விழத் தொடங்கின. அப்பொழுதுதான் தெரியும் இன்று புதுவருடம் என்று. எனது நண்பர்கள், உறவினர்கள் என்று எல்லோரும் புதுவருட வாழ்த்துக்களை அனுப்பிக் கொண்டிருந் தார்கள். அரைகுறை தூக்கத்தில் எழுந்திருந்த படியால் எஸ்.எம்.எஸ். வாழ்த்துக்கள் முழுவதுமாக படிக்க முடியாவிட்டாலும் சில பேரின் வாழ்த்துக்களைப் பார்ப்போம் என்று அழுத்தினேன்.

முதலாவது எஸ்.எம்.எஸ்இல் மட்டக் களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவு நாள் இன்று என்று காணப்பட்டது. 2005ஆம் ஆண்டு பிறந்த 25ஆம் திகதி அதிகாலை கிறிஸ்தவ தேவாலயத்துக்குள் வைத்து சுடப்பட்டார். அவரின் நினைவில் சிறிது நேரம் மூழ்கிய நான் அடுத்த எஸ்.எம்.எஸ்இனை அழுத்திப் பார்த்தேன். எனது தம்பியைப் பற்றி ஏதாவது அறிந்தீர்களா? என்று வந்திருந்தது. அவ்வளவு தான் அடுத்த எஸ்.எம்.எஸ். பார்க்காமல் கைபேசியை வைத்துவிட்டு ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டேன். நித்திரை குழம்பி விட்டது. பட்டாசு கொளுத்தும் சத்தம் கேட் டுக் கொண்டே இருந்தது. பட்டாசு கொளுத்து பவர்களுக்கு எங்கே விளங்கப் போகிறது இன்று நாம் எங்கே நிற்கிறோம் என்று.

எனது நண்பன் ராமு நினைவுதான் எனது மனதில் அலை அலையாக வந்து கொண்டி ருந்தது. அவன் காணாமல்போய் 5 வருடங் கள் ஆகிவிட்டன. 15.02.2007ஆம் ஆண்டு காணாமல் போனவன்தான் இன்னும் வீடு திரும்பவில்லை. இவன் வடமராட்சிப் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் இயக்குநராகவும், யாழ்ப்பாணத்தில் வெளிவருகின்ற பத்திரிகை ஒன்றின் பிரதேச செய்தியாளராகவும் பணியாற்றி இருந்தனர்.

இவனைக் கடத்திக் கொண்டு சென்றவர் கள் இவனது அக்காவுடன் தொலைபேசியில் பேச விட்டிருக்கிறார்கள். அப்பொழுது இவன் கதைத்ததை இவனது அக்கா போனில் பதிவு செய்து இன்றுங் கூட இவன் ஞாபகம் வரும்போது அவன் கடைசியாகப் பேசியதைக் கேட்டுக்கொள்வாள்.

இன்று அவன் உயிருடன் இருக்கி றானோ, இறந்துவிட்டானோ என்று கூடத் தெரியாமல் அவனது அக்கா, ''அவன் வருவான்'' என்று காத்துக் கொண்டி ருக்கிறாள். வடமராட்சிப் பக்கம் எனக்கு தெரிந்தவர்களின் நிகழ்வுகளுக்குச் சென் றால் அங்கே அவனது அக்கா என்னைப் பார்த்ததும் ''தம்பியைப் பற்றி ஏதாவது அறிந்தியலா'' என்றுதான் கேட்பார். அந்த ஊர் சனங்களே அவனை அங்கு கண்டோம், இங்கு கண்டோம் என்று அவனது அக்கா விடம் சொல்லிவிடுவார்கள். சனங்கள் சொல்லுவதைக் கேட்டுவிட்டு அவன் இருக்கிறான் என்ற நம்பிக்கையில் இன்னும் இருக்கிறாள் அக்கா.

சாத்திரிமாரும் அவன் உயிரேடு இருப்ப தாக சொல்லுகிறார்கள். எல்லாக் கோயில் களிலும் அவனது பெயரில் வழிபாடு நடை பெறுகிறது . பிறகு எப்படி என்னால் 2012 புது வருடத்தைக் கொண்டாட முடியும்?ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு சோகத்தைத் தாங்கிக் கொண்டு இந்தப் புதுவருடம் பிறக்கிறது.

நேரத்தைப் பார்க்கிறேன் அதிகாலை 2 மணி ஆகிவிட்டது. படுக்கைக்குப் போகாமல் கதிரையில் இருந்தபடியே போனில்வந்தமிகுதி எஸ்.எம்.எஸ் இல் என்ன வந்திருக்கும் என்று கைப்பேசியைப் பார்க்காமலே தெரிந்து கொண்டேன். அவ்வளவு சோகக் கதைகளைத் தாங்கி நிற்கிறது எமது ஊர். சமீபத்தில்தான் காணாமல் போனவர்களுக்காக யாழ்.நகரில் ஒரு கூட்டம் கூடியது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவந்த இருவர் கூடக் காணாமல் போயுள்ளனர். காணாமல் போனவர்களுக்காகக் கூட்டம் கூடியவர்களே காணாமல் போனால் காணாமல் போனவர் களின் நிலைமை எப்படி இருக்கும். நேரத்தினைப் பார்த்தேன் அதிகாலை 3 மணி. கைப்பேசியை எடுத்து ராமுவின் அக்காவிடம் கதைத்தபோது ''தம்பியைப் பற்றி ஏதாவது தெரியுமா?'' என்று தான் கேட்டார். 2012 ஆரம்பிக்கும் போதும் தனது தம்பியைப் பற்றியே கேட்டுக் கொண்டிருக் கும் அக்கா. தான் இருக்கும் காலம் முழுவ தும் தம்பியின் ஞாபகத்திலே இருக்கப் போகிறார்.

இப்படித்தான் காணாமல் போனவர் களின் வீட்டுக்காரர்கள் தம் சொந்தங்களை மறக்க முடியாமல் நினைத்துக் கொண்டி ருக்கப் போகிறார்கள். ஆயுதம் தூக்கினவன் இறந்தாலும், காணாமல்போனாலும் வீரர் என்று சொல்லுவம். ஆயுதம் தூக்காத அப்பாவி பொதுமக்கள் காணாமல் போகையில் வாழ்க்கை முழுவதும் காணா மல் போறவர்களின் ஞாபகத்திலே இருப்ப வர்களின் வாழ்க்கையும் அழியப் போகிறது. நேரம் அதிகாலை 4 மணி ஆகிறது. பட்டாசு சத்தம் காதைப் பிளக்கிறது. இன்னும் விடியவில்லை . கதிரையில் இருந்து எழும்பி வெளியே சென்று பார்ப்போம் என்றால் குளிரும் விடவில்லை. அப்படியே போர்

**கோப்பாய் சண்முகம்**
**கதைபோலு செய்தி**

வையை இறுக்கிக் கொண்டு கதிரை யிலே காலினையும் தூக்கிப் போட்டுக் கொண்டு இருந்தேன். கடந்த ஆண்டுகளில் கண்முன்னே நடந்த கொலைகள், கடத்தல் கள், இடப்பெயர்வுகள், முகாம் வாழ்வு எல்லாவற்றையும் மறக்கவா முடியும்? எப்பொழுதும் என்னவும் நேரலாம் என்ற பயத்தில் வாழ்வினை நடத்திய கடந்த ஆண்டுகளை மறக்க முடியுமா? எத்தனை தாய்மார்கள் தமது பிள்ளைகளை வயிரவருக் காக நேர்ந்து விட்ட ஆடுகள் போல பலிகள் ஆக்கிவிட்டு தவிக்கின்றனர். எத்தனை இளம் மனைவிமார் தமது கணவன்களை இழந்து தவிக்கின்றனர். எத்தனை சகோதர சகோதரிகள் தமது உறவை தொலைத்து நிற்கின்றனர்.

எழும்பி கிணற்றடிப்பக்கம் சென்றேன். கலங்கிய கிணற் றுத் தண்ணீரில் எனது முகம் சரியாகத் தெரியாது என்று தெரிந்தும் பார்க்கின்றேன். *


## எடிசன் கல்லூரி

| | |
|---|---|
| வலயக் கல்விப்பணிமனை முன், கிளிநொச்சி. | கரடிப்போக்குச் சந்தி அருகில், கிளிநொச்சி. |

**A/L 2014 / A/L Day** *கலை, வர்த்தக, கணித, உயிரியல் புதிய பிரிவுகள் ஆரம்பம்*
07.01.2012 சனி 8.00 a.m.

யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் (ஓட்டோ) ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)

**வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும்**

மேற்படி எமது சங்கத்தின் வருடாந்தப்பொதுக்கூட் டமும் நடப்பு வருடத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 08.01.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ். றிம்மர் மண்டபத்தில் (யாழ் மணிக்கூட்டு கோபுரம் அருகில்) தலைவர் மு. தர்மகுலராசா அவர்கள் தலைமையில் நடைபெற வுள்ளதால் ஓட்டோ உரிமையாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறியத்தருகிறோம்.
**செயலாளர்.** (12590)(6,7,8)

# MBBS/MD
Lugansk State Medical University
UKRAINE -**EAST EUROPE**
Recognized by SRI LANKA MEDICAL COUNCIL
**With A/Ls** 6 years
Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics
எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, நுவரெலியா, மாத்தளை மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.
**www.lugmedi.org**
Tel : (தமிழில்) 0777 767 818 / 4512591
Scholars Information Centre
No.01, Vaverset Place, Colombo 06.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
**AAT (Srilanka)**
Foundation , intermediate & Final
Medium :- English & தமிழ்
புதியபிரிவு ஆரம்பம் :- 07-01-2012 சனிக்கிழமை
**Certificate Course in English**
Seven Batches have Successfully completed the course. 8th Batch will be commenced on 14-01-2012
Day Classes :- Monday & Friday
Week end classes :- Saturday & Sunday
**External Degree** (Jaffna University)
GAQ, BA 1 & BA Final
1st in com,Bcom (1&11), Final
ஆரம்பம்:- 07-01-2012 (Saturday) 9.00am
Furthur Detail
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.


## துயர் பகிர்கின்றோம்



*திருமதி தர்மராசா சரோஜினிதேவி*
(சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை)

கிளி/கனகபுரம் மகாவித்தியாலயத்தின் ஆசிரியையான திருமதி சுபாஜினி சுந்தரகுமார் அவர்களின் மாமியின் மறைவிற்கான துயரில் பாடசாலைச் சமூகம் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
கிளி/கனகபுரம் ம.வி.

(C/4509)(5,6,9,10)

## துயர் பகிர்கின்றோம்



*அமரர் வேலுப்பிள்ளை பத்மநாதன்*
(கனகசபை வீதி, மானிப்பாய்)

கிளி/கனகபுரம் மகாவித்தியாலயத்தின் ஆசிரியையான செல்வி ப.பாரதி அவர்களின் தந்தையாரின் மறைவிற்கான துயரில் பாடசாலை சமூகம் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
கிளி/கனகபுரம் ம.வி.

(C/4510)(5,6,9,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை நிலையம் மாற்றம்

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்தினை மேற் கொள்ளும் மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் நாளை தொடக்கம் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. முன்னரே இந்தப் பரீட்சை இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடத்த திட்டமிட்டிருந்த போதிலும் இடவசதியின்மை காரணமாக யாழ்.பல்கலைக்கழக மண்டபங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## நடமாடும் இரத்ததான முகாம்

வல்வை ஒன்றியத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடமாடும் ரத்த தான முகாம் வல் வெட் டித்துறை பார்வதி இலவச ஆங்கிலக் கல்வி நிலை யத்தில் நாளை சனிக்கி ழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய சாலை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த இரத்ததான முகாமில் ஆர்வலர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-4)


சாதனைச் செல்வனைப் பாராட்டுகின்றோம்

கமலக்கண்ணன் கமலவாசன்



பருத்தித்துறை புலோலி புகழும்
பொறியியலாளர் கமலக்கண்ணனுக்கும்
உடுப்பிட்டி கொம்மாந்துறை மகிழும்
மதிவதனாவுக்குமாய் வாய்ந்த திருமகனே வாழி
கமலவாசன் எனும் உன் நாமம் பெருமை பெற
பண்போடும் பணிவோடும் அன்போடும் அடக்கத்தோடும்
பெரியோரை மதித்துப் பெற்றோர் சொல் வேதமாக்கி
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி புகழ் எய்த
உயர்தரக் கணிதத்துறையதனிலே தேசியத்தில்
முதல் மாணவனாய் சித்தி பெற்றிங்கே
பெற்றோர்க்கும், உறவினர்க்கும்,
ஊரவர்க்கும் யாழ்.மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்த
கமலவாசா நீர் பல்கலைக்கழகம் முதல் பல்துறையில்
பட்டங்கள் பல பெற்று பார் போற்றிப் பாராட்ட
இறையாசி துணையிருக்க எம்மாசி இணையிருக்க
குன்றிடைத்தீபமென வாழியவே வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
தாத்தா - கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்:
(பொறியியலாளர், விரிவுரையாளர், பல்தொழில்நுட்பக் கல்லூரி, சிங்கப்பூர்)
பாட்டி - மணிமேகலை சுப்பிரமணியம்.



சாவகச்சேரி நாதஸ்வர மேதை
கலாநிதி K.M.பஞ்சாபிகேசன் அவர்களின்
பேரனும் M.P. நாகேந்திரன் அவர்களின்
மகனுமாகிய கனடாவாழ், சங்கீத கலாஜோதி
நா.நிருபன் அவர்களின்

கர்நாடக இசைவிருந்து

இடம்:- சங்கத்தானை முருகன் ஆலயம்
காலம் :- (06.01.2012 வெள்ளிக்கிழமை (இன்று)
நேரம்:- மாலை 6.00 மணி



வயலின்
ராம்பிரகாஷ் சரவணபவன்
(கனடா)
மிருதங்கம்
மிருதங்க கலாஜோதி
திரு.M.கணேசதாசன்
(கனடா)
கெஞ்சிரா
இசைக்கலைமாணி
திரு.பிரம்மஸ்ரீ
N. சிவசுந்தர சர்மா
இசை ஞான வெள்ளத்தை பருகிட
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனுசரணை
கிருஸ்ணன் மரக்காலை
2 ஆம் குறுக்குத்தெரு
கச்சாய் வீதி, சாவகச்சேரி.
(7697)(2,7,6)



கோலாகல திறப்பு விழா

RED BULL FITNESS CENTER

ஆண், பெண் இருபாலாரும் உடற்
பயிற்சிகளை மேற்கொள்ள சாவகச்சேரி
மண்ணில் உதயமாகும்
புகழ்பெற்ற பிரார்த்தன் மாஸ்ரர்
அவர்களால் வழி நடத்தப்படும்
ஒரேயொரு உடற்பயிற்சி நிலையம் இன்று
(06.01.2012) வெள்ளிக்கிழமை
கோலாகலமாக
ஆரம்பமாகின்றது
என்பதை அறியத் தருகின்றோம்.

RED BULL FITNESS CENTER

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொடர்பு :
0778999727
(இலங்கை
மின்சாரசபை அருகில்)



MCN COMPUTER PARK

Velliruvai, Alvai East, Alvai. T.P. No. 0212262744



MCN நிறுவனமானது
2 ஆவது ஆண்டில் காலடி
பதிக்க உதவிய
அனைவருக்கும் நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றது.

எமது நிறுவனத்தில் நம்பிக்கை வைத்து நிறுவனத்தில் இணைந்து கணினிக் கற்கை நெறியைப் பயின்ற அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அடுத்த ஆண்டுக்கான புதிய கணினி கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.



சிறுவர்களுக்கான புதிய பிரிவுகள்
வயதெல்லை 7 வயது-16 வயது வரை
MS Windows & IT
MS Office- 3000/=
Photoshop - 3000/=
Internet & E-mail 3000/=
கணினி உலகில் நீங்களும் வெற்றி பெற மிகக் குறைந்த கட்டணத்தில் பயிற்சியைப் பெற்று மேலும் ஆயிரம் ரூபா கட்டணத்துடன் சான்றிதழைப்பெற்று உங்கள் வாழ்வை வளமாக்குங்கள்.

ஆரம்பம் 15.01.2012 நிர்வாகம்.
(C/5214)(6,7,8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது அல்மதீனா அணி



யாழ்ப்பாணம், ஜன 6

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 17 ஆவது ஆண்டு நிறைவையொட்டி 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி.வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் மின்ஒளியில் இடம் பெற்று வருகின்றது.

இதில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் அல்.மதீனா விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

அல்.மதீனா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சீர்திருத்தம் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணிகளும் முதல் பாதி ஆட்டத்தில் அபாரமாக மோதிக் கொண்டன.

இந்தவேளையில் அல்.மதீனா விளையாட்டுக்கழகம் தனது அணிக்கான முதலாவது கோலைப் போட்டது.

சீர்த்திருத்தம் விளையாட்டுக் கழக அணியும் கோல் போடுவதற்குப் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது. எனினும் அவை கைகூடவில்லை.

இந்த நேரத்தில் அல்.மதீனா விளையாட்டுக்கழக அணி மேலும் ஒரு கோலைப் போட்டது.


முதலாம் பாதி ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்ட போது அல்மதீனா விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக் கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரு அணியினரும் மிகுந்த உற்சாகத்தோடு களம் இறங்கினர்.

சீர்திருத்தம் விளையாட்டுக் கழக அணி தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தனது அணிக்கான முதலாவது கோலைப்போட்டது.

தொடர்ந்து கோல் பெறுவதற்கு இரண்டு அணிகளுக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அனைத்தையும் அந்த அணிகள் தவற விட்டன.ஆட்ட முடிவில் அல்மதீனா விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

(த-23)



யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான ஊர்சுற்றும் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை வேலணைப் பிரதேச செயலகம் முன்பாக ஆரம்பமானது. நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலாளர் மு.நந்தகோபாலன், தீவக வலய கல்விப் பணிப்பாளர் வீ.இராதாகிருஷ்ணன் ஆகியோர் கொடியசைத்து போட்டியை ஆரம்பித்து வைக்கின்றனர். அருகில் யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஜே.எவ்.ஏ.ரூப சிங்கம் உள்ளார். (த-7)




யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் இரண்டாவது ஆண்டாக நடத்திய 2011ஆம் ஆண்டுக்கான யாழ். நகரின் சிறந்த கழக அணித் தெரிவில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணியினர். (த-23)

# இன்றும் நாளையும் இடம்பெறும் கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,ஜன.06

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் இடையில் 19 வயது பிரிவினருக்கு இடையே நடைபெற்ற கிரிக்கெட் ஆட்டம் இன்றும் நாளையும் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான 19 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டியும் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ம-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.6

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 17 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்ஒளியில் நடத்தி வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈஸ்வரன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ம-23)

கனடா, இங்கிலாந்து அவுஸ்திரேலியா, சுவிஸ், நோர்வே
உட்பட அனைத்து நாடுகளிற்குமான அனைத்து வகையான விசா ஆலோசனைகளிற்கும் வாருங்கள்
விசா விபரம் விளம்பும் பிரிவு
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட்.
முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்,
37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016,
0214914527
www.thisaikaddi.lk
thisaikaddi@sltnet.lk.
[யாழ். நகரிலிருந்து கஸ்தூரியார் வீதி ஊடாக வருகையில்
யாழ். இந்துக் கல்லூரி மைதானம் கடந்த உடன் வலது புறமாக வரும் ஒழுங்கை]

English class
Start
B1 Course Student visa
u.k .செல்வதற்கான வகுப்புகள்
ஆரம்பம்
A1 Sponsor & Settelment Visa
மிக குறைந்த கட்டணத்தில்
ஆரம்பம்:– 15-01-2012
Phone No - 077 9155041
கோவில் வீதி. நல்லூர், யாழ்ப்பாணம்


விற்பனைக்கு
சீற், மரங்கள், தூண்கள், ரியூட்டறி
தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776183064

Soft View
Academy for Computing & IT
Center For Information Technology (Pvt) Ltd
No, 102, Main Street, Jaffna.
021-222 4885
Tel:- 0779053545
(யாழ் சிறைச்சாலை முன்பாக)
Branch:
90A Post Office Road, Trincomalee
026 3261281
Tel:- 0718571602
HeadOffice
Courses Details
Diploma In :-Ms Office , DTP, Hardware, Graphic Designing,Video Editing ,Type Setting Computerized Accounting ,Web Design
● உங்கள் நேரமே எங்கள் சேவையின் நோக்கம்
● தனியாகவோ அல்லது குழுவாகவோ கணினி பயிற்சியை மேற்கொள்ளலாம்
● படிப்பதற்கோ வயதெல்லை இல்லை உடன் விரையுங்கள்!
Internet & Email - 2 Weeks
பிரிவு-1 07-01-2012 பிரிவு-2 12-01-2012
E.C Colin *Nothing is Impossible*

கிளிநொச்சியில்
விளம்பரம் செய்ய
நாடுங்கள்
உதயன்
வன்னிப்பணிமனை,
புனித திரேசா
பாடசாலை முன்பாக
கிளிநொச்சி

யாழ் நகரில்
සිංහල පංති
சிங்கள
வகுப்புகள்
எழுத, பேச, வாசிக்க,
பூரண பயிற்சி
புத்தம் புதிய ஆரம்பம்
சனி, ஞாயிறு தினங்களில்
K. பரமேஸ்வரன்
ஆசிரியர் தொடர்புக்கு 0777 624 510
52. ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
*22★ 08 ★ 1937*

சிவபதம்
*06 ★ 01 ★ 1994*

### அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்

(அம்பிகா டிஸ்பென்சரி)

எங்கள் குடும்பத்தலைவரே
நீங்கள் காட்டிய வழியில்
நாங்கள் என்றும் வாழ்ந்து
உங்கள் எண்ணங்களை நிறைவு செய்வோம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய நுணுவில்
சிதம்பர விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

அம்பிகா டிஸ்பென்சறி,
சாவகச்சேரி. (12539) (2-6-7)

குடும்பத்தினர்
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### ஜோண் யேசுதாசன் (சூரி)

(உரிமையாளர், சூரி போட்டோ)



குருநகரைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் அச்சுக்கூட வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோண் யேசுதாசன் (சூரி) 04.01.2012 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4/1, அச்சுக்கூட வீதி,
யாழ்ப்பாணம். (12544)(2-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### நாதஸ்வரவித்துவான்
### கோவிந்தசாமி வாகீஸ்வரன்

கந்தசுவாமி கோயிலடி, இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தசாமி வாகீஸ்வரன் (03.01.2012) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாதஸ்வரவித்துவான் கோவிந்தசாமி-தனபாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற தவில்வித்துவான் கிருஷ்ணசாமி மற்றும் யோகம்மா தம்பதியரின் மருமகனும், நிலாவதியின் அன்புக் கணவரும், கார்த்திகா, திருத்தணிகன், அர்ச்சயா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற வசந்தகுமார் மற்றும் பத்மசுலோசனா, காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் விஜயகுமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற உதிஷ்டகுமார் மற்றும் இரத்தினகுமார் (மாக்கையா), சத்தியகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரரும், கமலா, கலா, சண்முகரத்தினம், கண்ணன், வேணி, சிவா, ஜெயா, மேனன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.01.2012) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது கந்தசுவாமி கோயிலடி, இணுவில் மேற்கு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் இணுவில் காரைக்கால் இந்து மயானத்தில் நேற்று நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசுவாமி கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில். (12536)(5,6)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயாதீன விசாரணையின்போது கூட்டமைப்பு பதிலளிக்கும்

## ஆணைக்குழு அறிக்கை பற்றி சுமந்திரன்



**இலங்கை அரசு போர்க்குற்றங்கள் எதற்கும் தாம் பொறுப்பில்லை என்பதில் உறுதியாக இருந்தால், இது தொடர்பாக சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படுவதில் அரசு எந்தவொரு கவலையும் கொள்ளத் தேவையில்லை**

இலங்கை இராணுவத்துக்கும் ,விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இறுதிப்போரில் இடம் பெற்ற யுத்தக் குற்றங்களை வெளிப்படுத்துவதில் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையானது பெருமளவில் தவறிழைத்துள்ளது.போர்க் குற்றங்கள் தொடர்பான உண்மையை வெளிக்கொண்டு வரும் விதமாகப் பக்கச்சார்பற்ற, சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு முழுமையான பதிலை அளிக்கும்.- இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.சுமந்திரன் கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

இந்த நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்களைத் தட்டிக் கழித்து அது தொடர்பான விளைவுகளை ஏற்க இலங்கை அரசு, மறுத்திருந்தது. போர்க் குற்றங்கள் தொடர்பாக பொறுப்புக் கூறத்தக்க விதமாக தேசியளவில் உருவாக்கப்பட்ட பொறிமுறையாக கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவை அது உலகுக்குக் காட்டியது. எனினும் போர்க்குற்றங்கள் குறித்து நல்லிணக்க ஆணைக்குழு உரிய முறையில் முழுமையாகப் பொறுப்புக் கூறத் தவறிவிட்டது.

இலங்கை அரசையோ விடுதலைப் புலிகளையோ சாராது, போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பான உண்மையை வெளிக் கொண்டு வரும் விதமாக பக்கச்சார்பற்ற, சுயாதீன விசாரணை ஒன்று மேற் கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைக்கு முழுமையான பதிலை அளிக்கும்.''

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உலகம் முழுவதும் சுற்றி வந்து, இறுதிக் கட்டப்போரில் என்ன நடந்தது என்பதற்கான பொறுப்பைக் கூறும் வகையிலேயே நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை உள்ளதாக புகழ்ந்து வருகின்றார்.

சுயாதீனமாக மேற்கொள்ளப்படும் விசாரணையின்மூலம் மட்டுமே உண்மை என்ன என்பது வெளிப்படுத்தப்பட முடியும். இலங்கை அரசு போர்க்குற்றங்கள் எதற்கும் தாம் பொறுப்பில்லை என்பதில் உறுதியாக இருந்தால், இது தொடர்பாக சுயாதீன விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படுவதில் அரசு எந்தவொரு கவலையும் கொள்ளத் தேவையில்லை- என்றார். (ங)

# புதுமாத்தளனில் மீன்பிடிக்க நிபந்தனைகளுடன் அனுமதி

புதுக்குடியிருப்பு புதுமாத்தளன் ஆழ்கடலில் நாளை தொடக்கம் 24 மணி நேரமும் மீன்பிடிப்பதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். எனினும் 15 குதிரை வலுக் கொண்ட இயந்திரத்தை மட்டும் பாவித்து 12 கடல் மைல் தூரத்துக்குள் மட்டும் தொழில் செய்ய வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலையில் கடந்த 24 ஆம் திகதி 320 மீனவக் குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டன. இவர்களுக்கே புது மாத்தளன் ஆழ்கடலில் மீன்பிடிக்கநாளை முதல் படையினரால் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடற்தொழிலையே நம்பி வாழ்ந்து வரும்மீனவர்கள் இந்தத்தொழிலுக்குச் செல்வதற்குப் பாதுகாப்புப் படையினர் அனுமதி மறுத்திருந்தனர். இதனால் இவர்கள் தொழிலின்றி வருமானமின்றி வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடினர்.

இந்த நிலை குறித்துப் பாதுகாப்புப்படையினரின் கவனத்துக்குக்கொண்டு வந்ததைத் தொடர்ந்து புது மாத்தளன் ஆழ்கடல் பரப்பில் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவதற்கான சகல ஒழுங்குகளையும் செய்வதில்தற்பொழுது மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். (எ)

# ஒட்டுசுட்டானில் எரிபொருள் நிலையம் அமைக்கப்படுகிறது

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

ஒட்டுசுட்டான் முல்லைத் தீவு வீதியிலேயே இந்த எரிபொருள் நிரப்பு நிலையம் அமைக்கப்பட்டுவருகிறது.

இந்தப் பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் இல்லாததால் நீண்ட தூரம் சென்று எரிபொருளை மக்கள் பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில்அமைக்கப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்தால் மக்கள் நன்மை அடைவார்கள் எனத் தெரிவிக்கின்றனர். (எ-500)

# தமிழ் - முஸ்லிம்கள் இணக்கப்பாடு அரசியல் தீர்வுக்கு மிகவும் அவசியம்

## செனட்டர் மசூர் மௌலானா தெரிவிப்பு

**பிரிட்டிஷ்காரர்கள் அப் போது பிரித்தாளும் தந்திரத் தைப் பின்பற்றி வெற்றி கண்டனர். ஆனால், இப்போது பிரித்தழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன**

வடக்கு, கிழக்கு தமிழ் - முஸ்லிம்கள் ஒற்றுமைப்பட்டு ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்தால் மாத்திரமே அரசியல் தீர்வு சாத்தியமானதாகவும், பயனுடையதாகவும் அமையும். இல்லாவிட்டால், அது முரண்பாடுகள் நிறைந்த தீர்வாகவே இருக்கும்.

- இவ்வாறு செனட்டரும், கல்முனை முன்னாள் மேயருமான மசூர் மௌலானா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கின் இன்றைய நிலையை நாம் நன்கு கூர்ந்து கவனிக்கின்றபோது தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமையின் முக்கியத்துவம் புலப்படுகின்றது.

இன்று அரசியல் தீர்வு பற்றி பரவலாகப் பேசப் படுகிறது. இத்தீர்வை மிகத் துரிதமாக முன்வைப்பதற்குப் பல தரப்பினரிடமிருந்தும் அரசுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

இந்தத் தீர்வு தேவைப் படுவது வடக்கு, கிழக்கு தமிழ் - முஸ்லிம் மக்களுக்குத்தான். இதை தமிழ் மக்களுக்கு மாத்திரம் தேவையான தீர்வாகவோ அல்லது முஸ்லிம் மக்களுக்கு மாத்திரம் தேவையான தீர்வாகவோ நாம் பார்க்கக் கூடாது.

தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமைப்பட்டே இத்தீர்வைப் பெறவேண்டும். நாம் முரண்பட்டுக்கொண்டால் தீர்வு சாத்திற்றதாகவும், பிரயோசனமற்றதாகவும் போய்விடும்.

எமது இன முரண் பாடுகளைப் பயன்படுத்தி பெரும்பான்மை இனத் தலைவர்கள் தீர்வுத் திட்டத்தை இழுத்தடிக்க முயற்சிப்பர். அது சிறுபான்மை இன மக்களுக்குத்தான் ஆபத்தாக அமையும்.

பிரிட்டிஷ்காரர்கள் அப்போது பிரித்தாளும் தந்திரத்தைப் பின்பற்றி வெற்றி கண்டனர். ஆனால், இப்போது பிரித்தழிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவற்றுள் தமிழ் - முஸ்லிம்கள் சிக்கிவிடாது ஒற்றுமையைக் கடைப் பிடிக்கவேண்டும்.

அதேபோல், ஏனைய முஸ்லிம் கட்சிகளையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மேற்கொள்கிறார். இது மிகவும் வரவேற்கத்தக்கது.

அனைத்து முஸ்லிம் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்ற நிலைப் பாட்டில் துஆ கட்சித் தலைவர் ஹாபீஸ் நஸீரும் உள்ளார் என்பதை நாம் அறிவோம். அவர் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவரது முயற்சி வெற்றிபெறவேண்டும் - என்றார். (சி)

# கூட்டமைப்புடன் இனிமேல் மென்போக்குடனேயே பேச்சு

**மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு நாங்கள் கவலைப் படுகிறோம்.**



கொழும்பு, ஜன.6

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவின் வருகை, மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்தப்படும் பேச்சுக்களில் மென்போக்கை கடைப் பிடிக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அரசின் அதிகாரபூர்வ இணையத்தளத்துக்கு வழங்கிய நேர்காணலில் இது பற்றி அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, கோடிகாட்டியுள்ளார். காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை நடத்த அரசு தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு நாங்கள் கவலைப்படுகிறோம். எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அத்தகையதொரு திட்டம் இருக்குமேயானால், அந்த அதிகாரங்களை குறிப்பிட்ட எல்லைக்குள் பகிர்ந்தளிப்பது குறித்து நாம் பேசத் தயாராகவே இருக்கிறோம். நாளாந்த விவகாரங்களில் - குறிப்பாக, சிறிய குற்றங்கள் மற்றும் முறைப்பாடுகளை மாகாண அதிகாரிகள் கையாள முடியும்.அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களில் தொடர்ந்தும் அரசுடன் ஈடுபடவேண்டும் - என்று அவர் மேலும் கூறினார். (ங-சி)

# வன்னியில் சமூக விரோதச் செயல்கள் ஐயா! உடன் தடுத்து நிறுத்துங்கள்

## ஜனாதிபதிக்கு சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கடிதம்

முல்லைத்தீவு, ஜன. 6

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் களவு மற்றும் சட்ட விரோதச் செயல்களை தடுத்து நிறுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளைத் துரிதமாக முன்னெடுக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் முழு விவரம் வருமாறு:

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் மீளக்குடியேற்றம் செய்யப்படாத எல்லைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ காவலரணைத் தாண்டி பொது மக்கள்செல்வதற்குத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் சமூக விரோதிகள் இந்தக் காவலரணில் உள்ள இராணுவத்தினருக்குச் சாராயம், சிகரெட், கையடக்கத்தொலைபேசி, முற்கொடுப்பனவு அட்டைகள் போன்றவற்றைக் கொடுத்து இந்தப் பகுதிக்குச் சென்று பாடசாலைத் தளபாடங்கள், வீட்டுத் தளபாடங்கள் கதவுகள், யன்னல்கள் உள்ளிட்ட பொருள்களையும் மக்களால் கைவிடப்பட்ட இரும்புப் பொருள்களையும் கொள்ளையடித்துச் செல்கின்றனர்

அத்துடன் மக்கள் குடியேறிய இடங்களில் இரவு நேரங்களில் குடிபோதையில் கும்மாளத்திலும் இருக்கின்றனர்.இதனால் பாதுகாப்பற்ற தற்காலிகக் கூடாரங்களில் வசிக்கும் மீளக்குடியேறிய மக்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இத்தகைய செயற்பாடுகளால் பெரிதும் சிரமப்பட்ட மக்கள் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்துள்ளனர். அந்தப் பகுதிக்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உழவு இயந்திரத்தையும் சமூக விரோதிகளையும் பெட்டியுடன் இழுத்துச் சென்றுள்ளனர். பின்னர் எதுவித நடவடிக்கையையும் இன்றி அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலையாகி வந்த மேற்படி நபர்கள் நாங்கள் புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்துக்கு பணம் கொடுத்து வெளியில் வந்துவிட்டோம் நீங்கள் தான் தகவல் கொடுத்தீர்கள் என்பதையும் பொலிஸ் எங்களுக்குச்சொல்லிவிட்டார்கள் என்று புகார் கொடுத்தவரின் வீட்டுக்கு நேரடியாகச் சென்று அவரை மிரட்டியுள்ளனர்.

சட்ட விரோத செயல்களை நிறுத்துவதற்கு ஆவனம் செய்து மீள்குடியேறிய மக்கள் அச்சமின்றிவாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தி பொது மக்களின் எஞ்சிய சொத்துக்களைப் பாதுகாத்து அவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்குமாறு அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிலடி கொடுக்குமா இலங்கை?

இலங்கை தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஹேப் ரவுனில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணியின் தலைவர் ரி.எம். டில்ஷான் முதலில் களத் தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி கலிஸின் இரட்டைச் சதத்தின் உதவியுடன் 4 இலக்குகளை இழந்து 580 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி நேற்று முன் தினம் ஆட்ட நேர முடிவில் 2 இலக்குகளை இழந்து 149 ஓட்டங் களைப் பெற்றிருந்தது. களத்தில் சங்ககார 35, மஹேல 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமாகி மூன்றாவது பந்திலேயே சங்ககார 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். தொடர்ந்து வந்தவர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்க அணி சகல விக்கட்டுக்களையும் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது.


'பலோ ஒன்' நிலையில் 341 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை இலங்கை தொடங்கியது. இருப்பினும் டில்ஷான் 5 ஓட்டங்களுடன் ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்து ஏமாற்றினார். அதன் பின்னர் இணைந்த சங்ககார, திரிமன்னே நிதானமாகாத் துடுப்பெடுத்தாடினர். இருவரதும் பொறுமையான ஆட்டத்தில் இலங்கை அணி 50 ஓட்டங்களைத் தாண்டியது. இரண்டாவது இலக்குக்காக 67 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலை யில் தரிமன்னே 30 ஓட் டங்களுடன் கலிஸின் பந்து வீச்சில் ஆட்டமிழக்க இலங்கை அணி 79 ஓட்டங்களுக்கு தனது இரண்டாவது இலக்கை பறிகொடுத்தது.

அதன் பின்னர் முன்னாள் அணித்தலைவர்களான சங்ககார, மஹேல ஜெயவர்தன இணைந்து துடுப்பெடுத்தாடத் தொடங்கினர். இருப்பினும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த சங்ககார 34 ஓட்டங்களுடன் இம்ரான் தகீரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

ஆட்டநேர முடிவில் சமரவீரவும் உப அணித்தலைவர் மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் நின்றனர். அணி 4 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று தோல்வியின் விளிம்பில் தவிக்கின்றது. பந்து வீச்சில் பிளென்டர், மோர்கல், தகீர், கலிஸ் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். (15)

## கண்ணீர் அஞ்சலி

### சாந்தலிங்கம் சித்திரவேல்



திரு. சி.கிருஸ்ணா அவர்களின் அன்புத் தந்தை சித்திரவேல் நேற்று (05.01.2012) வியாழக்கிழமை இறைபதமடைந்தமையையிட்டு அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடுப்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மின்சாரசபை களஞ்சியக் காப்பாளர்,
மின்சாரசபை ஊழியர்கள்,
பாதுகாவலர்கள்,
சுன்னாகம்.


## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். கே.கே.எஸ். றோட், இணுவில்.

(இரு இடத்திலும்)

A/L 2014

கலை, வர்த்தகப் பிரிவு

நாளை ஆரம்பம்

யாழ்.நகரில் — இணுவிலில்

8.00 A.M. ← கலைப்பிரிவு → 8.00 A.M.
9.00 A.M. ← வர்த்தகப் பிரிவு → 2.00 P.M.

Note: மாணவர்கள் கவனத்திற்கு

* யாழ்.நகரில் எமக்கு வேறு நிறுவனம் இல்லை.
* நீங்கள் வரும்போது நாவலர் றோட்டில் அமைந்துள்ள (பொருளியற் கல்லூரி) என்று கேட்டு வாருங்கள்.

(97744)

## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

MyWay ஆசிரியரின் நேரடி வகுப்பில் கலந்து இலகுவாக முழுமையாக ஆங்கிலம் கதைப்பதிலும் இலக்கணத்திலும் தேர்ச்சிபெறுவதற்கான சந்தர்ப்பம்

சனி, ஞாயிறு புதிய பிரிவு ஆரம்பம் – 07.01.2012

ஆசிரியர்கள், அரச அலுவலர்கள் மட்டும்

| | |
|---|---|
| NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 8.00 - 9.00 | 182 ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் மாலை 2.00 - 3.00 |
| நகரசபை அருகில் சாவகச்சேரி காலை 10.00 - 11.00 | இலங்கை வங்கி மேல்மாடி சங்கானை மாலை 4.00 - 5.00 |

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள் O/L, A/L எழுதிய மாணவர், இளைஞர், யுவதிகள்

| | |
|---|---|
| NSB அருகில், கொடிகாமம் வீதி, நெல்லியடி - காலை 9.00 - 10.00 | 182 ஸ்ரான்லி வீதி, யாழ்பாணம் மாலை 3.00 - 4.00 |
| நகரசபை அருகில் சாவகச்சேரி காலை 11.00 - 12.00 | இலங்கை வங்கி மேல்மாடி சங்கானை மாலை 5.00 - 6.00 |

ஒவ்வொருவரின் ஆங்கில அறிவு மட்டத்திற்கேற்ப பிரிவுகளில் வகுப்புக்கள் நடாத்தப்படுவதோடு திருப்தி இல்லாதவர்களுக்கு முழுப்பணமும் திருப்பித்தரப்படும்

MyWay 077 33 63 456

## Chemistry English/ Tamil Medium

2012/2014 Batchd, Physical Chemistry Organic Chemistry, கடந்த கால வினாக்கள் அனுபவம் மிக்க ஆசிரியரால் (B.Sc, M.Sc) தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0776038913 (12600)

## விற்பனைக்கு

சீற், மரங்கள், தூண்கள், ரியூட்டறி தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776183064 (12596)

## LLB விசேட கருத்தரங்கு SLAS

ஜனவரி 14 திறந்த பல்கலைக்கழக சட்டமானி (LLB) சட்டமானி பரீட்சைக்கான விசேட இறுதிக் கருத்தரங்கு

காலம் - 07.01.2012 சனி காலை 9 - பி.ப. 5 மணிவரை-கட்டணம் 500/=

ஜனவரி 20 ஆம், 21 ஆம் திகதி நடைபெறவுள்ள SLASபோட்டிப் பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு

காலம் - 07.01.2012, 14.01.2012 சனிக்கிழமைகளில் காலை 9 - பி.ப. 5 மணிவரை-கட்டணம் 500/=

விரிவுரைகள் - P. உமாசங்கர், P.கமல்தாசன்

நாவலர் கல்வி நிலையம் — பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## BRAIN POWER INSTITUTE

பாங்ஷால் வீதி - குருநகர்

A/L 2014 கலைப்பிரிவு No 1

யாழ்.நகரின் புகழ்பூத்த முன்னணி ஆசிரியரின் ஒருங்கிணைந்த சேவையில்

| | |
|---|---|
| பொருளியல் | - திரு. N.B.கஜிதரன் |
| தமிழ் | - திரு. R.R . வசீகரன் |
| அளவையியல் | - திரு. ஸ்ரீ.ரமணன் |
| கிறிஸ்தவம் | |
| கிறிஸ்தவ நாகரிகம் | - திரு. J.J.வசந்தன் |
| புவியியல் | - திரு. ஆனந்தராஜா |
| பொது ஆங்கிலம் | - திரு. சுமன்ராஜ் |

ஆரம்பம் 06.01.2012 வெள்ளி மாலை 4 மணி

* ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
* முழுமைத்துவமான அர்ப்பணிப்பான கற்பித்தல்

"கல்வியே உங்கள் தேவை அதுவே எங்கள் சேவை"

## BRAIN POWER INSTITUTE

பாங்ஷால் வீதி - குருநகர்

A/L 2014 வர்த்தகப்பிரிவு A/L 2014

யாழ்.நகரின் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்...

| | |
|---|---|
| பொருளியல் | - திரு. N.B.கஜிதரன் |
| வணிகக்கல்வி | - திரு. S.K. பாலசபேஷ் |
| கணக்கீடு | - திரு. பாலகஜன் |

ஆரம்பம் 06.01.2012 வெள்ளி மாலை 4 மணி

"கல்வியே உங்கள் தேவை அதுவே எங்கள் சேவை"

## விற்பனைக்கு

பருத்தித்துறை, வல்லிபுரக்குறிச்சி இறைநெல்லியவத்தை நி.பர 08 குளி 03.5 விஸ்தீரணமானதும், கிணற்றுடன் அமைந்துள்ளதுமான காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0771349125
லோ.சறோஜினிதேவி

## வீடு வாடகைக்கு

புலோலி, கொடிகாமம் வீதி, மந்திகையை அண்டிய இடத்தில் 8 பரப்புடன் சகல வசதிகளையும் கொண்ட பெரிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 0771349125

## வீடு வந்து கற்பித்தல்

Chemistry, Biology தமிழ்/ஆங்கில மொழிகளில் கற்க அழையுங்கள் வித்யா சுழற்றுங்கள் 0777730838, 25 வருட அனுபவம். மணித்தியாலத்துக்கு ரூபா 500/=


## தவறிவிட்டது

37, 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த பேரானந்தம் திலீபன் என்பவரது தேசிய அ.அட்டை (851532129V) 20.12.2011 அன்று கொழும்புத் துறைக் ... கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். 0777789990

## 40 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



உடுவில் கிழக்கு இணுவிலைச் சேர்ந்த
**கிருஸ்ணபாலா சிவமலர்**
இன்று (06.01.2012) வெள்ளிக்கிழமை 40 ஆவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை இன்னும் பல ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழவேண்டும் என வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
கணவர்-கிருஸ்ணபாலா (மோகன்),
அம்மா-யோகமங்களம்,
மகன்-மதுரஷன் மற்றும் மாமாமார், மாமிமார் ,
அன்ரிமார், சித்தப்பாமார், மச்சான்மார், தங்கைமார்,
தம்பிமார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் வாழ்த்துகிறார்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 27 . 11 . 1925 — இறப்பு 08 . 12 . 2011



### அமரர் அம்பலவாணர் - கந்தசாமி

கடந்த 08.01.2012 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 07.01.2012 சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

புளியங்கூடல் தெற்கு,
புளியங்கூடல். (C-7745)
உதயபுத்திரன் (உதயன்)
(மகன்)

## மரண அறிவித்தல்கள்

### சாந்தலிங்கம் சித்திரவேல் (பத்தர்)

(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்)



உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தலிங்கம் சித்திரவேல் நேற்று 05.12.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாந்தலிங்கம்-பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், பவளராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கிருஷ்ணசாமி-இந்திராணி தம்பதியரின் அன்பு மருமகனும், கிருஷ்ணானந் (இலங்கை மின்சார சபை களஞ்சியக் காப்பாளர், சுன்னாகம்) இன் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி, இராசலட்சுமி, யோகரட்ணம், தங்கரட்ணம், சிவசோதிமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கந்தசாமி வெற்றிவேலாயுதம், காலஞ்சென்றவர்களான குணசிங்கம், புஷ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2012) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மான்பாடசாலை வீதி,
உடுவில்.
தகவல்:
த.லோகராஜா, (பெறாமகன்).

### சண்முகம் சுப்பிரமணியம்



காரைநகர் களபூமி, திக்கரையைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் சுப்பிரமணியம் நேற்று 05.12.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம்-சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், சோதிநாதன் (காரைநகர்), தவரஜனி (கொழும்பு), சிவலிங்கம் (டோஹா), இராஜேஸ்வரி (விவசாயப் போதனாசிரியர், விவசாயத் திணைக்களம்-முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன் (லிங்கம்-கொழும்பு), தவச்செல்வி (காரைநகர்) ஆகியோரின் மாமனும், நிக்ஷன், கர்ஷன், கம்சிகா, பிறிசில்லா ஆகியோரின் அன்புப் பேரனும், பேரம்பலம் (வவுனியா), காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னம்மா (சிங்கப்பூர்), முருகேசு, அன்னபூரணம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

களபூமி,
காரைநகர்.
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா மனோகரன்

கைதடி நாவற்குழியைச் சேர்ந்த கந்தையா மனோகரன் நேற்று (05.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கைதடி, நாவற்குழி.* (சி-7750) தகவல்: பிள்ளைகள்.

### சோமசுந்தரம் செல்வரத்தினம்

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு, கிராம்புவிலை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் செல்வரத்தினம் நேற்று (05.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் இராசமணி தம்பதியரின் மகனும் மனோரஞ்சிதத்தின் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2012) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் கட்டை வீதி,*
*கிராம்புவில், சாவகச்சேரி.*

தகவல்:
குடும்பத்தினர்.

## நல்லூர் பிரதேச சபை
## 2012ம் ஆண்டுக்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், ஒப்பந்தகாரர்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் 20.01.2012ம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பொருள்கள்**

01. காகிதாதிகள் எழுதுபொருள்கள்.
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள் இரும்பு அலுமாரி)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. கோலவுடைத்துணிகள், யன்னல் துணிகள்,ஏனைய துணி வகைகள்.
05. கட்டடப்பொருள்கள்(சிமெந்து ஓடுகள்)
06. தீந்தைகள்,நிறந்தீட்டும் பொருள்கள் முதலியன.
07. கற்கள்,மணல்
08. நீர் வழங்கு பொருள்கள்,பி.வி.சி.குழாய்கள் முதலியன.
09. வாகன உதிரிப்பாகங்கள்,துணை உறுப்புக்கள்.
10. மின்சார இயந்திரப் பொருள்கள்,மின்கருவிகள்
11. எரிபொருள்கள்,உராய்வு நீக்கிகள்.
12. இரும்புப் பொருள்கள்
13. பனைமரங்கள் சலாகைகள்.
14. நூலகங்களுக்குரிய நூல்கள்
15. வாகனங்களுக்கான பற்றரிகள்,ரயர்கள்,ரியூப் முதலியன.
16. தீராந்திகள்,நீப்பைகள்,பலகைகள்.
17. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம் இழைக்கயிறு,தேடாக்கயிறு,முதலியன.
18. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும் மருந்துகளும்
19. கணினி, கணினிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோ பிரதி இயந்திரம் இயந்திரங்களிற்கான உதிரிப்பாகங்கள் வழங்கல்.
20. பாதணிகள்,மழைக்கவசம்,மற்றும் தோல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தல்
03. மோட்டார் வாகனம் திருத்தல்
04. ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டு வேலை உலோக வேலைகள்
06. ஏற்றியிறக்கும் வேலைகளுக்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல்
07. சுத்திகரிப்பு ஏற்றியிறக்கல் வேலைக்கு ரக்டர் வாடகைக்கு விடல்
08. கோலவுடை தைத்தல்
09. மின் மோட்டார்கள், மின்விசிறிகள்,ஜெனரேட்டர்கள், குளிர்சாதனப்பெட்டிகள் திருத்தம்
10. மீள மின்வலுவூட்டல்
11. றப்பர் முத்திரை தயாரித்தல்
12. வாகனங்கள் சேவிஸ் செய்தல்
13. கணினி இயந்திரம்,போட்டோப்பிரதி இயந்திரம், சேவிஸ் செய்தல்.

ஒவ்வொரு வழங்கல் சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும் இப்படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 500.00 வற்வரி நீங்கலாக) செலுத்தவேண்டும்

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள்,சேவைகளுக்கான விண்ணப்பம் 2012" எனக்குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் தலைவர்,தலைமை அலுவலகம்,நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**நல்லூர் பிரதேச சபை,**
**கொக்குவில்.**

### இந்திய மீனவர் நால்வர் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.6

இயந்திரக் கோளாறு காரணமாக திசைமாறி வந்த நான்கு இந்திய மீனவர்களை கடற்படையினர் நேற்று மாலை 2.30 மணியளவில் மீட்டு நெடுந்தீவுப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிப் பதற்காக படகு ஒன்றில் புறப்பட்ட இந்த நால்வரும் இயந்திரக் கோளாறு காரணமாக திசைமாறி நெடுந்தீவுக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த வேளை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட நான்கு இந்திய மீனவர்களும் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இன்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

மீட்கப்பட்டவர்கள் சூ.கார்மேகம், பொ.முனுசாமி, பி.அலெக்ஸ்சாண்டர், ஜெயம் மாக்சலீன் ஆகியோர் என தெரிவிக்கப்படுகிறது.

(10-323-7)

## மரண அறிவித்தல்

### பாஸ்கரன் ஜம்ஸ்ரன்



பிறவுண் வீதி, கலட்டிச் சந்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பாஸ்கரன் ஜம்ஸ்ரன் நேற்று (05.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பாஸ்கரன் - சுகந்தினி தம்பதியரின் பாசமிகு மகனும் வஜிந்தாவின் சகோதரனும் சத்தியசீலன் (செல்வம்), ஜெயசீலன் (தேவன்), விக்கினேஸ்வரன் (மோகன்), தினேஷ்காந்தன் (ரமணன்), ராஜேஸ்வரி, சுகுனேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் கௌசலாதேவி, சுமதி, றெஜினா, நிர்மலாதேவி, சர்மிளாதேவி (உமா), தர்மலிங்கம், இராசலிங்கம் (பிரான்ஸ்), யோகலிங்கம் (பிரான்ஸ்), தவலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மருமகனும் முருகையா, பூமணி, சின்னத்தம்பி, செல்லம்மா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2012) வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாஸ்கரன் (தந்தை)

*இல.14, பிறவுண் வீதி,*
*கலட்டிச் சந்தி, யாழ்.*

## மரண அறிவித்தல்

### கதிர்காமு கந்தவனம்



கரணவாய் தெற்கு, வீரப்பதிராயரைப் பிறப்பிடமாகவும் கப்பூது கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு கந்தவனம் நேற்று (05.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - தெய்வானையின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் - வேதநாயகி ஆகியோரின் பாசமிகு மருமகனும், தங்கம்மாவின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்புக் கணவரும் செல்லையா (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) காலஞ்சென்ற சபாரட்ணம் (முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் சகோதரனும், தவராசா (லண்டன்) தவமலர் (அதிபர், யா/கப்பூது ஏகாம்பர வித்தியாலயம்) காலஞ்சென்ற தவகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகுமாரன் (தொழில்நுட்ப உதவியாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை-பருத்தித்துறை), புஸ்பலீலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் நெஷாந்தன் (லண்டன்), நிலுயா, நிரோஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (08.01.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் கப்பூது இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*[illegible]*
*[illegible]*
*கரவெட்டி.*

தகவல்:
ஆ.ஜெயக்குமாரன்
(மருமகன் - RDA பருத்தித்துறை)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர் மே.நெல்சன்
அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் செ.மேரிபோசை**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத் தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
(12602) யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் கனகசிங்கம்

(முன்னாள் நேரக் கணிப்பாளர் சிமெந்து தொழிற்சாலை)



பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் கனகசிங்கம் நேற்று (05.01.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஞானம்மா வல்லிபுரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி இரத்தினம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆறுமுகசாமி (முன்னாள் வீதி பரிசோதகர் இ.போ.ச.), காலஞ்சென்றவர்களான அருணாசலம், செல்வராசா, தேவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கலாநிதி, கலாநாதன் (ஜேர்மனி), கலாறஞ்சினி, கலாமோகன் (ஆசிரியர் யா/சுதுமலை சின்மய பாரதி வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகன்நாதன், தமயந்தி (ஜேர்மனி), சுரேந்திரன், கல்யாணி (ஆசிரியர், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும், கலாரூபி, றதீசன், கபிலன், தீபா (ஜேர்மனி), துளசி (ஜேர்மனி), தனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஜெகதாம்பிகை அம்மாவின் அன்பு மைத்துனரும் நந்தினி, கஜேந்திரன் (பொறியியல் பகுதி இ.போ.ச. பருத்தித்துறை), தனேந்திரன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாமசி லேன்,*
*இணுவில் வீதி,*
*மானிப்பாய்.* (12603)

தகவல்:
க.கலாமோகன் ( மகன்)
(புலமைக் கல்வி நிறுவன இயக்குனர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றம் குறித்து சர்வதேச விசாரணை

இறுதிக்கட்டப் போரில் இடம் பெற்றவை எனக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச ரீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் - என்று மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் வலியுறுத்தியுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

மேலும், சர்வதேச விசாரணைகளை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் மாற்றுக்கொள்கை களுக்காக கேந்திர நிலையம் வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அது வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கை வரவேற்கப்பட வேண்டியது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முக்கியமான நிறுவனங்களை அரசியல் மயப்படுத்தக் கூடாது என்ற யோசனை, தகவல்களை அறிந்து கொள்ளும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என்ற யோசனை உள்ளிட்ட பல காத்திரமான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற பரிந்துரை வரவேற்கப்பட வேண்டியது.

இன சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண் டும்.

கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாமல் இருக்கும் நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் படையினரின் செயற்பாடுகள் குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு குறிப்பிட்ட விடயங்கள் ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

குற்றச்சாட்டுகளை மூடி மறைப்பதை விடவும், சர்வதேச ரீதியிலான விசாரணை நடத்தி பிரச்சி னைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டியது அவசிமானது.

குற்றச்செயல்கள் தொடர்பில் தேசிய ரீதியாக விசாரணை நடத்தப்பட்டால் அதன் நேர்மைத் தன்மை குறித்து சந்தேகம் நிலவு கிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட பல முக்கிய வியடங்கள் குறித்து உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு செய்துள்ள பரிந்துரைகளை அரசு உடனடியாக அமுல்படுத்த வேண்டும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்க் கூட்டமைப்புடன் அரசு மென்போக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு களை நடத்த அரசு தயாராகவுள்ளது எனக் கூறியுள்ளார்.

மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுப்பதற்கு நாங்கள் கவலைப்படுகிறோம். எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அத்தகையதொரு திட்டம் இருக்கு மேயானால், அந்த அதிகாரங்களை குறிப்பிட்ட எல்லைக்குள் பகிர்ந்தளிப்பது குறித்து பேசத் தயாராக இருக்கிறோம்.

நாளாந்த விவகாரங்களில் - குறிப்பாக, சிறிய குற்றங்கள் மற்றும் முறைப்பாடுகளை மாகாண அதிகாரிகள் கையாள முடியும்.

அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் அரசுடன் பேச்சுகளை நடத்திக் கொண்டிருக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும், பேச்சுகளைத் தொடர்ந்து நடத்துவதற்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி வருகிறது.

1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கமைய உருவாக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அமை வான இந்த அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று கூட்டமைப்பு வலியுறுத்தி வருகிறது.ஆனால், கூட்டமைப்பின் இந் தக் கோரிக்கை நியாயமற்றது - ஏற் றுக்கொள்ள முடியாதது என்று நிராகரித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவர்கள் இன்னமும் புலிகளின் நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர் எனவும் கூறியிருந்தார்.பொலிஸ் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்தால், வடக்கே செல்லும்போது தன்னை அவர்கள் கைது செய்யக் கூடும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

தற்போது மட்டுப்படுத்தப்பட் டளவில் காணி, பொலிஸ் அதிகாரங் களை பகிர்ந்து கொள்வது குறித்துப் பேசத் தயாராக இருப்பதாக அரசு கூறியுள்ளது குறிப் பிடத்தக்கது.

## தேர்தல் திருத்தச் சட்ட மூலம் 17 ஆம் திகதி நாடாளுமன்றில் கட்சிகள் ஆதரவு வழங்கும் என அரசு எதிர்பார்ப்பு

கொழும்பு, ஜன.6

உள்ளூராட்சித் தேர்தல் திருத் தச் சட்ட மூலம் எதிர்வரும் 17 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்க் கிக்கப்படவுள்ளது. இச் சட்டமூலத் திற்கு பெரும்பான்மையான கட்சிகள் அமோக ஆதரவை வழங்கும் என அரசு எதிர்பார்க்கிறது.

- இவ்வாறு ஆளும்தரப்பின் பிர தான கொறடாவும் நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச் சருமான தினேஷ் குணவர்த்தன நேற்றுத் தெரிவித்தார்.

இந்த திருத்தச் சட்டத்தின் மூலம் கூடிய வாக்குகளை பெறுவோர் வெற்றிப்பெறல் மற்றும் விகிதா சார பிரதிநிதித்துவம் ஆகிய இரண் டும் கலந்த உள்ளூராட்சித் தேர்தல் முறை இலங்கையில் அறிமுகமாகும்.

உள்ளூராட்சித் தேர்தலில் விகிதாசார பிரதிநித்துவ முறை மாற்றப்பட வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்ததை அடுத்து ஜனாதிபதி புதிய சட்டத்துக்கு தனது ஆதரவை வெளிப் படுத்தியுள்ளார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மரணத்திற்கு காரண மாக அமைந்த தேர்தல் தினதுப் பாக்கி சூட்டுச் சம்பவத்திற்குப் பின் இந் தத் தேர்தல் சீர்த்திருத் தத்துக்கான அவசர தேவை நாடா ளு மன்ற உறுப்பினர்கள் பலரால் உண ரப்பட்டது எனக் கூறப்படுகிறது.

## தீர்வுக்கு அரசு பின்னடிப்பு தமிழர் மத்தியில் அதிருப்தி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மும் கூட. இவ்வாறு பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரிடம் யாழ் ஆயர் விபரித்து தெளிவு படுத்தினார்.

இராணுவக் குறைப்பு மிகவும் அவசியமானது என்பதையும் தற்போது தமிழர் பகுதிகள் இராணுவமயமாக இருக்கிறது என்பதையும் யாழ் ஆயர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சந்திப்பின் போது பிரிட்டனுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் டாக்டர் கிறஸ் நோனிஸ் இலங்கை வெளிவிவகார அமைச்சின் அரசியல்பிரிவுக்கான அதிகாரி மக்ஸ்வெல்கீஜவ், யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினருடன் வருகை தந்திருந்தனர்.

பல தரப்பு மக்களுடனும் சந்தித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சமகால பிரச்சினைகள் தொடர்பில் மக்களிடமே பிரிட்டன் நாடாளுமன்றக் குழுவினர் நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

இரண்டு நாள் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் வார்ட்டனிடம் நேற்றைய தினம் காலை 8 மணி முதல் 10 மணி வரையில் யாழ். நகரின் முக்கியமான இடங்களைப் பார் வையிட்டார்.

இதன்போது யாழ்.மத்திய பஸ் நிலையம், அருகிலிருந்த புத்தக சாலைக்கு வந்த குழுவினர் நகரின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பொதுமக்களுடன் கலந்துரையாடினார். இதன்போது இளைஞர் களிடம், வெளிநாட்டுக்குச் செல்லும் ஆசை இருக்கிறதா என நாடாளுமன்ற உறுப்பினர் கேட்ட போது, இங்கு வேலைவாய்ப்புக் கிடைத்தால் வெளிநாட்டுக்குச் செல்லமாட்டோம் எனப் பதி லளித்தனர்.

பொது மக்கள் தமது வாழ்வாதாரப் பிரச்சினை வறுமை நிலை, வீடில்லாப் பிரச்சினைகள் தொடர்பிலும் நேரடியாகவே தெரிவித்தனர். மேலும் யாழ்ப்பாணத்தின் வங்கிச் செயற்பாடுகள் தொடர்பாகவும் வங்கி அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சென்ற நாடாளுமன்றக் குழுவினர், வைத்தியசாலையின் கட்டுமானப் பணிகளை நேரடியாகப் பார்வையிட் டதுடன் மேலதிக தேவைகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

நாடாளுமன்றக் குழுவினருடன் யாழ். மாவட்ட அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும் உடனிருந்தார்.

(ஒ-14-15-23)

## இந்திய மீனவர் மீது இலங்கைப்படை தாக்கு

கச்சதீவு கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற் படையினர் நேற்று கற்களை வீசி தாக்குதல் நடத்தினர் என இந்திய மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கடற்தொழிலுக்கு சென்ற 800 இந்திய மீனவர்கள் மீது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என PTI செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

5 படகுகளில் வந்த இலங் கைக் கடற்படையினர் தம்மீது தாக்குதல் நடத்தினர் என இந்திய மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

## பொலிஸ்மா அதிபர் பணிப்பிலேயே இரும்புகள் கடத்தல் முறியடிப்பு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களையும் வெட்டியெடுத்து, சட்டவிரோதமாக தென்னிலங்கைக்கு கடத்தப்படுவதாக காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை அதிகாரிகள் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஏற்கனவே முறைப்பாடு செய்திருந்தனர். எனினும் பல்வேறு தரப்புகளில்இருந்து அழுத்தங்கள் பரயோகிக்கப்பட்டதால், கடத்தல் குழுவுக்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுப்பதைக் கைவிட்டிருந்தனர்.

கடந்த மூன்றாம் திகதி இது குறித்து பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோனிடம் , காங்கேசன் துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் முறைப்பாடு செய்தார். இதனைத் தொடர்ந்து சிமெந்துத் தொழிற்சாலையில் இருந்து இரும்பு கடத்தும் கும்பலை மடக்கிப் பிடிக்குமாறு யாழ்.மாவட்டப் பொலிஸ் அதிகாரிகளுக்கு அவசர உத்தரவினைப் பிறப்பித்தார்.

இந்த உத்தரவினைத் தொடர்ந்தே காங்கேசன் துறை சிமெந்து தொழிற்சாலை வளாகத்தைப் பொலிஸார் திடீரெனச் சுற்றி வளைத்து, அதிரடி நடவடிக்கையில் இறங்கினர்.இதன்போது வெட்டியெ டுக்கப்பட்டு கடத்துவதற்கு தயாராக இருந்த இரும்புப்பொருள்களை பொலிஸார் மீட்டனர். எனினும் கடத்தல் குழு பொலிஸாரின் கைகளில் சிக்காமல் தப்பவிட்டது.

நீர்கொழும்பைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவரே இந்தக் கடத்தல் குழுவின் பன்னணியில் இருப்பதாகவும், இவர்கள் நீண்டகாலமாக இந்தச் சட்டவிரோத இரும்புக் கடத்தலில் ஈடுபட்டுவருவதாகவும் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

குறித்த கடத்தல் குழுவைக் கைது செய்யும் நடவ்டிக்கையில் பொலிஸார் தீவிரமாக இறங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது. (ங-14)

## அடுத்தவாரம் வருகிறது அமெ. உயர்மட்டக் குழு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டு விவகாரங்களைக் கையாளும் முக்கிய இராஜதந்திரிகள் இருவர் அடங்கிய குழுவொன்றே கொழும்பு வரவுள்ளது.

அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், வெளிவிவகார அமைச்சர் உட்பட கட்சிகளின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் பேச்சு நடத்துவர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் அமெரிக்காவின் அதிருப்தியை குறித்த இராஜதந்திரிகள் நேரில் வெளியிடவுள்ளனர் என கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. நல்லிணக்க ஆணைக்குழு தனது அறிக்கையில் பரிந்துரை செய்துள்ள சிபாரிசுகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்திக் கூறவுள்ளனர்.அரசியல் தீர்வுப் பேச்சு தொடர்பிலும் ஜனாதிபதியுடன் அந்த இராஜ தந்திரிகள் விரிவாகக் கலந்துரையாட வுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின்போதும் தீர்வுத்திட்ட விவகாரம் தொடர்பில் பேசவுள்ள அமெரிக்க இராஜதந்திரிகள், கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும் கேட்டறிவர். (உ-சி)

## முஸ்லிம்களின் அபிலாஷைகளையும் உள்ளடக்கியே தீர்வு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்து கொண்டனர்.நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு-கிழக்கு மாகாணம் முஸ்லிம் மக்களுக்கும் சொந்தமானது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை மறந்து விடக்கூடாது.

வடக்கு-கிழக்கு இணைப்பை நாம் அடைவதற்கு முஸ்லிம் மக்களுடைய ஆதரவு எமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது.முஸ்லிம்களுடைய அரசியல் அபிலாஷைகளை நாம் பலமுறை பல காலங்களில் பேசியுள்ளதுடன் அதற்குச் சில அடையாளங்களுமிருக்கின்றன.

இந்த வகையில் அவர்களையும் எங்கள் பக்கத்தில் வைத்துக் கொண்டு அவர்களுடைய அரசியல் அபிலாஷைகளுக்கும் தீர்வைக் கொண்டு வரக்கூடியதாக எமது அரசியல் தீர்வு அமையுமென்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றோம்.

அப்பொழுது வடக்க-கிழக்க மாகாணத்தின் இணைப்பு சாத்தியமாகுமென்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

சிங்களவர்களாலும், பௌத்தமத கலாசார அமைச்சாலும், இராணுவத்தாலும் எங்கள் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது போல், முஸ்லிம் மக்களின் நிலங்களும், குடியிருப்புக்களும் அரசின் கையாட்களால், பௌத்த பிக்குகளால் பறிக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கும் நெருக்கடிகள் கொடுக்கப்ப டு கின்றன.

இந்த விடயத்தில் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் எதிர் நோக்கும் பிரச்சினை ஒன்றுதான் என்பதை முஸ்லிம்கள் தெளிவாக உணர்ந்துள்ளனர்.

எனவே இணைந்த வடகிழக்கு மாகாணத்தை அடைவதற்கு அவர்களையும் அரவணைத்துக்கொண்டு செல்ல வேண்டியது எமது கடமை - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A/L 2014 — NEC

கல்வியியலிலே காவியம் படைப்போம்...

**NEC**

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**வர்த்தகப்பிரிவு**

| | |
|---|---|
| கணக்கீடு | : K.பாலகஜன் |
| பொருளியல் | : NB.கஜீதரன் |
| வணிகக்கல்வி | : S.யசோதரன் |
| | S.K.பாலசுபேஸ் |

**ஆரம்பம் : ஜனவரி 07 காலை 8.00**

**கலைப்பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | : A.K கீர்த்திராஜன் | அளவையியல் | : P. கமல் |
| இந்து நாகரீகம் | : T.ஸ்ரீஸ் | பொருளியல் | : NB. கஜீதரன் |
| வரலாறு | : RR.ஆனந்தன் | அரசியல் | : A.K றொபின்சன் |
| புவியியல் | : S.R.பாலா | நாட.அரங்கியல் | : S.R. ரமேஸ் |
| இலகு கணிதம் | : S.சயந்தன் | இந்து சமயம் | : T. ஸ்ரீஸ் |
| விவசாயம் | : K.கிரி | ஊடகவியல் | : R. இராஜேஸ்வரன் |
| கிறிஸ்தவம் | : R.கஸ்ரோன் | சித்திரம் | : R.R.ராஜ் |
| சங்கீதம் | : T.ராகினி | மனைப் பொருளியல் | : S.தர்சி |
| ICT | : R.இராஜேஸ்வரன் | English | : S.Jaisan |

## புதிய பொருளியல் கல்லூரி

மணிக்கூட்டு வீதி, யாழ் நகர். (பெருமாள் கோவில் அருகாமை)

**ஆரம்பம் : ஜனவரி 07 காலை 8.00**

**A/L 2014**

**வர்த்தகப்பிரிவு**

| | |
|---|---|
| கணக்கீடு | : K.பாலகஜன் |
| பொருளியல் | : NB.கஜீதரன் |
| வணிகக்கல்வி | : S.K.பாலசுபேஸ் |
| | S.யசோதரன் |

**கலைப்பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | : A.K கீர்த்திராஜன் | அளவையியல் | : P. கமல் |
| இந்து நாகரீகம் | : T.ஸ்ரீஸ் | பொருளியல் | : NB. கஜீதரன் |
| வரலாறு | : RR.ஆனந்தன் | அரசியல் | : A.K றொபின்சன் |
| புவியியல் | : S.R.பாலா | நாட.அரங்கியல் | : S.R. ரமேஸ் |
| இலகு கணிதம் | : S.சயந்தன் | இந்து சமயம் | : T. ஸ்ரீஸ் |
| விவசாயம் | : K.கிரி | ஊடகவியல் | : R. இராஜேஸ்வரன் |
| கிறிஸ்தவம் | : R.கஸ்ரோன் | சித்திரம் | : R.R.ராஜ் |
| சங்கீதம் | : T.ராகினி | மனைப் பொருளியல் | : S.தர்சி |
| ICT | : R.இராஜேஸ்வரன் | English | : S.Jaisan |

---

எல்லாப் பாடங்களுக்குமான

துரித மீட்டல் வினாவிடை வகுப்பு

**G.A.Q**

பேராதனைப் பல்கலைக்கழகம்

ஆரம்பம்: 07.01.2012 சனி

**BEACON** யாழ்.நகர் (வெலிங்டன் சந்தியடி)

---

**DCM** யாழ்.நகர்

**BANKING**

கணக்கீடு

P.பகீரதன் B.BA (Fm. Spl)

**CBF** Sat, Sun 3 - 6 Pm

ஆரம்பம் - 7.1.2012

சனிக்கிழமை 3.00 P.M

---

## DMI நிர்வாகம் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

நாளை ஆரம்பமாகவிருக்கும் A/L 2014 கலை வர்த்தகப் பிரிவில் இட நெருக்கடி ஏற்படுமென DMI நிர்வாகம் கருதுவதால் 20 நிமிடங்கள் முன்னதாக சமுகமளிக்குமாறு கேட்கப்படுகிறீர்கள்

நிர்வாகம்

DMI

(C-7293)

---

## A/L 2014

கலை வர்த்தகம்

| | |
|---|---|
| தமிழ் | சிவா |
| | குகன் |
| இ.நா | ஜெயக்குமார் |
| அளவை | துரை |
| அரசி | செந்தூரன் |
| புவியி | கரன் |
| வரலா | தாஸ் |
| கிறிஸ் | மல்லிகா |
| ம.பொ | மஜீதன் |
| விவசா | விஷ்னு |
| நாட.அ | சுகந்தன் |
| இ.கணி | கண்ணன் |

Acc: தவா

Eco: சண்

B.st: பிரதீபன்

ஆரம்பம்

தை 07.08am

DAY Class

ஆரம்பமாகிவிட்டது

யூனிவேர்சல்

கந்தர்மடம்.

---

(C/7166)(5)

**A/L - 2014**

(கலை வர்த்தகப் பிரிவுகள்)

நாளை ஆரம்பம்

காலை 9.00 மணி

DMI Jaffna

---

## ACADEMY OF LOGIC

பலாலி வீதி,

(இலுப்பையடிச் சந்தி.)

ஆரம்பம்: ஜனவரி - 07

A/L 2014

கலை-வர்த்தகம் காலை 8.00 மணி.

| | |
|---|---|
| அரசியல் -M.அசோக் | கிறிஸ்தவம்-தேவா |
| புவியியல்-P.V.S.தினேஸ் | பொருளியல்-M.C.சுதாகரன் |
| தமிழ்-யசிந்தன் | கணக்கீடு-திருக்குமரன் |
| நாடகம்-ரமேஸ் | வணிகக்கல்வி-சிவராசா |
| இ.நாகரிகம்-ரமணன் | அளவையியல்-என்.பிரதீபன் |

A/L DAY CLASS

காலை 9.00 மணி

---

## புதியதோர் உலகம் செய்வோம் – யாழ் நகரில் இரு இடங்களில்

# DCM

1. வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில்
2. வெலிங்டன் சந்திக்கு அருகில்

ஆரம்பம் - நாளை காலை - 8.00

## A/L 2014

பெற்றோர்களே !

**2012 ம் ஆண்டு**

உங்கள் பிள்ளைகளை எங்களிடம் தாருங்கள்
நீங்களும் எங்களோடு இணைந்திருங்கள்

**2014 ம் ஆண்டு**

உங்கள் பிள்ளைகளை கல்வியில் மட்டுமன்றி ஒழுக்கத்திலும்
சிறந்தவராக உங்களிடம் திருப்பித் தருகின்றோம்

**2018 ம் ஆண்டு**

உங்கள் பிள்ளைகள் பட்டதாரியாக - இந்த சமூகத்தினால்
மதிக்கப்படுகின்ற ஒருவராக உங்களோடு இருப்பார்கள

நிர்வாக இயக்குநர் S.வரதராஜன் B.A(Hons)

(முன்னைநாள் பொருளியற்துறை விரிவுரையாளர் பேராதனைப் பல்கலைக்கழகம்)

| | |
|---|---|
| பொருளியல் | வரதராஜன் |
| கணக்கீடு | பகீரதன் |
| வணிகக்கல்வி | முரளி |
| தமிழ் | சந்திரலிங்கம் |
| புவியியல் | குமரன் |
| அரசியல் | சுகாஷ் |
| இ.நாகரீகம் | ஸ்ரீஸ் |
| வரலாறு | ஆனந்தன் |
| நா.அரங்கியல் | ரமேஸ் |
| அளவையியல் | துரை |

மத்திய பஸ்நிலையத்திலிருந்து மிக அருகில் உள்ள கல்வி நிறுவனம் எமது கல்வி நிறுவனம் மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.